விலை ரூபா: 20.00

# தமிழ் நாதம்

Thamil Naatham

இராகம் 01 | தாளம் 56 | வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 20 புதன்கிழமை (05.09.2012) | பக்கங்கள்: பதினாறு + 8

கல்வி ஒளி இலவச இணைப்பிதழ் உள்ளே...

# திருச்சியில் தாக்கப்பட்ட 187 யாத்திரிகர்கள் விசேட விமானம் மூலம் இலங்கை திரும்பினர்

திருச்சியில் தாக்குதலுக்குள்ளான இலங்கை யாத்திரிகர்கள் நேற்று இரவு 11.40க்கு விசேட விமானம் மூலம் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர். திருச்சியிலிருந்து புறப்பட்ட எம்.ஜே 302 ரக மிஹின் லங்கா விமானம் நேற்று இரவு கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தது. இந்த விமானத்திலேயே இலங்கையர் 187 பேரும் அழைத்து வரப்பட்டனர்.

இலங்கையிலிருந்து திருச்சிக்கு விமானம் மூலம் சென்ற இலங்கையர்கள் பூண்டியிலுள்ள மாதா கோயிலுக்குச் சென்றனர். தஞ்சை மாதா ஆலயத்துக்கு வந்த இலங்கையர்களை வெளியேற்றக்கோரி பல்வேறு அமைப்பினர் போராட்டம் நடத்தினார்கள். தஞ்சை அருகே உள்ள பூண்டியில் புகழ்பெற்ற மாதா ஆலயம் உள்ளது. இந்த ஆலயத்திற்கு 187 பேர் திங்கட்கிழமை வந்தனர்.

பூண்டி மாதா ஆலயத்தில் உள்ள விடுதிகளில் தங்கி இருந்தனர். பூண்டி மாதா ஆலயத்தில் நடைபெற்று வரும் அன்னை மரியாள் பிறப்புப் பெருவிழாவில் பங்கேற்க இவர்கள் சென்றிருந்தனர். இந்தத் தகவல்கள் தமிழகத் தமிழ் அமைப்புகளுக்கு கிடைத்ததை அடுத்து இலங்கையர்களை உடனே வெளியேற்ற வேண்டும். இல்லையென்றால்

02



## இலங்கையிலிருந்து வருபவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுமாம்

### இந்திய வெளிவிவகார அமைச்சு உறுதிமொழி

இந்தியா செல்லும் இலங்கை யாத்திரிகர்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுமென இந்திய வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கை யாத்திரிகர்கள், சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் விதத்தில் தமிழ்நாடு மாநில அரசுடனும் பேச்சு நடத்தப்படும் எனவும் இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு திருச்சியில் மாதா கோயிலுக்குச் சென்ற யாத்திரிகர்கள், சில குழுவினரால் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டதையடுத்து இலங்கை அரசு அவர்களை பாதுகாப்பாக இலங்கைக்கு அழைத்துவர ஏற்பாடு செய்ததுடன் மறுஅறிவித்தல்வரை தமிழகம் செல்ல

02

## திருச்சித் தாக்குதல்: அச்சப்பட வேண்டாம் என்கிறார் எம் நாட்டு அமைச்சர்

திருச்சியில் இலங்கை யாத்திரிகர்கள் தாக்கப்பட்டமை தொடர்பாக எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை என பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமால் பெரேரா தெரிவித்தார்.

தமிழகத்தில் சில குழுக்கள் இவ்வாறு செயற்பட்டு வருகின்றன. இதன்மூலம் ஆத்திரமூட்டும் செயற்பாடுகளில் இவை செயற்பட்டு வருகின்றன. இவர்களது செயற்பாடுகளுக்கு பின்னணியில் புலம்பெயர் அமைப்புகள் சில செயற்பட்டு வருவதாகவும் பிரதி அமைச்சர் நியோமால் பெரேரா தெரிவித்தார்.

திருச்சியின் மத வழிபாட்டுக்காக சென்ற இலங்கை யாத்திரிகர்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தமை மற்றும் தாக்குதல் நடத்தியமை தொடர்பாக மத்திய அரசுடன் உடனடியாக பேசவுள்ளதாக பிரதி அமைச்சர் நியோமால் பெரேரா தெரிவித்தார்.

**பயண எச்சரிக்கை**

இதேவேளை இலங்கையர் எவரும் மறு அறிவித்தல் வரும்வரை தமிழ் நாட்டுக்கு செல்ல வேண்டாம் என வெளிநாட்டு அமைச்சும் அறிவித்துள்ளது.

அண்மைக் காலமாக தமிழ்நாட்டுக்கு செல்லும் இலங்கையர்கள் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாவதாக கூறும் வெளிநாட்டமைச்சு, இலங்கையர் தங்களது பாதுகாப்பை கருத்தில்

02

## வடக்கில் இராணுவம் குறைப்பு; பொலிஸ் பணிகள் அதிகரிப்பு

### பிரதிப் பொலிஸ் மா அதிபர்

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் வடக்கில் இராணுவத்தினரின் செயற்பாடுகள் குறைக்கப்பட்டு விட்டன. பொலிஸாரின் செயற்பாடுகள் முடுக்கி விடப்பட்டுள்ளன என்று யாழ். சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் எரிக்பெரேரா தெரிவித்தார்.

இலங்கையில் பொலிஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டு 146 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற வைபவத்தின் போதே எரிக்பெரேரா இதனைத் தெரிவித்தார்.

கடந்த 30வருட காலமாக இராணுவத்தினரே செயற்பட்டு வந்தனர். இதனால் பொலிஸாரின் செயற்பாடுகளில் பின்னடைவு ஏற்பட்டிருந்தது.

நாட்டின் ஏனைய மாவட்டங்களை விட தற்போது யாழ். மாவட்டத்தில் குற்றச்

02

## இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்களைத் தாக்குகின்றனர் என்பது பொய்

### அம்பலப்படுத்துகிறார் தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன்

இலங்கைக் கடற்படையினர் தமிழ்நாட்டு மீனவர்களை தொடர்ந்தும் தாக்கி வருகிறார்கள் என்று தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டில் எவ்வித உண்மையும் இருப்பதாக தெரியவில்லை என்று தமிழ்நாட்டின் காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஞானதேசிகன் தெரிவித்தார். கூடலூரில் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையிலே அவர் இவ்வாறு சொன்னார். தமிழக மீனவர்களின் பிரச்சினை ஏதோ அடிக்கடி நடைபெறும் ஒன்று போல பெரிப்பித்துக் காட்டப்படுகிறது. ஒரு தடவையில் சுமார் 500 வள்ளங்கள் கிட்டத்தட்ட நாலாயிரம் தமிழக மீனவர்களுடன்

02

## இறந்த சிசுவை பிரசவித்த தாய் தலைமறைவு

பிறந்து ஒருநாளான இறந்த சிசுவை யாழ்.போதனா வைத்திய சாலை மகப்பேற்று விடுதியில் விட்டு விட்டு பெற்ற தாய் தலைமறைவாகியுள்ளார்.

பிரசவத்திற்காக யாழ். போதனா வைத்திய

02

## முப்படைகளின் கூட்டுப் பயிற்சி இம்முறை கிழக்கில்!

முப்படைகளின் கூட்டுப் பயிற்சி எதிர்வரும் 9ம் திகதி முதல் 25ம் திகதி வரை தொப்பிகல, வாகரை பிரதேசத்தில் இடம்பெறவுள்ளது. மூன்றாவது முறையாக இலங்கையில் நடைபெறவுள்ள இந்த கூட்டுப் பயிற்சிகளில் இராணுவம், கடற்படை மற்றும் விமானப் படைகளைச் சேர்ந்த 2200 முப்படை அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளதாக இராணுவத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ் தெரிவித்தார். இலங்கையின் முப்படையினருக்கு மேலதிகமாக பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் மாலைதீவு ஆகிய மூன்று நாடுகளைச் சேர்ந்த இராணுவக்

02

## 400 கோடி ரூபா செலவில் சுன்னாகத்தில் அனல் மின் நிலையம்

யாழ்.மாவட்டத்திற்கு நூறு வீதம் மின்சார வசதி அளிக்கும் வகையில் யாழ்.சுன்னாகம் பிரதேசத்தில் 24 மெகா வோட் மின் உற்பத்தி செய்யும் அனல் மின் நிலையமொன்றை நிர்மாணிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சு கூறியது. இதற்காக, மின்சார சபை 4000 மில்லியன் ரூபா முதலீடு செய்ய உள்ளது.

கிளிநொச்சி, சுன்னாகம் அதிசக்தி வாய்ந்த மின் பரிவர்த்தனை தொகுதி பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் கிளிநொச்சி அடங்கலான ஏனைய பிரதேசங்களுக்கு தொடர்ச்சியான மின் விநியோகத்தை வழங்கும்

02

# விளையாட்டு வீரர்களை திருப்பி அனுப்புவது முறையல்ல: கருணாநிதி

தமிழகத்துக்கு விளையாட வந்த இலங்கை கால்பந்தாட்ட அணியி- னரை திருப்பி அனுப்பியமை சரி யான முடிவல்ல என்று தமிழகத் தின் முன்னாள் முதலமைச்சரும் திமுக தலைவருமான கருணா நிதி கூறியுள்ளார்.

திராவிட முன்னேற்ற கழக தலை மையகமான அண்ணா அறிவால யத்தில் நேற்று ஊடகவியலாள ரிடம் கருணாநிதி பேசும்போதே மேற்படி கூறியுள்ளார்.

டெசோ மாநாட்டில் நிறைவேற் றப்பட்ட அனைத்து தீர்மானங்க ளும் விரைவில் ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பி வைக்கப்படும். திமுக பொருளாளர் மு.க.ஸ்டா லின் அதனைக் கொண்டு செல் வார்.

இதேவேளை, இலங்கை இரா ணுவ வீரர்களுக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கக்கூடாது என்பது எமது விருப்பம். எனவே அவர் களை திருப்பி அனுப்ப வேண் டும் என்பதுதான் திமுகவின் கோரிக் கையும். இதற்காக நிறையவே வாதாடி வருகிறோம்.

ஆனால், இலங்கை விளை யாட்டு வீரர்கள் இங்கு வந்து விளையாடுவதும், இந்திய வீரர் கள் அங்கு சென்று விளை யாடுவதும் வழக்கமான ஒன்று. எனவே, விளையாட்டு வீரர்களை திருப்பி அனுப்புவது சரியான முடிவல்ல என்று கருணாநிதி மேலும் தெரிவித்தார்.

# உலக மனநல தின போட்டிகள்

மருதனார்மடம்

உலக மனநல தினத்தை முன் னிட்டு அகில இலங்கைப் பாட சாலைகளுக்கிடையிலான சித் திரம், கட்டுரை, சுலோகங்கள் அமைத்தல் சம்பந்தமான போட்டி களை தேசிய மனநல நிறுவனம் நடாத்தவுள்ளது.

தற்காலத்தில் மன அழுத்தம், மன நலம் சார்ந்த பிரச்சினைகள் இலங்கையில் ஒரு சவாலாகக் காணப்படுவதால் எதிர்காலத்தில் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மனநோயாளிகளைப் பாது காக்கும் வகையில், பாதிக்கப் பட்ட குடும்ப உறுப்பினரை எப் படிப் பாதுகாப்பது என்பதை கருப் பொருளாக கொண்டு இப்போட்டி கள் அமையவிருக்கின்றன.

இப்போட்டிகள் தரம் 5 முதல் 7 வரையிலான மாணவர்களுக் காக கனிஷ்ட பிரிவு, தரம் 8 முதல் 10 வரையிலான மாணவர் களுக்காக சிரேஷ்ட பிரிவு - 1, தரம் 11 முதல் 13 வரையான மாணவர்களுக்காக சிரேஷ்ட பிரிவு 2 என மூன்று பிரிவாக நடைபெறும்.

சித்திரப்போட்டி 14”ஒ18” தாளில் எந்த ஒரு வர்ணத்திலும் அமைய லாம். கட்டுரை 1000 முதல் 1200 வரையிலான சொற்களுக்குள் அமைதல் வேண்டும். தமிழ், சிங்களம், ஆங்கில மொழிகளில் ஏதாவது ஒன்றில் எழுதலாம்.

சுலோகப் போட்டியில் கவர்ச்சி மிக்க சொற்றொடர் கொண்ட சுலோ கங்கள் உருவாக்கப்பட வேண்டும். 15 சொற்களுக்கு இவை மேற்பட லாகாது. மும் மொழிகளிலும் அமையலாம்.

மேற்படி விடயங்கள் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப் பட்டு இம்மாதம் 10ஆம் திகதிக்கு முன் உளமருத்துவ சமூகப்பணி பிரிவு (தொழில் வழி சிகிச்சை), தேசிய மனநல நிறுவனம், அங் கொடை எனும் முகவரிக்கு அனுப் பிவைத்தல் வேண்டும்.

வெற்றிபெறுபவர்களது ஆக் கங்கள் பொதுமக்களுக்கு காட் சிப்படுத்தப்படுவதுடன் பெறுமதி யான பரிசும் சான்றிதழ்களும் வழங்கப்பட இருக்கின்றன என தேசிய மனநல நிறுவன பணிப் பாளர் டாக்டர் ஜெயன்மென்டிஸ் தெரிவித்துள்ளார்.

அக்டோபர் மாதம் 10ஆம் திகதி உலக மனநல தினம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (01)

# பொதுமக்களின் காணிகளை அவர்களிடமே ஒப்படைப்போம்

## கேணல் விஜயசூரிய

தென்மராட்சிப் பிரதேசத்தில் படை யினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகள் விரைவில் உரியவர் களிடம் கையளிக்கப்படும் என குறித்த பிரதேசத்தின் 523 ஆம் படையணியின் கட்டளைத் தள பதி கேணல் விஜயசூரிய உறு தி யளித்தார்.

தென்மராட்சிப் பிரதேசத்தின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் (03.09. 2012) திங்கட்கிழமை பிரதேச செய லக மாநாட்டு மண்டபத்தில் நடை பெற்றது.

இதில், தென்மராட்சிப் பிரதே சத்தில் பொதுமக்களிற்குச் சொந்த மான காணிகள் மற்றும் பாடசா லைகளில் இராணுவத்தினர் முகாம் களை அமைந்துள்ளமை தொடர் பாக பொதுமக்களால் எழுப்பப் பட்ட கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட் டார்.

பொதுமக்களின் காணிகளைச் சுவீகரிக்கும் திட்டம் படையின ருக்கு இல்லை எனக் குறிப்பிட்ட அவர், தனியார் காணிகளை கையளிப்பதற்கு இந்தப் பிரதே சத்திலுள்ள அரச காணிகளை படையினருக்கு வழங்குமாறு அரசாங் கத்திடம் கோரிக்கை விடுத்துள்ள தாகவும், அரச காணிகள் தமக்கு கிடைத்தவுடன் தனியாருக்குச் சொந் தமானகாணிகள் யாவும் அவர்க ளிடம் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதன் ஆரம்ப கட்டமாக படை யினரின் பாவனையிலுள்ள மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலைக் குரிய காணியிலிருந்து செப்டெம்பர் இறுதிக் கிடையில் பாடசாலை நிர் வாகத்தி னரிடம் கையளிக்கப்படும் என்றார்.

# இரணியன் செல்வன் புராண இசை நாடகம் நாளை மேடையேறும்

வரலாற்றுப்புகழ் மிக்க பொன் னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான வருடாந்த மகோற்ச வத்தின் 16 ம் திருவிழாவாகிய வேட்டைத்திருவிழாவை முன்னிட்டு நாளை 6 ஆம் திகதி வியாழக் கிழமை இரவு 9.00 மணிக்கு ‘இர ணியன் செல்வன்’ எனும் இசை நாடகம் ஆற்றுகை செய்யப்படவுள் ளது. வலிகாமம் மேற்கில் கடந்த 40 வருடங்களாக இயங்கி தொல் புரம் கலாலயா நாடக மன்றத்தி னர் இதனை ஆற்றுகை செய்யவுள்ளனர்.

திரு செல்லையா உதயசந்திர னின் (நவாலியூர் சந்திரன்) நெறி யாழ்கையில் இது ஆற்றுகை செய் யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் கடந்த ஆண்டு “குந்தியின் செல்வன்” இசை நாடகத்தினை தொல்புரம் ‘கலாலயா நாடக மன்றத்தினர் ஆற் றுகை செய்து பலரது பாராட்டுக் களைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

# அலங்கார உற்சவம் நிறைவு

மருதனார்மடம்

கடந்த மாதம் 29ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவரும் அச்செழு மதுரை மீனாட்சி அம் பாள் ஆலய வருடாந்த அலங் கார உற்சவம் நாளை (வியாழக் கிழமை) நிறைவுபெறுகிறது.

நாளை காலை 10.00 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெற்று அன் னதானமும் இடம்பெறவுள்ளது.

மாலை 7.00 மணிக்கு விசேட பூசைகளைத் தொடர்ந்து சம[illegible] சொற்பொழிவும்,

தொடர்ந்து வசந்த மண்டப பூஜை, திருவூஞ்சல் என் பன நடைபெற்று திருவீதியுலா இடம் பெறும்.

நாளைய நிகழ்வின்போது அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் செயலாளர், சைவப்புலவர் சைவ சித்தாந்த கலாநிதி செ. கந்த சத் தியதாசன் சிறப்புச் சொற்பொழி வாற்றுவார். (01)

## திருச்சியில் ...(தொடர்)

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோ மென அறிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து பொலி ஸார் குவிக்கப்பட்டனர். பல்வேறு தமிழர் அமைப்புகளைச் சேர்ந்தவர் கள் பூண்டி பேராலய அறையை முற்றுகையிட்டும், கீழே அமர்ந் தும் கோஷங்களை எழுப்பி ஆர்ப் பாட்டம் செய்தனர். அவர்களிடம் இலங்கையர் வெளியேறி விடுவ தாக கூறப்பட்டதையடுத்து அவர் கள் ஆர்ப்பாட்டத்தை கைவிட்டுக் கலைந்து சென்றனர்.

இந்த சம்பவத்தால் பூண்டி மாதா ஆலயத்தில் பரபரப்பு உருவா னது. நேற்று அதிகாலை 3 மணிக்கு பூண்டி மாதா ஆலயத்தில் பர பரப்பு உருவானது. நேற்று அதி காலை 3 மணிக்கு பூண்டி மாதா ஆலயத்தில் தங்கி இருந்து 187 இலங்கையரும் வான்களில் வெளியே புறப்பட்டு சென்றனர். அவர்களை பத்திரமாக திருச்சி அழைத்துச் சென்று அங்கிருந்து விமானத்தில் இலங்கைக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்திருந்தனர்.

இதேவேளை வேளாங்கண்ணி யில் நடந்த தேவாலயப் பெருவிழா வில் கலந்துகொள்ள இலங்கையில் இருந்து வந்த பக்தர்களுக்கு பல் வேறு தமிழர் அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்தன. இதையடுத்து அவர் களை தேவாலயத்தில் இருந்து வெளியேற்றியதைத் தொடர்ந்து அவர்கள் சுமார் பத்துப் பேருந்து களில் பொலிஸ் பாதுகாப்போடு திருச்சி கொண்டு செல்லப்பட்ட னர்.

## இலங்கை...(தொடர்)

வேண்டாமெனவும் அறிவித்தல் விடுத்துள்ளது. இலங்கை அரசு விடுத்துள்ள பயண எச்சரிக்கை யையடுத்தே இந்திய வெளிவிவ கார அமைச்சு இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கு மிடையே கலை, கலாசார பாரம் பரிய உறவுகள் தொடர்ந்தும் இருந்து வருகிறது. கடந்தாண்டு இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ் தானிகராலயம் சுமார் இரண்டு இலட்சம் பேருக்கு இந்தியாவுக்கு செல்வதற்கான விஸா வழங்கி யுள்ளன. இதேபோல் 2011இல் இந்தியாவிலிருந்து சுமார் 1,75,000 பேர் இலங்கைக்கும் வந்து சென் றுள்ளனர் என்றும் இந்திய வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

## திருச்சித் தாக்குதல்...(தொடர்)

கொண்டு மறு அறிவித்தல் வரும் வரை தமிழ் நாட்டுக்கு செல் வதை தவிர்க்க வேண்டும் என் றும் கேட்டுக்கொண்டுள்ளது.

தமிழ்நாட்டுக்கு சென்ற இலங்கை சுற்றுலா பயணிகள், யாத்திரிகர் கள், விளையாட்டு மற்றும் கலா சார துறை தொடர்பானவர்கள், தொழில் முறை பயிற்சிக்காக வருபவர்கள் என பலதரப்பட்டவர்கள் இது போன்ற அச்சுறுத்தல்களுக்கு ஆளா கியுள்ளனர்.

இந்த விடயத்தில் இலங்கை பயணிகளுக்கான பாதுகாப்பை உறுதி செய்ய அனைத்து ந[illegible] டிக்கைகளையும் எடுக்குமா[illegible] இந்திய மத்திய அரசாங்கத்தை இலங்கை கேட்டிருக்கிறது.

## வடக்கில் இராணுவம்...(தொடர்)

செயல்கள் குறைவடைந்தே செல்கின்றன. தற்போது மக்களுக் கும் பொலிஸாருக்கும் இடையில் நல்ல நட்புறவு நிலவி வருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் கடந்த வரு டம் 3100 பொலிஸார் கடமை யில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் இவ்வாண்டு 2500 பேராக குறைக் கப்பட்டுள்ளனர். எனினும் எதிர்வரும் காலத்தில் குற்றச் செயல்கள் தொடர்ந்தும் குறைக்கப்படும் போது பொலிஸாரின் எண்ணிக்கை யிலும் குறைப்பு ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இறந்த சிசுவை...(தொடர்)

சாலையில் அனுமதிக்கப்பட்ட பெண் ஒருவர் சிசுவைப் பிரசவித்துவிட்டு, அதை இறந்த நிலையில் விட்டு விட்டு தலைமறைவாகி யுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந் துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த தாய் கிளிநொச்சியைச் சேர்ந்தவரெனப் பொய்யான விலா சம் ஒன்றை யாழ்.போதனா வைத் தியசாலை மகப்பேற்று பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாகப் பொலி ஸார் தெரிவித்தனர்.

## இலங்கைக் கடற்படையினர்...(தொடர்)

மீன்பிடிக்கக் கடலுக்குச் செல் கின்றனர் சாதாரணமாக ஒவ் வொரு படகிலும் எட்டுப்பேர் இருப்பார்கள் இந்தளவுக்கு பெருந் தொகை தமிழக மீனவர்கள் கடலில் மீன்பிடித்துக் கொண்டி ருக்கும் போது எவ்வாறு ஒரு சில இலங்கைக் கடற்படையினர் ஒரு வள்ளத்திலுள்ள ஐந்து தமிழக மீனவர்களை தாக்குவார்கள்?

இந்தப் பிரச்சினையை மேலோட்ட மாகப் பார்க்காமல் நாம் ஆழமாக பார்க்க வேண்டும். இந்தப் பிரச் சினைக்கு நிரந்தரத்தீர்வொன்று காண்பதற் காக இராமேஸ்வர மீன வர் மீனவ பிரதிநிதிகள் அடங் கிய குழு வொன்று விரைவில் புதுடில்லி செல்ல விருக்கிறது என்றும் அவர் சொன்னார்.

## முப்படைகளின் கூட்டுப் பயிற்சி...(தொடர்)

குழுக்கள் இந்த கூட்டுப் பயிற் சிகளில் கலந்து கொள்ளும் இந் தியா, பாகிஸ்தான், ரஷ்யா, ஜப் பான், ஈரான் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளின் தூதரகங்க ளின் இலங்கைக்கான பாதுகாப்பு இணைப் பதிகாரிகள் மேற்பார் வையாளர்களாக கலந்து கொள்ள வுள்ளதாக அவர் மேலும் தெரிவித் தார்.

இலங்கையில் இம்முறை நடை பெறவுள்ள முப்படைகளின் கூட் டுப் பயிற்சி தொடர்பாக ஊட கங்களுக்கு விளக்கமளிக்கும் விசேட செய்தியாளர் மாநாடு நேற்று மாலை கொழும்பில் இடம் பெற்றது.

விமானப் படையின் வான் நட வடிக்கைகள் பணிப்பாளர் எயார் வைஸ் மார்ஷல் புலத்சிங்கள, கடற்படையின் கடல் நடவடிக் கைகளுக்கு பொறுப்பான பிரதிப் பணிப்பாளர் கெப்டன் பிரசன்ன மஹவித்தாரன,

இராணுவத்தின் நடவடிக்கை கள் பணிப்பாளர் பிரி கேடியர் ருவன் குலதுங்க, இராணுவத் தின் பயிற்சிப் பணிப்பாளர் பிரி கேடியர் ரெல்ப் நுகேரா, கொமாண்டோ படைப் பிரிவின் விசேட நடவடிக் கைகள் கட்டளை அதிகாரி கேர் ணல் சுஜீவ சென ரத் யாப்பா ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

தரை, கடல் மற்றும் ஆகாய மார்க்கங்களைப் பயன்படுத்தி இந்த கூட்டுப் பயிற்சிகள் முன் னெடுக்கப்படவுள்ளன.

இந்த முப்படைப் பயிற்சிகளுக் குத் தேவையான இராணுவத் தள பாடங்கள், விமானப் படையின் விமானங்கள், ஹெலிகொப்டர்கள் மற்றும் கடற்படையின் விசேட படகுகள், கப்பல்கள் பயன்படுத் தப்படவுள்ளன.

## 400 கோடி...(தொடர்)

வகையில் இந்த அனல் மின் நிலை யம் அமைக்கப்படுகிறது. மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக ரண வக்கவின் ஆலோசனையின் பிர காரம் அமைக்கப்படும் இந்த அனல் மின் நிலையத்தில் மூன்று இயந்திரங்கள் நிர்மாணிக்கப்படும்.

இலங்கையுடன் இணைந்த உள் நாட்டுக் கம்பனியொன்று நிர்மா ணப் பணிகளை மேற்கொள்ள உள்ளது. 4 மாத காலத்தினுள் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய் யப்பட்டு யாழ் தீபகற்பத்திற்கான மின்சார தொகுதியுடன் இணைக் கப்படும் எனவும் அமைச்சு கூறியது.

அனல் மின் நிலையத்திற்கான மூன்று பிரதான உற்பத்தி இயந் திரங்களும் திருகோணமலைத் துறைமுகத்தை வந்தடைந்தன. இங் கிருந்து காங்கேசன்துறை வரை எடுத்துவரப்பட்ட இந்த இயந்தி ரங்கள் நேற்றுச் சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தை வந்தடைந்தன.

இந்த திட்டத்தினூடாக யாழ்ப் பாண இளைஞர் யுவதிகள் 150ற் கும் அதிகமானவர்களுக்கு தொழில் வாய்ப்பு கிடைக்க உள்ளது. ஜனவரி மாதம் முதல் 24 மெகா வோர்ட் மின் உற்பத்தி மேற்கொள் ளப்பட உள்ளது.

## சட்டவிரோத பிரசாரம்:

# பதினைந்து வாகனங்கள் பொலிஸார் வசம்

எதிர்வரும் 8ஆம் திகதி இடம்பெறவுள்ள மாகாணசபைத் தேர்தல் நடவடிக்கைகளின் போது, தேர்தல் சட்டங்களை மீறி பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த 15 வாகனங்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த வாகனங்களை நீதிமன்றத்தில் எடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்துள்ளார்.

இதேவேளை தேர்தல் பிரச்சாரங்களின் போது, தேர்தல் சட்டங்களை மீறிய 50 பேருக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் இன்று நள்ளிரவுடன் நிறைவடைகின்றன.

தேர்தல் நடவடிக்கைகளிற்காக எதிர்வரும் 6ஆம் திகதி முதல் 21,000 பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

# கூட்டமைப்பின் வேட்பாளர் சுரேஸ்குமாருக்குப் பிணை

குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர் சுரேஸ்குமார் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிறேம்சங்கர் முன்னிலையில் சுரேஸ்குமார் இன்று மாலை ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போது, 10 இலட்சம் ரூபா பணப் பிணையிலும் ஆறு பேரின் சரீர பிணையிலும் செல்ல அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுரேஷ்குமாரை தினமும் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட வேண்டும் என மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிறேம்சங்கர் உத்தரவிட்டார்.

நாட்டின் குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தை மீறி, அவுஸ்திரேலியாவிற்கு மீன்பிடி படகுகள் மூலம் திருகோணமலையிலிருந்து சட்டவிரோதமான முறையில் ஆட்களை கடத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கடந்த மாதம் இவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பட்டியலில் கிழக்கு மாகாண சபை தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் சுரேஸ்குமார் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம் சமூகத்தை அரவணைத்தே நாம் என்றும் செயற்படுவோம்

## அநீதி இழைக்கமாட்டோம் என சம்பந்தன் எம்.பி.உறுதி

முஸ்லிம் சமூகத்தினை அரவணைத்து அவர்களின் ஆதரவினைப் பெற்று அவர்களும் திருப்தியடைக்கூடிய வகையில்தான் எங்களுடைய முடிவுகளை நாம் எடுப்போம். முஸ்லிம்களுக்கு மாறாகவோ, எதிராகவோ அல்லது அவர்களைப் பலவீனப்படுத்தும் வகையிலோ நாம் செயற்படமாட்டோம் என தெரிவித்துள்ள சம்பந்தன் எம்.பி, நீதியினைக் கேட்கின்ற நாங்கள் எவருக்கும் அநீதியினை இழைக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

கிழக்கு மகாணசபைத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து துறைநீலாவணை மாணிக்கப் பிள்ளையார் ஆலயம் முன்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

சர்வதேச சமூகத்தின் மேற்பார்வையின் கீழ் தமிழ் மக்களின் முக்கியமான பிரச்சினைகளை கையாள வேண்டிய நிலைமைக்கு இலங்கை அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது. இந்தப் பின்னணியில்தான் தற்போதைய கிழக்கு மாகாணத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது இந்தத் தேர்தல் நடைபெற வேண்டிய அவசியம் இல்லை. ஏறத்தாழ ஒரு வருடம் முன்பாக இந்தத் தேர்தலை நடத்துகின்றார்கள். இதில் ஒரு கபடமான யோசனை இருப்பது குறித்து மக்கள் அறிவீர்கள்.

கிழக்கு மாகாணத் தேர்தலை நடத்துவதன் நோக்கம் குறித்து அரசாங்க அமைச்சர்களே பகிரங்கமாக கூறியிருக்கின்றார்கள். சர்வதேச சமூகத்தின் முயற்சிகளைத் தோற்கடிக்க வேண்டும். கிழக்கு மாகாணத் தேர்தலில் அரசாங்கம் வெற்றி பெற்றால், தமிழ் - முஸ்லிம் மக்கள் அரசாங்கத்தை ஆதரிக்கின்றார்கள். எனவே, சர்வதேச சமூகம் எந்த விதமான அழுத்தங்களையும் அரசாங்கம் மீது பிரயோகிக்கத் தேவையில்லை என்பதை வலியுறுத்த முடியும். கிழக்குத் தேர்தலின் முடிவினை சர்வதேச சமூகம் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கிறது.

தமிழ் பேசும் மக்கள் குறிப்பாக தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் எவ்வாறு வாக்களிக்கவுள்ளனர் என்பதை சர்வதேசம் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறது. தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு போதியதொரு சுயாட்சி தமக்கு வேண்டும் என்கின்ற இலக்கின் அடிப்படையில் வாக்களிக்கப்போகின்றார்களா? இதன் மூலமாக சர்வதேசத்தின் பங்களிப்பு தமக்குத் தேவை என்றும் அது தொடர வேண்டும் என்கிற கருத்தினை முன்வைக்கப் போகிறார்களா? அல்லது என்ன செய்யப் போகிறார்கள் என்பதை சர்வதேச சமூகம் அவதானித்துக் கொண்டிருக்கிறது.

இதற்குப் பதில் அளிக்க வேண்டியது எம் மக்களின் கட

என்றார்.

# இலங்கை நிலவரத்தை நேரில் காண ஐக்கிய நாடுகள் சபை குழு வருகிறது

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையைச் சேர்ந்த அதிகாரிகள் எதிர்வரும் இரண்டு வாரத்திற்குள் இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

இலங்கையின் தற்போதைய நிலவரம் தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதற்கு அவர்கள் இலங்கை வருவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 13ஆம் திகதி இவர்கள் இலங்கை வரக்கூடும் என வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் நவனீதம் பிள்ளையின் ஆலோசனையின் படி அதிகாரிகள் குழு ஒன்று இலங்கைக்கு வருவதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

இந்த வேண்டுகோளை இலங்கை அரசு ஏற்றுக் கொண்டதன் படி ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையைச் சேர்ந்த அதிகாரிகள் இலங்கை வருகின்றனர்.



இவர்கள் இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில் மீள்குடியேற்றம் தொடர்பில், மீள்குடியேற்றப்பட்ட மக்களையும் சந்தித்து பேசவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சம்பளம் குறைவு என்பதால் எவரும் விண்ணப்பிக்கவில்லை

பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு குறைந்த சம்பளம் வழங்கப்படுவதனால் சில பீடங்களின் பேராசிரியர்கள் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் பதவிகளுக்கு யாரும் விண்ணப்பிப்பதில்லையென ரஜரட்ட பல்கலைக்கழக சங்கங்கள் கூறியுள்ளன.

சமூக விஞ்ஞானபீடம் மற்றும் முகாமைத்துவ பீடம் என்பன கல்விசார் வாண்மையாளர்களுக்கான வெற்றிடங்கள் இருப்பதாக வருடத்தில் மூன்றுமுறை விளம்பரம் செய்தபோதும் எவரும் விண்ணப்பிக்கவில்லை என ரஜரட்ட பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம் கூறியுள்ளது.

ரஜரட்ட பல்கலைக்கழத்தின் முகாமைத்துவ பீடத்தில் ஒரேயொரு பேராசிரியர் மட்டும் இருப்பதாகவும் விரிவுரையாளர்கள் போதியளவில் இல்லை எனவும் ரஜரட்ட பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கத்தின் தலைவர் ஆர்.டி. என்.கே. பலிஹேன கூறினார்.

ஒரு விண்ணப்பம்கூட கிடைக்கவில்லை. அதிக தூரம், பயணத்தில் உள்ள சிரமங்கள் என்பனவற்றுடன் சம்பளம் போதாமல் இருப்பதுவும் இதற்கான காரணம் என பலிஹென கூறினார்.

அநேகமான சிரேஷ்ட விரிவுரையாளர்களும் பேராசிரியர்களும் கூடிய வருமானம் கிடைக்கும் ஆலோசனை சேவைகளில் ஈடுபடுகின்றனா என அவர் கூறினார்.

# குளக்கரையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின், களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருமண்வெளி பிரதேசத்தில் உள்ள குளம் ஒன்றின் அருகில் ஆணொருவரின் சடலத்தை பொலிஸார் மீட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 7.00 மணியளவில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இந்த சடலம் மீட்கப்பட்டதாக களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்டவரது சடலம் குறித்த பிரதேசத்தை 'சேர்ந்த சண்முகம் கிருஸ்ணபிள்ளை (50 வயது) என அடையாளங் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# வீட்டு அறையில் 12 வயது சிறுவன் தூக்கிட்டுத் தற்கொலை

மகரகம பிரதேசத்தில் பாடசாலை சிறுவர் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். 13 வயதுடைய சிறுவர் ஒருவரே வீட்டின் அறை ஒன்றில் தூக்கிட்டு இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் தற்போது களுபோவில வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனைகள் இடம்பெறவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# பம்பலப்பிட்டி கடற்கரையிலிருந்து விமானப்படை வீரரின் சடலம் மீட்பு

பம்பலப்பிட்டி கடற்கரைப் பரப்பில் உள்ள கற்பாறைகளுக்கிடையில் இருந்து விமானப்படை அதிகாரி ஒருவரின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

ரத்மலானை விமானப்படைத் தளத்தில் கடமையாற்றி வரும் விமானப்படை வீரர் ஒருவரே உயிரிழந்துள்ளதாக விமானப் படை பேச்சாளர் தெரிவித்தார்.

இவர் கடந்த 2ஆம் திகதி விமானப் படைத்தளத்தில் இருந்து வெளியேறியுள்ளதாகவும் அதன் பின்னர் இவர் வரவில்லை எனவும் விமானப்படைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இன்றைய இராசி பலன் (05.09.2012)

**நந்தன வருடம் ஆவணி திங்கள் 20 ஆம் நாள் புதன்கிழமை**

**நட்சத்திரம்** : அச்சுவினி பிற்பகல் 1.11 வரை அதன் பின் பரணி
**திதி** : பஞ்சமி பின்னரவு 12.41 வரை. அதன் பின் சஷ்டி
**சுபநேரம்** : 4.34 - 6.4 **இராகுகாலம்** : 12.04 - 1.34
(இந்த நேரங்கள் பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்)

**மேடம்** : தடுமாற்றம், குடும்பக் கலகம், யோசனை மிகுதி
**இடபம்** : பொருள் இழப்பு, பிரயாணக் கஷ்டம், வீண் பிரயாசை
**மிதுனம்** : பொருள் வரவு, தொழில் முன்னேற்றம், மன அமைதி
**கடகம்** : பணக்கஷ்டம், முயற்சி தாமதம், முற்கோபம்
**சிங்கம்** : பொருட்சேர்க்கை, தெய்வ தரிசனம், தந்தைவழி உதவி
**கன்னி** : குறைகேட்டல், குடும்பச் சச்சரவு, மருத்துவச் செலவு
**துலாம்** : தொழில் மேன்மை, போசன சுகம், அந்நியர் உதவி
**விருச்சிகம்** : மருத்துவச் செலவு, சத்துரு பயம், பொருள் இழப்பு
**தனுசு** : பொருள் வரவு, நற்காரிய செய்கை, குடும்ப நலம்
**மகரம்** : அமைதியின்மை, வாகனசுகக் குறைவு, தூர இடத்துச் செய்தி
**கும்பம்** : சிறு பிரயாணம், காரிய சித்தி, சகோதர உதவி
**மீனம்** : மன அமைதிக் குறைவு, போசன சுகமின்மை, அலைச்சல்

**- ஜோதிடர் பால.இரத்தினசேகர்**

# மன்னார் மீள்குடியேற்ற கிராமத்தில் தற்காலிக கொட்டில்கள் தீ வைப்பு

மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட மறிச்சுக்கட்டி மரைக்கார் தீவு பிரதேசத்திலுள்ள மீள்குடியேற்ற கிராமத்தில் அமைக்கப்படடிருந்த தற்காலிக கொட்டில்கள் மற்றும் பொதுக் கட்டிடம் என்பனவற்றின் மீது நேற்று முன்தினம் இரவு தீவைப்பு சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இதன் போது 7 தற்காலிக கொட்டில்களும், ஒரு பொது நோக்கு மண்டபமும் தீயில் எரிந துள்ளன. நேற்று முன்தினம் இரவு 9.00 மணியளவில் இக்கிராமத்துக்குள் புகுந்த இனந் தெரியா தவர்களே இந்த அனர்த்தத்தை ஏற்படுத்தியதாக அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் பல கொட்டில்களை அகற்றி வாகனத்தில் ஏற்றிதாகவும், பின்னர் குடிசைகள் சிலவற்றிக்கு தீ வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீ வைப்பு சம்பவம் இடம் பெறறினைதையடுத்து, அப்பிரதேச மக்கள் இரவினை கழிப்பதற்குக் கூட நாதியற்ற நிலையில் இருப்பதாக வயோதிபர் ஒருவர் தெரிவித்தார். தற்போது இக்கிராமதத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக சிலாவத்துறை பொலிசார் தெரிவிக்கின்றனர்.

இந்த சம்பவம் குறித்து கேள்வியுற்றதும், அமைச்சர் றிசாத் பதியுதீன், பாராளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக் ஆகியோர் தமது கண்டனத்தைத் தெரிவித்ததுடன் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மற்றும் கடற்படையினருடனும் தொடர்புகொண்டு நடவடிக்கையினை எடுத்துவருவதாக சொல்லப்படுகிறது.

# புலோலியில் கலாசார மத்திய நிலையம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை புலோலியில் கலாசார அமைச்சின் நிதி உதவியினால் 17.5 மில்லியன் ரூபா செலவில் கலாசார மத்திய நிலையம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கிராம சேவை அலுவலர் எம். கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வஸ்ரர் அலன்ரின் (உதயன்) அடிக்கல்லைச் சம்பிரதாயபூர்வமாக நாட்டி வைத்தார்.

பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன், உதவிப் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம், கிராம அபிவிருத்திச் சங்கத் தலவர் டாக்டர் எஸ். கணேசலிங்கம், ஈ.பி.டி.பி.வடமராட்சி அமைப்பாளர் ஜீ.ஙீரங்கேஸ்வரன் உட்பட பல பிரமுகர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

யுத்த அனர்த்தங்களினால் இடம் பெயர்ந்து பருத்தித்துறை சுப்பரமடமப் பிரதேசத்தில் குடியேறியுள்ள மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர்களுக்கும் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் 1.5 மில்லியன் ரூபா செலவில் கூறுவிலை மீன்சந்தையொன்றை நிர்மாணித்து வழங்கியுள்ளது.

இதற்கான அடிக்கல்லும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வஸ்ரர் அலன்ரினால் நாட்டி வைக்கப்பட்டது. மயிலிட்டித்துறை மீனவர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ்.யோகராஜா தலைமையில் நடைபெற்ற இவ் அடிக்கல் நாட்டும் விழாவிலே கடற்றொழில் பரிசோதகர் எஸ்.சுதர்சன், ஈ.பி.டி.பி.வடமராட்சி அமைப்பாளர் ஐ.ரங்கேஸ்வரன் உட்பட பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

# மேய்ந்து கொண்டிருந்த மாடுகளைக் கடத்த முயன்ற நான்கு பேர் கைது

(தீவகம்)

வேலணை அராலி வெளியில் மேய்ந்து கொண்டிருந்த மாடுகளைப் பிடித்துக் கடத்த முற்பட்ட நான்கு சந்தேக நபர்களை கடந்த இரண்டாம் திகதி ஊர்காவற்றுறைப் பொலிஸார் கைது செய்தனர்.

மோட்டார் சைக்கிளின் உதவியுடன் மாடுகளைக் கலைத்துப் பிடித்து வந்த இவர்களை சரவணைப் பகுதி இளைஞர்கள் ஒன்றிணைந்து பிடித்து பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

ஏற்கனவே மாடுகளைப் பிடித்து கால்களைக் கட்டி பற்றை மறைவில் வைத்திருந்ததைக் கண்டு பிடித்த இளைஞர்கள் கட்டுக்களை அவிழ்த்து மாடுகளை விடுவித்துள்ளனர்.



# அம்பாறை கரையோர தேர்தலைக் கண்காணிக்க விசேட பிரிவு

அம்பாறை மாவட்டத்தில் கரையோரப் பகுதி தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் விசேட பிரிவொன்றை தேர்தல் திணைக்களம் திறந்து வைத்துள்ளது.

இப்பிரிவின் அலுவலகம் அக்கரைப்பற்றுப் பிரதேச செயலகத்தில் செயற்படவுள்ளதாக மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.அச்சுதன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டதை ஒரு தொடர்ந்து அக்கரைப்பற்றி அண்மைக் கால மாக ஏற்பட்டு வரும் வன்முறைச் சம்பவங்களை அறிக்கை செய்து தீர்க்கமான முடிவுக்கு கொண்டு வரும் நோக்குடனே இப் பிரிவு உருவாகக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

# கிளிநொச்சியில் முரளி வெற்றிக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள்

(கிளிநொச்சி)

கிரிக்கெட் சாதனையாளர் முரளி வெற்றிக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் கிளிநொச்சியிலும் மாங் குளத்திலும் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 8,9,10,11 ஆகிய நான்கு தினங்களிலும் ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டிகள் கிளி நொச்சி மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்திலும் பெண்கள் பங்குபெறும் கிரிக்கெட் போட்டிகள் மாங்குளம் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்திலும் இடம்பெறவுள்ளது.

இவ் இரு மைதானங்களும் இ[illegible] கிரிக்கெட் போட்டிகளை முன்னிட்டு இராணுவத்தினரால் சுத்தம் செய்யப்பட்டன.

## கிளிநொச்சி நீதிவானாக வகாப்டீன் நியமனம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நீதிமன்ற நீதிவானாக எம்.ஐ.வகாப்டீன் பதவி ஏற்றுள்ளார். இதுவரை கிளிநொச்சி நீதிமன்ற நீதிவானாக கடமையாற்றி வந்த நீதிவான் பெ.சிவகுமார் யாழ்.நீதிமன்ற நீதிவானாக இடமாற்றம் செய்யப்பட்டு பதவி ஏற்றுக்கொண்டார்.

கடந்த வன்னி யுத்தம் முடிவடைந்து கிளிநொச்சியில் நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டதும் முதல் நீதிவானாக பெ.சிவகுமார் பதவி ஏற்று இரு வருடங்களுக்கு மேலாக கடமையாற்றி வந்தார்.

# புதுக்குடியிருப்பில் சுவர் இடிந்து வீழ்ந்து யுவதி பலி

(ஜெயம்ஜெகன்)

புதுக்குடியிருப்பில் பத்தாம் வட்டாரத்தில் மக்கள் மீள்குடியேறியதைத் தொடர்ந்து மக்கள் தத்தமது காணிகளைத் துப்புரவு செய்து வருகின்றார்கள். பத்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த மரியநாயகம் கமலதர்சினி (வயது 20) தனது வீட்டின் பின்புறத்தில் உள்ள றோஜாச் செடியைப் பார்க்கச் சென்றவேளை, தூர்ந்து போயிருந்த வீட்டின் சுவர் இடிந்து வீழ்ந்ததில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத் தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தநிலையில், சிகிச்சை பலனின்றி கடந்த சனிக்கிழமை இரவு உயிரிழந்தார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, வீட்டின் பின்புறத்தில் உள்ள றோஜாச் செடியைப் பார்க்கச் சென்ற வேளை வீட்டின் சுவர் இடிந்து வீழ்ந்தது. இதைக் கண்ட சகோதரன் “சுவர் விழுகிறது ஓடு” என்று அவலக் குரல் எழுப்பியதைக் கேட்டு ஓட முற்பட்ட வேளை முன்னால் உழவு இயந் திரம் நிறுத்தப்பட்டிருந்தனால் கமலதர்சினியினால் ஓட முடியவில்லை இதனால் ஆறு அடி நீளமுள்ள சுவர் வீழ்ந்ததில் படுகாயமடைந்த நிலையில், புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து முல்லைத்தீவு மாஞ்சோலைக்கு மாற்றப்பட்டனர். பின்னர் இவ் வைத்தியசாலையிலிருந்து மேலதிகச் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பலனின்றி கடந்த சனிக்கிழமை இரவு உயிரிழந்தார்.

# கோப்பாயில் முதியோர் சங்கங்கள்

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக முதியோர் சங்கங்கள் அமைக்கப்படடு வருகின்றன.. முதியோர் நலன்பேணும் செயற்பாடுகளினை மேற்கொள்ளக் கூடிய வகையில் முதியோர் சங்கங்கள் கிராம அலுவலக பிரிவு ரீதியாக அமைக்கப்படுகின்றன.

ஏற்கனவே கோப்பாய் வடக்கு முதியோர் சங்கம் முதியோர் நலத்திட்டங்கள் பலவற்றை மேற்கொண்டு வருகின்றது. தற்போது கிராம அலுவலக பிரிவு ரீதியாக முதியோர் சங்கங்களைச் ஸ்தாபிப்பதில் கிராம அலுவலர்கள் ஈடு பட்டு வருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

## சுன்னாகத்தில் திருத்தப்படும் வீதிகள்

(உடுவில்)

வலிகாமம் தெற்கு சுன்னாகம் பிரதேசசபைப் பிரிவில் ஐந்து வீதிகள் திருத்தம் செய்யப்படவுள்ளன.

தாவடி அரசடி வீதி, உடுவில் பெரிய கிணற்றடி வீதி, மயிலங்காடு மாப்பாணர் வீதி, ஈவினை மத்தாளோடை வீதி மற்றும் கோட்டைகாடு கந்தசாமி கோயில் வீதி என்பனவே புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# திருட்டுக் கோஷ்டிக்கு வாள் வெட்டு

(தீவகம்)

வேலணை கிழக்கு, ஆலம்புல் என்ற இடத்தில் ஆடுகளைத் திருட வீடொன்றுக்குள் புகுந்த கள்வர் கோஷ்டியொன்று வீட்டுரிமையாளரை வாளால் வெட்டியுள்ளது. வீட்டுரிமையாளரும் திருட வந்த நால்வரில் ஒருவரைக் கத்தியால் வெட்டியுள்ளார். வெட்டுக் காயத்துக்கு இலக்கான ஒருவர் ஊர்காவற்றுறை வைத்தியசாலையிலும் மற்றவர் யாழ்.போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

# தற்கொலை செய்தவரின் மகள் கிணற்றில் வீழ்ந்து மரணம்

(கிளிநொச்சி)

கட்டில்லாத கிணற்றில் தண்ணீர் அள்ளிய பதினொரு வயது சிறுமி கிணற்றில் தவறுண்டு வீழ்ந்து மரணமான சம்பவம் கிளிநொச்சி செல்வநகரில் இடம்பெறறுள்ளது.

மரணமானவர் ஞானேஸ்வரன் தனிசியா என்பவராவார். இவரது மரண விசாரணையை கிளிநொச்சி மரண விசாரணை அதிகாரி டாக்டர் கே.திருலோகமூர்த்தி மேற்கொண்டு விபத்து மரணம் என தீர்ப்பு வழங்கினார்.

பிரேத பரிசோதனையை யாழ். சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சிவரூபன் மேற்கொண்டார்.

மரணமான தனிசியாவின் தந்தையான ஞானேஸ்வரன் கடந்த இரு மாதங்களுக்கு முன்பு கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

### இலங்கை அகதிகள் விவகாரம்:

# திருப்பி அனுப்ப கோருவது அகதிகள் சாசனத்துக்கு முரணானது

### அவுஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர்

படகுமூலம் வந்து புகலிடம் கோரும் இலங்கையர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்ப வேண்டுமென அவுஸ்திரேலிய எதிர்க்கட்சியினர் கோரியமை அசாதாரணமானதும் பாசாங்கானதுமான கருத்து என அவுஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர் ஸ்டீபன் ஸ்மித் கூறியுள்ளார்.

படகுமூலம் அவுஸ்திரேலியாவுக்கு வரும் இலங்கையர்கள் அவுஸ்திரேலியாவில் கால்பதிப்பதற்கு முன்னர் திருப்பி அனுப்புவதற்கு இலங்கை அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும் என அவுஸ்திரேலிய எதிர்க்கட்சியின் வெளிவிவகார பேச்சாளர் ஜூலி பிஷப் மற்றும் குடிவரவுத்துறை பேச்சாளர் ஸ்கொட் மொரிஷன் ஆகியோர் கூறியிருந்தனர்.

இது தொடர்பாக அவுஸ்திரேலிய பாதுகாப்புஅமைச்சர் ஸ்டீபன் ஸ்மித் கருத்துத் தெரிவிக்கையில், "முதலாவதாக, இந்த யோசனையானது அகதிகள் சாசனத்தையும் சர்வதேச சட்டத்தையும் மீறுகிறது. இரண்டாவதாக, மலேஷிய ஏற்பாட்டை அங்கீகரிக்க முடியாது. ஏனெனில் அகதிகள் சாசனத்தில் மலேசியா ஒரு தரப்பாக அங்கம் வகிக்கவில்லை.

எனவே இக்கருத்துக்கள் அசாதாரணமானதும் பாசாங்கானதும் என நான் கருது கிறேன்" எனக் கூறினார். அவுஸ்திரேலிய எதிர்க்கட்சியினரின் கருத்துகளை அந்நாட்டு குடிவரவுத்துறை அமைச்சர் கிறிஸ் பிரௌனும் விமர்சித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாட்டுக்கு செல்ல வேண்டாம்! இலங்கையர்களுக்கு எச்சரிக்கை

இலங்கை குடிமக்கள் மறு அறிவித்தல் வரும் வரை தமிழ் நாடடுக்கு செல்ல வேண்டாம் என இலங்கை வெளிநாட்டு அமைச்சு அறிவித்துள்ளது.

சமீபத்தில் தமிழ் நாட்டுக்கு வரும் இலங்கையர்கள் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாவதாக கூறும் இலங்கை வெளிநாட்டமைச்சு, எனவே இலங்கை பிரஜைகள் தங்களது பாதுகாப்பை மனதில் கொண்டு, இனி மறு அறிவித்தல் வரும் வரை தமிழ் நாடுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும் என்று கூறியிருக்கிறது.

தமிழ்நாட்டில் 184 இலங்கையர்கள் பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்துள்ளதாக அவ் அமைச்சு தெரிவித்துள்ளது. இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கு செல்வதில் பிரச்சினை ஒன்றும் இல்லை என்றும் அது கூறியிருக்கிறது.

சமீப காலங்களில் தமிழ் நாட்டுக்கு வந்த இலங்கை சுற்றுலா பயணிகள், யாத்ரிகர்கள், விளையாட்டு மற்றும் கலாசார துறை தொடர்பானவர்கள், தொழில்முறை பயிற்சிக்காக வருபவர்கள் என பல்தரப்பட்டவர்கள் இது போன்ற அச்சுறுத்துலுக்கு ஆளாவதாக அது கூறியிருக்கிறது.

இலங்கை பயணிகளுக்கான பாதுகாப்பை உறுதி செய்ய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு இந்திய அரசாங்கத்தை இலங்கை கேட்டிருக்கிறது.

### யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதியாக பெ.சிவகுமார் நியமனம்

கிளிநொச்சி நீதவானாக கடமையாற்றிய பெ.சிவகுமார் யாழ் நீதவான் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கினங்க நேற்று முன்தினம் திங்கட்கிழமை தனது பதவியை நீதிபதி சிவகுமார் பொறுப்பேற்றுக் கொண்டதாக யாழ். நீதிவான் நீதிமன்ற பதிவாளர் தெரிவித்தார்.

இதுவரை காலமும் யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதியாக இருந்த மா.கணேசராஜா கொழும்பு மாவட்ட நீதிபதியாகவும், கொழும்பிலுள்ள நீதிபதிகள் பயிற்சி கல்லூரியின் விரிவுரையாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.



நாடெங்கும் நிலவும் கடும் வறட்சியான காலநிலை காரணமாக மக்கள் பெறும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். வறட்சி காரணமாக நீர்நிலைகள் வற்றியுள்ளதுடன் தண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. குளங்கள் வற்றியுள்ளதுடன் மரம் செடி கொடிகளும் காய்ந்து வறண்டு போய் உள்ளன. படத்தில் புத்தளம் பகுதியில் உள்ள தென்னந்தோப்பு ஒன்று கடும் வெப்பத்தினால் கருகிப்போயிருப்பதை காணமுடிகிறது.

# ஆறுகால்மடத்தில் வாள்வெட்டு: ஒருவர் பொலிஸாரால் கைது

மனைவியை தகாத வார்த்தையால் பேசிய நபரை வாளால் வெட்டிய கணவனை கைது செய்துள்ளதாக யாழ். பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு தெரிவித்தது.

குறித்த சம்பவம் யாழ். ஆறுகால் மடம் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றுள் ளது.

வாள்வெட்டுக்கு இலக்காகிய குறித்த நபர் கை மற்றும் வயிற்று பகுதியில் காயங்களுக்கு இலக்காகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

வாளால் வெட்டிய குறித்த பெண்ணின் கணவன் யாழ். பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவரிடம் தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் வைத்தியசாலையில் வாள் வெட்டுக் காயங்களுக்கு இலக்கானவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ். பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# முஸ்லிம் காங்கிரஸ் - தேசிய காங்கிரஸ் ஆதரவாளர்களிடையே வன்முறை அதிகரிப்பு

### தேர்தல் கண்காணிப்பாளர்கள்

அக்கரைப்பற்று பிரதேசத்தில் தேர்தல் வன்முறைகள் அதிகரித்துள்ளமையினால் பொலிஸாரின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு தேர்தல் கண்கானிப்பாளர்கள் கோரியுள்ளனர்.

இந்த பிரதேசத்தில் சட்டம் முறையாக அமுல்படுத்தப்படாமையினால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தேசிய காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கு இடையிலான வன்முறைகள் அதிகரிததுள்ளன என தேர்தல் கண்காணிப் பாளர்கள் தெரிவித்தனர்.

இரு கட்சிகளுக்கு இடையிலான மோதலினால் பலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்தது.

நாளுக்கு நாள் அதிகரிக்கும் இந்த நிலைமையினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு தேர்தல் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பவ்ரலின் நிறைவேற்று பணிப்பாளர் ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இது தொடர்பில் பொலிஸ் மா அதிபர் மற்றும் தேர்தல் ஆணையாளருக்கு எழுத்தும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதுடன் கட்சி செயலாளர்கள் கூட்டத்தில் இவ்விவகாரம் எழுப்பப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு எதிராக வழக்கு

### ஸ்ரீல. மு.கா. தாக்கல் செய்தது

அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரேமலால் ரணகலவிற்கு எதிராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கட்சியின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸன் அலி, அக்கரைப்பற்று அமைப்பாளர் ஹனீபா மதனி, கிழக்கு மாகாண சபை வேட்பாளர் எம்.தவம் ஆகியோர் சார்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி செயலாளர் நாயகமும் கல்முனை மாநகர பிரதி முதல்வருமான சிரேஷ்ட சட்டத்தரணி நிசாம் காரியப்பர், இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவில் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்ககோன் மற்றும் கிழக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அமைச்சர் அதாவுல்லாவிற்கு ஆதரவாக, மிகவும் பக்க சார்பாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரணகல செயற்பட்டு வருகின்றார் என்பதை சுட்டிக்காட்டியே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி செயலாளர் நாயகமும் கல்முனை மாநகர பிரதி முதல்வருமான சிரேஷ்ட சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரிவித்தார்.

அவரது பக்க சார்பான நடவடிக்கை காரணமாக அக்கரைப்பற்று பிரதேசத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரசார நடவடிக்கைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வன்முறைகள் தொடர்பில் எந்தவித நடவடிக்கை எடுக்காமல் உள்ளார்.

### சட்டவிரோத மதுபானம்:

# யாழ். மாவட்டத்தில் ரூ.12,37,000 அபராதமாகப் பெறப்பட்டன

மதுபான உள்ளிட்ட போதை பொருட்களை சட்டவிரோதமான முறையில் விற்பனையில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்குகளில் 12 இலட்சத்து 37 ஆயிரம் ரூபா அபராதம் அறவிடப்பட்டுள்ளதாக யாழ். மதுவரி நிலைய பொறுப்பதிகாரி என். கிருபாகரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக சுமார் 404 வழக்குகள் யாழ். மதுவரி நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஜனவரி மாதம் முதல் ஓகஸ்ட் மாதம் வரையான கால பகுதியில் சுமார் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சட்டவிரோத மதுபான விற்பனை, கள்ளு விற்பனை, 21 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு சிகரெட், பீடி விற்பனை, வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட புகைப்பொருட்கள் விற்பனை செய்தவர்களை நீதி மன்றில் ஆஜப்படுத்தப் பட்டனர்.

குறித்த சந்தேக நபர்களுக்கு எதிரான வழக்குகளின் மூலமே சுமார் 12 இலடத்து 37 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழ்நாதம்
Thamil Naatham
செப்டெம்பர் மாதம் 05ஆம் திகதி புதன்கிழமை

## இன்றைய தேவை நிதானம் மட்டுமல்ல, நியாயங்களைப் புரிந்துகொள்ளவும் வேண்டும்

உதைபந்தாட்டப் போட்டியில் ஈடுபடச் சென்னை சென்ற கொழும்பு றோயல் கல்லூரி பழைய மாணவர் அணி, "நாம் தமிழர் இயக்கம்" போன்ற உதிரி அமைப்புக்களின் எதிர்ப்பின் காரணமாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் உத்தரவினையடுத்து இந்த அணி திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது. இதே போன்று திருச்சியிலுள்ள கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரியில் இசை மற்றும் நடன நிகழ்ச்சி நடாத்தச் சென்ற இலங்கை மாணவர்களும் தமிழகத்திலிருந்து விரட்டப்பட் டிருக்கிறார்கள். சீமானின் நாம் தமிழர் இயக்கம், வைகோவின் மறு மலர்ச்சி திராவிடக் கழகம், கி.வீரமணியின் திராவிடக் கழகம், பழ.நெடுமாறனின் தமிழர் தேசிய இயக்கம் ஆகியன தமிழகத்தில் இயங்கும் உதிரிக் கட்சிகளாகும். இந்த உதிரிகளுக்கு இலங்கைவாழ் தமிழ் மக்களின் பிரச்சினைகளைக் கைவிட்டால் கையிலெடுப்பதற்கு வேறெந்தப் பிரச்சினையும் இல்லை. இவர்களைப் போன்றுதான் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கும், முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கும் இலங்கைத் தமிழர் பிரச்சினையைக் கைவிட்டால் வேறு எரிகின்ற பிரச்சினை எதுவும் இல்லை என்பது போலக் கத்திக் கூத்தாடுகிறார்கள்.

இவர்கள் எல்லாருக்கும் பதில் கொடுப்பதுபோல் தமிழகத்தில் இருந்து வெளிவரும் தினசரியான "தினமணி" ஆழமான ஆசிரியர் தலையங்கமொன்றினை நேற்று வெளியிட்டுள்ளது. "இன்றைய தேவை நிதானம், ஆத்திரமும், அவசரமும் அரசியலும் அல்ல" என்று தலைப்பில் இந்த ஆசிரிய தலையங்கம் வெளியிடப்பட்டுள்ளது. ஓரளவுக்கேனும் தமிழகத்தின் பெரிய, சிறிய அரசியல் கட்சிகளுக்கும் தலைவர்களுக்கும் சில உண்மை நிலைமைகளை இந்த ஆசிரியர் தலையங்கும் இடித்துரைக்கின்றது.

இந்திய கால்பந்து அணியினர், இசை நடனக் குழுவினர், கிரிகெட் அணியினர் ஆகியோர் எல்லாம் இலங்கைக்குச் செல்கின்றனர். நிகழ்ச்சிகளிலும், போட்டிகளிலும் ஈடுபடுகின்றனர். ஆனால் இலங்கையிலிருந்து மட்டும் இவ்வாறான அணிகளும் குழுக்களும் தமிழகம் வரும்போது ஏன் குதித்துக் கூத்தாடுகிறீர்கள்? என்று ஆசிரியர் தலையங்கம் கேள்வி எழுப்பியுள்ளது. வெறும் பம்மாத்துக் காட்டும் விளையாட்டுகளில் தமிழக அரசியல்வாதிகள் ஈடுபடுகிறார்கள் என்று மிகச் சரியாகவே இடித்துக் காட்டியிருக்கிறது அந்த ஆசிரியர் தலையங்கம்.

இருந்தும் "முன்பாகிலும் விடுதலைப் புலிகள் என்ற அமைப்பு தமிழர்களுக்காக குரல் கொடுக்கவும், எதிர்த்துப் போராடவும் வலுவாக இருந்தது" என்று குறிப்பிட்டிருப்பது அப்பட்டமான பொய். இலங்கை தமிழரின் ஆயுதப் போராட்ட வரலாற்றில் ஆயிரக் கணக்கான சகோதர இயக்க உறுப்பினர்களை மிருகத் தனமாக கொன்றது இந்த அமைப்பு. சிங்கள இராணுவத்தால் கொல்லப்பட்ட தமிழர்களை விட புலிகளால் கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை அதிகம். மாற்றுக் கருத்துக் கொண்டவர்களை மின்கம் பத்தில் கட்டி சுட்டுக் கொன்றுவிட்டு "துரோகி" என்று பட்டைநாமம் சூட்டியவர்கள் இவர்கள். புலிகளுக்குப் பயந்துதான் பிறந்த தமிழ் மண்ணை விட்டுத் தப்பியோடிச் சிங்களக் கிராமங்களில் தஞ்சம் புகுந்த மாற்றுக் கருத்துக் கொண்ட தமிழர்களின் எண்ணிக்கை ஆயிரமாயிரம்.

"இலங்கைத் தமிழர்களுக்கு இலங்கை இராணுவம் அநீதி இழைக்கிறது", "இலங்கை அரசின் மீதான நமது கோபம் நியாயமானது" என்றெல்லாம் அந்த ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்திய இராணுவமும் இலங்கை இராணுவமும் கௌதம புத்தரோ அல்லது மகாத்மாக்களோ அல்ல. அத்துமீறல் சம்பவங்களில் இந்திய இராணுவமும் ஈடுபட்டிருக்கிறது. இலங்கை இராணுவம் ஈடுபடவில்லை என்று சொல்வதற்கு நாம் தயாரில்லை. கொக்கட்டிச்சோலைப் படுகொலை, மைலந்தனைப் படுகொலை, குமுதினிப் படகு படுகொலை என்று பலவற்றை யாழ்ப்பாணத் தமிழ் மண்ணில் பிறந்த எங்களால் பட்டியலிட்டுக் காட்டமுடியும். இதைப் போன்று அநுராதபுர யாத்திரிகள் படுகொலை, கண்டி தலதாமாளிகைத் தாக்குதல், சிங்கள எல்லைக் கிராமத் தாக்குதல்கள் என்று தமிழ் ஆயுதக் குழுக்கள் நடத்திய அக்கிரமங்களையும் நூற்றுக் கணக்கில் பட்டியலிட முடியும்.

"ஈழத் தமிழர்களின் வாழ்வைக் குலைத்த ராஜபக்ஷவும், அவரது குடும்பத்தினரும், சிங்கள அதிகாரிகளும் பாதுகாப்புடன் தமிழகம் வந்து செல்லலாம் அப்படித்தானே" என்றும் தினமணி ஆசிரியர் கேள்வியெழுப்பியுள்ளார். ஈழத்தமிழர்களின் வாழ்வைக் குலைத்த பெரும் பங்கு தமிழகத் தலைவர்களுக்கும் இந்தியத் தலைவர்களுக்கும் இருக்கிறது.

"இலங்கைவாழ் தமிழர்களின் பிரச்சினைகளுக்கும் தமிழக மீனவர் தாக்கப்படும் பிரச்சினைக்கும் எவ்வாறு தீர்வு காண்பது" என்றும் தினமணி ஆசிரியர் கேள்வியெழுப்பியுள்ளார். இலங்கைத் தமிழர் பிரச்சினையை சரிவரப் புரிந்துகொள்ள முடியாத தமிழக ஊடகவியலாளர்களால் தமிழக மீனவர் தாக்கப்படும் பிரச்சினை பற்றி எப்படி நீதி, நியாயத்துடன் பேசுவார்கள்.

இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டார்கள் என்றால் அது இலங்கைக் கடல் எல்லைக்குள்தான் நடைபெற்றிருக்க முடியும். ஏனென்றால் இலங்கை கடல் எல்லைக்குள் புகுந்து இந்திய மீனவர்கள்தான் இலங்கையின் கடல்வளத்தைச் சூறையாடுகிறார்கள்" என்று இந்தியாவின் மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் எம்.ரவீந்திரன் இரண்டு வாரங்களுக்கு முன்னர்தான் இந்திய நீதிமன்றில் குறிப்பிட்டதை தினமணி ஆசிரியருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி/பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# இன்றைய தேவை நிதானம்; ஆத்திரமும், அவசரமும், அரசியலும் அல்ல!

**(சென்னையிலிருந்து வெளிவரும் தினமணி தினசரியில் நேற்று வெளியான ஆசிரியர் தலையங்கம்)**

இலங்கையைச் சேர்ந்த கால்பந்து விளையாட்டு வீரர்கள் இந்திய சுங்கத் துறை கால்பந்து அணியுடன் நட்பு ரீதியில் விளையாடுவதற்கு அனுமதி தந்த ஜவாஹர்லால் நேரு விளையாட்டு அரங்க அலுவலர் பணியிடை நீக்கம் செய்யப் பட்டுள்ளார்.

இலங்கைத் தமிழர்களுக்கு இலங்கை இராணுவம் அநீதி இழைக்கிறது என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க வழியில்லை.

இலங்கை அரசின் மீதான நமது கோபம் நியாயமானது. ஆனால், இலங்கையைச் சேர்ந்த, கேள்விப்படாத ஒரு கால்பந்து அணி விளையாடக் கூடாது என்று சொல்வதும், அந்த அணியை அனுமதித்த அதிகாரியைப் பணியிடை நீக்கம் செய்வதும் அரசியல் எதிர்வினைகளாக இருக்க முடியுமே தவிர, சரியான இராஜதந்திர நடவடிக்கையாக இருக்க முடியாது.

இலங்கைத் தமிழர் மீது மிக வன்மையான தாக்குதல் நடைபெற்ற நாளில், இலங்கை கிரிக்கெட் அணி இந்திய அணியுடன் விளையாடியது. அவர்களைத் திருப்பி அனுப்பவில்லை. இந்திய அணி இலங்கையில் விளையாடியது. தமிழ்நாட்டைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்கள் இந்த ஆட்டத்தில் பங்கேற்கக்கூடாது என்று நாம் கேட்கவும் இல்லை. இந்திய-இலங்கை அணியின் கிரிக்கெட் விளையாட்டைத் தமிழ்நாட்டிலுள்ள தொலைக்காட்சிச் சேனல்கள் ஒளிபரப்பக்கூடாது



பூண்டி மாதா ஆலய ஆர்ப்பாட்டத்தின் போது எடுக்கப்பட்ட படம்.

என்று தடை விதிக்கவில்லை.

தமிழகத்தைச் சேர்ந்த ஆன்மிகவாதிகள், திரைப்பட நட்சத்திரங்கள் டி.எம். கிருஷ்ணா உள்ளிட்ட கர்நாடக சங்கீதக் கலைஞர்கள் இலங்கைக்குச் சென்று வந்ததை யாரும் தவறாகக் கருதவில்லை. அப்படியிருக்கும்போது, யாருமே கேள்விப்படாத கால்பந்து அணிக்கு மட்டும் ஏன் இத்தகைய எதிர்வினை?

இத்தகைய தேவையற்ற எதிர்வினைகளால் நாம் இலங்கைத் தமிழர்களுக்கும், தமிழக மீனவர்களுக்கும் ஒரு சேரத் துன்பத்தைக் கூட்டிக் கொண்டிருக்கிறோம் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

இலங்கை இராணுவத்தினருக்கு தமிழ்நாட்டில் பயிற்சி அளிக்க வேண்டாம் என்று கேட்கிறோம். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் எங்குமே பயிற்சி அளிக்கக் கூடாது என்கிறோம். இதனால் நாம் பெறும் பயன் என்ன? ஒன்றுமில்லை.

தமிழக மீனவர்களைத் தாக்கத்தான் இந்தப் பயிற்சி பயன்படும் என்று இங்குள்ள சில சிறிய அமைப்புகள் சொல்கின்றன. நாம் வேண்டாம் என்று சொன்னால், இலங்கை இராணுவ வீரர்கள், பெய்ஜிங் போவார்கள்.



பூண்டி மாதா ஆலய முன்றலில் நாம் தமிழர் இயக்கத்தவர்கள். இலங்கை யாத்திரிகர்களை வெளியேற வலியுறுத்தி நடத்திய ஆர்ப்பாட்டம்

இந்தியர்களைத் தாக்க மிகச் சிறப்பான பயிற்சியை சீனா வழங்கும். தமிழர்களை வெறியுடன் இலங்கை இராணுவம் தாக்கும். பரவாயில்லையா? இதுதான் நமது இராஜதந்திரமா?

இந்தியாவில் பயிற்சி அளிக்கக்கூடாது என்று சொல்லிவிட்டு, பிறகு அவர்களுடன் எப்படி பேச்சு நடத்துவது? ராஜீய உறவுகளுக்கு என்ன அர்த்தம்? இலங்கைக் கடற்படை கைது செய்த தமிழக மீனவர்களை மீட்டு வர, விடுவித்து வர வேண்டுமானால் இலங்கையில் உள்ள இந்தியத் தூதர்தான் போய் நின்றாக வேண்டும்.

ஒரு இராணுவப் பயிற்சிக்கான ராஜிய உறவுகளைக் கூட சகித்துக்கொள்ள முடியா விட்டால், இலங்கைவாழ் தமிழர்களின் பிரச்னைக்கும் தமிழக மீனவர்கள் தாக்கப்படும் பிரச்சினைக்கும் எவ்வாறு தீர்வு காண்பது?

இலங்கையுடன் அனைத்து உறவுகளையும் துண்டித்துக் கொள்வது என்பது சாத்தியமே இல்லை. எல்லையில் சுரங்கப் பாதை அமைத்தும், கடல் வழியாக தீவிரவாதிகளை நமது எல்லைக்குள் நுழைத்தும், இணையத்தின் வழியாகப் பீதியையும் கிளப்பும் பாகிஸ்தானிடம் கூட இந்தியா நட்புடன்தான் இருந்தாக வேண்டும்.

அருணாசலப் பிரதேசம் எங்களுக்குத்தான் சொந்தம் என்று சொல்லிக்கொண்டிருக்கும் சீனாவுடன் இந்தியா அடுத்த ஆண்டு கூட்டு இராணுவப் பயிற்சி நடத்தவுள்ளது. ராஜீய உறவுகளைத் தக்க வைக்க இதைச் செய்தாக வேண்டியுள்ளது. அதே நிலைமைதான் இலங்கை அரசுடனான இந்திய அரசின் உறவும். இவை ராஜீய உறவுகள். இதை உணர்வுபூர்வமாகப் பார்ப்பது தவறு.

ராஜபக்ச குடும்பத்தினர் திருப்பதி கோயிலுக்கு வந்தால், அவர்களை அனுமதித்த ஆந்திர அரசு மீது நாம் ஆத்திரப்படவா முடியும்? ராஜபக்ச உறவுகள் இங்கே இராமநாதபுரம் வந்தாலும் பாதுகாப்புடன் தரிசனம் செய்ய அனுமதிப்பதுதானே பண்பாடு. அதுதானே ராஜிய உறவுகளை மேம்படுத்தும் வழிமுறை.

இராணுவப் பயிற்சிக்கு எதிர்ப்பு என்பது ஒருபுறம் இருக்கட்டும். திருச்சி, கலைக்காவிரி கல்லூரியில் நடனத்துக்காக வந்த இலங்கை மாணவர்களைத் திரும்பிப் போ என்று ஓர் அமைப்பு குரல் கொடுக்கிறது. பூண்டி மாதா கோவில் விழாவுக்கு வந்த சிங்களவர்கள் வெளியேற வேண்டும் என்று ஆர்ப்பாட்டம் செய்கிறது.

அப்படியானால் இலங்கைத் தமிழரைத் தவிர வேறு யாரும் இலங்கையிலிருந்து தமிழ் நாட்டுக்கு வரக்கூடாதா? பயிற்சிக்காக இலங்கை மருத்துவர்கள் இங்கே வரக்கூடாது. சிகிச்சைக்காக சிங்களவர் வரக்கூடாது. படிப்புக்காக மாணவர்கள் வரக் கூடாது. விளையாட வரக் கூடாது. சாமி கும்பிட வரக் கூடாது. புத்தகயாவில் சிங்களவர் நுழையத் தடை விதிக்க வேண்டும்.

ஆனால்,ஈழத்தமிழர்களின் வாழ்வைக் குலைத்த ராஜபக்சயும் அவரது குடும்பத்தினரும் சிங்கள அதிகாரிகளும் பாதுகாப்புடன் வந்து செல்லலாம், அப்படித்தானே?

முன்பாகிலும் விடுதலைப் புலிகள் என்ற அமைப்பு தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கவும், எதிர்த்துப் போராடவும் வலுவாக இருந்தது. இப்போது ஒரு வெற்றிடம் நிலவுகிறது.

நாம் திருப்பி அனுப்பினால் அவர்கள் திருப்பி அடிப்பார்கள். அடிவாங்கப் போவது இங்கே ஆர்ப்பாட்டம் நடத்தும் சிறு அமைப்புகளோ அல்லது அரசியல் தலைவர்களோ அல்ல. சாதாரண இலங்கைத் தமிழனும், தமிழக மீனவனும்தான் என்பதை மறந்துவிடக்கூடாது.

சர்வதேச அரசியலில் உணர்ச்சிக்கு இடமில்லை. நிதானமாகச் செயல்பட்டு நமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதுதான் புத்திசாலித்தனம். ராஜபக்சக்குத் தெரிந்திருக்கும் இந்த உண்மை நமக்குத் தெரியாமல் இருப்பது ஏன்?

இன்றைய தேவை, நிதானம். ஆத்திரமும், அவசரமும், அரசியலும் அல்ல!



சமீபத்தில் 'ஆளுமை' வீடியோ பட வெளியீட்டாளர்களான குருநகர் நாட்டுக்கூத்து மன்றத்தினர் 'ஆளுமை' வெற்றிவிழாவையும், புதிய தயாரிப்பிலுள்ள 'வீரியம்' தொடக்க நிகழ்வையும் நடத்தினர். காப்பு விருத்தம் பாடுவதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

- குருநகர் நாட்டுக் கூத்து மன்றம்

## இந்த எம்.பி.க்கு ஒரே இலக்கத் தகட்டுடன் இரண்டு வாகனங்கள்

ஐ.தே.கட்சி எம்.பி. டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன ஒரே இலக்கத் தகடு கொண்ட இரண்டு வாகனங்களை பயன்படுத்துகிறார் என்று கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலத் தினசரி ஒன்று தெரிவித்துள்ளது.

C-3953 என்ற இலக்கத்தைக் கொண்ட சாம்பல் நிற டொயோட்டா பிராடோ வாகனம் ஒன்றை இதே இலக்கத் தகட்டுடன் பயன்படுத்துகின்றார்.

சிவப்பு நிறத்திலான ரொயோட்டா டான்ட் குறூசர் வாகனமொன்றுக்கும் இதே இலக்கத் தகடே பொருத்தப்பட்டிருக்கிறது என்றும் அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

# இலங்கையர்கள் மோசடிகளில் ஈடுபடுவதாக நோர்வே குற்றச்சாட்டு

இலங்கையர்கள் மோசடிகளில் ஈடுபட்டு வருவதாக நோர்வே அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

நோர்வேயில் தொழில் வாய்ப்பு தேடும் இலங்கையர்களுக்கு இது வரையில் வழங்கப்பட்டு வந்த தற்காலிக வதிவிட அனுமதிகளை ரத்து செய்ய அந்நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கை, இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் மோசடியான முறையில் நோர்வேயில் தங்கியிருப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. குறித்த நாடுகளுக்கான நோர்வே தூதரகங்களினால் வழங்கப்பட்ட ஆலோசனைக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

உரிய தகுதிகள் மற்றும் சரியான ஆவணங்களை உடைய சில நாடுகளைச் சேர்ந்தவர்கள் நோர்வேயில் தொழில் வாய்ப்பு பெற்றுக் கொள்வதற்காக தற்காலிக வதிவிட விசாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டின் முதல் ஆறு மாதத்தில் இந்தியா, இலங்கை மற்றும் நேபாளம் ஆகிய நாடு களிலிருந்து சுமார் ஆயிரம் தற் காலிக வதிவிட வீசா விண்ணப் பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இவ் வாறு தற்காலிக வதிவிட வீசா பெற்றுக் கொள்ளும் பலர் போலியான அல்லது மோசடியான முறைகளில் தங்கியிருப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# இலங்கை - இந்தியா இடையிலான பயணிகள் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பம்

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிக்க இந்தியா தயராகி வருகிறது.

இதற்கான கேள்வி மனுகோரல் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இது நிறைவடைந்ததும் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படும் என இந்திய கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் ஜி.கே. வாசன் தெரிவித்துள்ளார்.

கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதன் மூலம் இரண்டு நாடுகளைச் சேர்ந்த மக்களுக்கு சிறப்பான சேவையை வழங்க முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் பயணிகள் கப்பல் போக்குவரத்து இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப் பட்டதுடன் 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அது இடை நிறுத்தப்பட்டமை குறிப்பிடதக்கது.

# ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகள் நிறை வடைந்துள்ளபோதும் அதன் விடைத்தாள்களைத் திருத்துவது தொடர்பில் அரசாங்கம் இதுவரை யில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செய லாளர் திஸ்ஸ அத்தநாயக்கா குற்றஞ் சாட்டியுள்ளார்.

ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மற்றும் ஐ.தே.க. பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கா ஆகியோர் கொழும் பில் கூட்டாக நடத்திய செய்தி யாளர் சந்திப்பிலேயே மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் தவறுகள் நடைபெறுவதால் இலங்கையிலும் அவ்வாறான தவறுகள் இடம்பெறுவது சாதாரணமர்னது எனத் தெரிவிக்குமளவுக்கு கல்வி அமைச்சர் பொறுப்பற்றவராக உள்ளார்.

உரிய முறையில் பிரச்சினைகளைத் தீர்த்து மாணவர்களை சரியாக வழிநடத்தத் தவறும் பட்சத்தில் ஐ.தே.க. மாணவர்களை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட வைத்து ஒரு மாற்றத்தைக் கொண்டுவரத் தவறாது என்றும் திஸ்ஸ அத்தநாயக்கா குறிப்பிட்டார்.

# அமைச்சர் வாசனுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கக் கோருகிறார் சுப்பிரமணியன்சுவாமி

இந்திய மத்திய அமைச்சர் ஜி.கே வாசனுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க அனுமதி தருமாறு ஜனதா கட்சியின் தலைவர் சுப்பிரமணியன் சுவாமி இந்திய பிரதமரிடம் கோரியுள்ளார்.

தமிழகத்தில் பயிற்சி பெறும் இரண்டு இலங்கை இராணுவ வீரர்களை திருப்பியனுப்புமாறு வாசன், இந்திய மத்திய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தமையைக் கொண்டே இந்த கோரிக்கையை சுப்பிரமணியன் சுவாமி இந்தியப் பிரதமரிடம் விடுத்துள்ளார். இலங்கையின் இராணுவ வீரர்கள் இருவர் தமிழகத்தில் பயிற்சி பெறுவது குறித்து தமிழகத்தின் அரசியல் கட்சிகள் தமது எதிர்ப்பை வெளியிட்டன.

இந்த நிலையில் மத்திய துணை அமைச்சர் பல்லம் ராஜு, இலங்கைப் படையினருக்கான பயிற்சிகள் இந்தியாவில் தொடரும் என்று அறிவித்திருந்தார்.

இதனை மீண்டும் தமிழகக் கட்சித் தலைவர்கள் ஆட்சேபித்திருந்தனர். இதனையடுத்து மற்றும் ஒரு துணை அமைச்சரான ஜி. கே. வாசன், இலங்கைப் படையினர் தமிழக பயிற்சிகளில் இருந்து திருப்பியனுப்பப்படுவர் என்று அறிவித்திருந்தார்.

இந்த கருத்தை எதிர்த்துள்ள சுப்பிரமணியம் சுவாமி, அமைச்சர் வாசன் இந்திய மத்திய அரசாங்கத்தின் அமைச்சரவைப் பொறுப்பை முழுமையாக மீறியுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளார். எனவே அவர் மீது சட்டநடவடிக்கை எடுக்க போதுமானளவு சட்டவாக்கங்கள் உள்ளதாகவும் சுப்பிரமணியன் சுவாமி குறிப்பிட்டுள்ளார்.

# இறைச்சிக்காக முதலைகளைப் பிடித்த மீனவர்கள் கைது!

ஹொரவபொத்தானை, சேருவாவியில் இரண்டு முதலைகளைப் பிடித்து இறைச்சிக்காக கொன்ற மீனவர் மூவர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை கெப்பத்திகொல்லேவ நீதிமன்றில் பொலிசார் முன்னிலைப்படுத்தியபோது, தாம் முதலைகளை இறைச்சிக்காக பிடிக்கவில்லை என அவர்கள் தெரிவித்தனர்.

மீனுக்கு வீசிய வலையில் அவை சிக்குண்டதாகவும், அவற்றைக் கரைக்கு எடுத்து வந்தபோது தம்மைப் பொலிசார் கைது செய்தனர் எனவும் தெரிவித்தனர். விசாரணை முடிவில் மீனவர்கள் மூவரும் கெப்பத்திகொலாவ நீதிபதியினால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

# மகாத்மா விளையாட்டுக் கழக இல்ல மெய்வல்லுநர் போட்டி

சண்டிலிப்பாய்

சாவல்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்படும் வருடாந்த இல்ல மெய்வல் லுநர் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வருடாந்தம் மேற்படி விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் இல்ல மெய்வல்லுநர் போட்டியின் முதல் விளையாட்டு விழாவாக உள்ளூர் உதைபந்தாட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்ட போட்டிகள் 4ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆரம்ப நாளில் உள்ளூர் அணிகள் நான்கு மோதவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதுவரை பதிவுகளை மேற் கொள்ளாத விளையாட்டு அணிகள், விளையாட்டு வீரர்கள் உடனடியாக தங்கள் விளையாட்டுக் கழகத்தின் செயலாளரிடம் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## மீண்டும் மரண தண்டனைக்கு சர்வஜன வாக்கெடுப்பு

பாரதூரமான குற்றச் செயல்களுக்கு மீண்டும் மரண தண்டனை வழங்கும் முறையை அமுல் படுத்துவது குறித்து சர்வசன வாக்கெடுப்பென்று நடத்தப்பட வேண்டும்.

இவ்வாறு நீதியமைச்சு, அமைச்சரவைக்கும் சிபாரிசு செய்யவுள்ளது. 1976ஆம் ஆண்டு இலங்கையில் மரண தண்டனை வழங்கும் முறைமை இரத்துச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சுவிஸ் வங்கியின் வாடிக்கையாளர்கள் பற்றி எமக்குத் தெரியாது - மத்திய வங்கி

சுவிட்சர்லாந்து வங்கிகளில் யார் யார் பணம் வைப்புச் செய்துள்ளார்கள் அல்லது கணக்குகளை பேணி வருகின்றார்கள் என்பது தனக்குத் தெரியாது என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

ஏதேனும் முறைப்பாடுகள் செய்யப்பட்டால் மட்டுமே இது குறித்து விசாரணை நடத்த முடியும் என அந்நிய செலாவணிக் கட்டுப்பாட்டுப் பிரிவு பொறுப்பாளர் சீ.எச்.ஓ சந்திரசோம தெரிவித்துள்ளார்.

2002ம் ஆண்டில் இலங்கையர்கள் சுவிஸ் வங்கிகளில் 22.9 மில்லியன் சுவிஸ் பிராங்குகளை வைப்புச் செய்திருந்ததாகவும், 2010ம் ஆண்டில் இந்தத் தொகை 111 மில்லியனாக உயர்வடைந்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

2005ம் ஆண்டில் இலங்கையர்கள் சுவிஸ் வங்கிகளில் வைப்புச் செய்திருந்த மொத்தத் தொகை 177 மில்லியன் சுவிஸ் பிராங்குகள் என அவர் தெரிவித்திருந்தார்.

2004ம் ஆண்டு சுனாமி அனர்த்தம் ஏற்பட்டதன் பின்னர் பாரியளவு வெளிநாட்டுப் பணம் நாட்டுக்குக் கிடைக்கப் பெற்றது.

# சாவல்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழக பொதுக்கூட்டம் நாளை

சண்டிலிப்பாய்

சாவல்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டமானது நாளை 6ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சாவல்கட்டு மகாத்மா சனசமூக நிலையத்தில் விளையாட்டுக்கழகத் தலைவர் தலைமையில் இடம்பெறும்.

இந்தப் பொதுக்கூட்டத்தில் விளையாட்டுக் கழகத்தால் இவ்வருடம் நடாத்தப்படவிருக்கும் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் சம்பந்தமாக ஆராயப்பட உள்ளதால் விளையாட்டுக் கழக உறுப்பினர்கள், விளையாட்டுக் கழக உறுப்பினர்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# வட இலங்கை வ

## வளம் பெற்றுத் தெளி

த.சண்முகசுந்தரம்



வட இலங்கைக்குப் பழம்பெரும் தனிவரலாறு ஒன்று உண்டு. இக்கோட்பாட்டை மகாஜனாக் கல்லூரியை நிறுவிய பாவலர் துரையப்பாபிள்ளை 1907ஆம் ஆண்டிலேயே வலியுறுத்தினார் என்பது இங்கு நினைவு கூரப்படவேண்டியது.

வட இலங்கை வரலாற்றாய்வு நடத்திய முன்னோடிக் கல்விமான்களிடம் கவலை ஒன்று நிலவியது. இலக்கியம் தரும் சான்றுகளாக மகாவமிசம், சூளவமிசம், வையாபாடல், யாழ்ப்பாண வைபவமாலை போன்ற நூல்கள் அமைந்திருந்தன. இலக்கியம் தரும் சான்றுகளை மேலும் வலியுறுத்தி ஐயமின்றி நிலைநாட்ட அகழ்வாராய்ச்சி, பொறிப்பு, பண்டைய மட்பாண்டம், பழைய காசு போன்றவை கிடைக்கவில்லையே என ஆய்வாளர் கவலையுற்றனர். தொல்லியலாய்வில் ஈடுபடும் கல்விமான்கள் யாழ்ப்பாணத்தில் "தடைதாண்டி" பலவற்றைக் கடந்தே ஆகவேண்டும். இத் "தடைதாண்டிகள்" யாவற்றையும் கடந்து தொல்லியலாய்வினை நடத்தியவர் சிலரே. அவரில் ஒருவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர் பொன்னம்பலம் இரகுபதி. இவரின் முயற்சியின் பயனாக யாழ்ப்பாணத்தில் வியத்தகு ஆதிக்குடியிருப்புப் பண்பாடு ஒன்று வெளிக்கொணரப்பட்டது. "சான்றில்லை, ஆதாரம் இல்லை, துணைச்சான்றில்லை, பக்கச்சான்றில்லை"? எனக் கவலையுற்றிருந்த ஆய்வாளர்களுக்கு ஆனைக்கோட்டையிலும் பிற இடங்களிலும் பெற்ற புதிய சான்றுகள் பெருவிருந்தாக அமையும் என்பது உறுதி.

பேராசிரியர் கலையருவி க.கணபதிப்பிள்ளை யாழ்ப்பாண வரலாற்றை நுணுகி ஆராய்ந்தவர். தொடர்ச்சியான யாழ்ப்பாண வரலாற்றை, பல்கலக்கழக மட்டத்தில் முதன் முதல் எழுதிய பெருமை இவரைச் சாரும். பின்வந்த யாழ்ப்பாண வரலாற்று நூல்களுக்கு முன்னோடியாக இந்த ஆய்வு அமைந்தது. யாழ்ப்பாணத்தின் ஆதிக்குடிகள் குறித்து திட்டவட்டமான சில கருத்துக்களை பேராசிரியர் கணபதிப்பிள்ளை கொண்டிருந்தார். இவற்றை நிறுவுவதற்கு மேலும் சான்று தேடி அன்று தனித்து நின்று அவர் உழைத்தார். ஆனால் இன்று, யாழ்ப்பாணத்துத் தொல்லியல் ஆய்வுகள் பேராசிரியரின் கருத்துக்கள் சரியென்பதை நிலைநாட்டியுள்ளன.

தனித்துவம் வாய்ந்ததாகக் கணிக்கப்படக்கூடிய வரலாற்றுப் பாரம்பரியம் எல்லாப் பிரதேசங்கட்கும் அமைவதில்லை. இவ்வகையில், யாழ்ப்பாணம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே வரலாற்று இலக்கியங்களில் தனியாக இனங்காணப்பட்டு வந்திருப்பது குறிப்பிடத்தக்க தொன்றாகும். இலங்கையில் முதல் வரலாற்று இலக்கியங்களான தீபவம்சம், மகாவம்சம் என்பன இப்பிரதேசத்தை நாகதீப (நாகத்தீவு) என அழைத்துள்ளன இதன் தனித்துவம் காலப்போக்கில் யாழ்ப்பாண இராச்சியமாகப் பரிணமித்த பொழுது, இதற்கெனத் தனியான வரலாற்று நூல்களும் வரலாற்றாசிரியர்களும் வரலாற்றியலும் (Historiography) தோன்றியமையைக் காண்கிறோம். கைலாய மாலை, வையா பாடல், யாழ்ப்பாண வைபவமாலை ஆகியன இத்தகைய, யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட வரலாற்றியல் இலக்கியங்களாகும்


யாழ்ப்பாணத்தில் மையங்கொண்ட பண்பாட்டுப் போக்கொன்றின் தொடர்ச்சியாக, பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட சமய, மொழி, கல்வி, பண்பாட்டு மறுமலர்ச்சியானது யாழ்ப்பாண வரலாற்றை எழுதுவதிலும் புதியதொரு உத்வேகத்தைத் தந்தது. நூல் முகவுரைகளிலும் சிறுகட்டுரைகளிலும் முதலில் இவ்வரலாறு எழுதப்பட்டது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் முதலியார் செ.இராசநாயகம், சுவாமி ஞானப்பிரகாசர், ஆசுகவி கல்லடி வேல்லுப்பிள்ளை ஆகியோரது யாழ்ப்பாண வரலாற்று நூல்கள் இதன் வளர்ச்சியாகவே தோன்றின எனலாம்.

இதேகாலத்தில் போல் பீரிஸ் கந்தரோடையில் மேற்கொண்ட அகழ்வாராய்வுகள், ஆதிகால யாழ்ப்பாணத்தின் வரலாற்று முக்கியத்துவத்தைத் தொல்லியற் சான்றுகளுடன் வெளிப்படுத்தின கதிரைமலை என்ற கந்தரோடையைத் தலைநகராகக் கொண்டு, யாழ்ப்பாண இராச்சிய காலத்திற்கு முந்திய புராதன அரசு ஒன்று யாழ்ப்பாணத்தில் இருந்ததென்ற கருத்தினை முதலியார் இராசநாயகம் முதன் முறையாக அழுத்தமாக முன்வைத்தார்.

இவர்களோடு சம காலத்தவராய், யாழ்ப்பாணத்தில் முன்னோடியாக விளங்கிய கல்விமானும் சிந்தனையாளரும் பண்பாட்டு மறுமலர்ச்சியாளருமாகிய பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களும் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டதொரு வரலாற்றுப் பாரம்பரியத்தினையும் பண்பாட்டுப் போக்கினையும் தமது சிந்தனைக் கருவாகக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. 1907ஆம் ஆண்டு, "இலங்கைத் தேசிய நோக்கு" (Ceylon National Review) பத்திரிகையில், "யாழ்ப்பாணம் - அன்றும் இன்றும்" என அவர் எழுதிய கட்டுரை இதற்குச் சான்று

யாழ்ப்பாணம், தனக்கெனத் தனித்துவம் வாய்ந்த வரலாறு, பண்பாட்டுப் பாரம்பரியங்கள் அமைந்தவொரு தமிழ்த் தேசம் என்ற கருத்தினை அவர்

# ...ரலாறு ...வருகிறது




இதில் முன்வைத்துள்ளார். அவர் இயற்றிய "யாழ்ப்பாண கவதேசக் ...மி" என்ற கவிதை நூலின் தலையங்கமே இக்கருத்தினைச் சுட்டி ...ற்பதைக் காணலாம்.

இவர்களது காலகட்டத்திற்குப் பின்னர், இலங்கை முழுவதிற்குமான "தேசியவாதத்தினைக்" கட்டியெழுப்பும் வகையில் வரலாறு ப...ப்பதே காலத்தின் போக்காக இருந்தது. இலங்கைத் தேசிய வ...ற்றில் ஓர் அங்கமாக யாழ்ப்பாண வரலாற்றையும் தமிழர் வரலாற்றையும் நோக்கும் நூல்கள் வெளிவந்தன. நீண்டதொரு இடைவெளிக்காலத்தில் யாழ்ப்பாணத்திற்கான தனியான வரலாற்று நூல்களெதுவும் உருவாகவில்லை. இருந்தும், இவ்விடைவெளிக்குப் பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்துத் தமிழ் வரலாற்றாய்வாளர்கள் சிலர் யாழ்ப்பாண வரலாற்றை எழுதினார்கள். பேராசிரியர்கள் க.கணபதிப்பிள்ளை (சங்கிலி நாடக முகவுரை), கா.இந்திரபாலா (யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்), சி.பத்மநாதன் (The Kingdom of Jaffna) ஆகியோரது ஆய்வு நூல்கள் இவ்வகையில் முக்கியமானவை.

1980ஆம் ஆண்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியர் கா.இந்திரபாலா அவர்களின் ஆதரவில், இப்பிரதேசத்தில் ஆய்வுகளைச் செய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. யாழ்ப்பாணத்தின் ஆதிக்குடிகள் யார்? எப்பொழுது அவர்கள் இங்கு வாழ்ந்தார்கள்? எப்படி வாழ்ந்தார்கள்? இப்பிரதேசத்தின் தனித்துவமான பண்பாட்டிற்குக் காரணமான வரலாற்றுப் போக்கு என்ன? - இத்தகைய வினாக்களே யாழ்ப்பாணத்தின் ஆதிவரலாறு குறித்த இந்த ஆய்வுகளிற்கு அடிப்படையாக அமைந்தன.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் இவ்வினாக்களிற்கு விடையளிக்கக்கூடிய இலக்கியம், சாசனம் போன்ற எழுத்தாதாரங்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். இந்நிலையில், மனிதன் விட்டுச் சென்ற பொருளெச்சங்களை அடிப்படையாகக் கொண்டு கடந்த காலத்தை அறிய உ...ும் தொல்லியல் உத்திகளே நம்பிக்கை தருவதாக அமைந்தன. இ... தொல்லியல் ஆய்வு முயற்சியின் பயனாகக் கடந்த மூன்றாண்டு காலத்தில், சில அடிப்படைத் தகவல்களை ஒளிக்கீற்றாகவேனும் காணக்கூடிய வாய்ப்புக் கிடைத்துள்ளது. இவற்றுள் முக்கியமானவை யாழ்ப்பாணத்தின் ஆதிக்குடிகளான பெருங்கற்பண்பாட்டு (Megalithic Culture) மக்கள் பற்றிய தரவுகளாகும். இவற்றைக் கூறுவதற்கு முன்னர், இலங்கையின் ஆதிக்குடிகள் குறித்த அண்மைக் காலத்துக் கருத்துக்களைச் சுருக்கமாக நோக்குவது இங்கு அவசியமாகின்றது.

இலங்கையில் மிகத் தொன்மை வாய்ந்ததாக இதுவரையில் அறியப்பட்டுள்ள பண்பாடு குறுணிக்கற் பண்பாடாகும். (Microlithic or Mesolithic Culture). இது தமிழ்நாட்டுத் திருநெல்வேலி மாவட்டத்துக் குறுணிக்கற் பண்பாட்டுடன் தொடர்புடையதென்பதே ஆய்வாளர்களது கருத்தாகும ஏறத்தாழப் பத்தாயிரமாண்டுகளுக்கு முன்பிருந்தே இப்பண்பாடு இலங்கையில் நிலவியதாகத் தெரிகின்றது. சமீப காலத்தில் இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தைச் சேர்ந்த திரு. சிறான் தெரணியகல அவர்களது ஆய்வுகளால் இப் பண்பாடு பற்றிய அறிவு விரிவடைந்துள்ளது . யாழ்ப்பாணக் குடாநாட்டைத் தவிர, இலங்கைத் தீவடங்கிலும் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்கள் உட்பட, இப்பண்பாட்டெச்சங்கள் காணப்படுகின்றன. தொல்லியல் திணைக்களத்துடன் கூட்டாகக் கடந்த ஆண்டு நாம் மேற்கொண்ட ஆய்வொன்றில், யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குச் சமீபமாக, பூநகரிப் பகுதியிலும் (யாழ்.மாவட்டம்) இப் பண்பாடு நிலவியமை அறியப்பட்டுள்ளது .

வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திற்குரியதாகிய (Prehistoric Period) இக் குறுணிக்கற் பண்பாட்டையடுத்து இலங்கையில் வரலாறு தொடங்கும் காலத்தில். (Protohistoric Period) அதற்கும் காரணமாய் அமைந்தது தென்னிந்தியப் பெருங்கற் பண்பாட்டின் வருகை என்பதே இப்பொழுது தொல்லியல் ஆய்வாளர்களின் கருத்தாகும். இது இலங்கைக்கு ஆரியர் வந்தமை குறித்து இதுவரையும் தெரிவிக்கப்பட்டு வந்த பாரம்பரியக் கருத்துக்களுக்கு முற்றிலும் முரணானதாகும். இலங்கைக்கு ஆரியர் வந்தமைக்கு எவ்விதத் தொல்லியல் ஆதாரங்களும் காணப்படவில்லை என்றும் மாறாகத் தென்னிந்திய வரலாற்றுத் தொடக்ககாலப் பெருங்கற்பண்பாடே இலங்கையிலும் வரலாற்றுத் தொடக்கத்தைக் கொணர்ந்தது என்ற கருத்து அண்மைக் காலங்களில் பலமடைந்து வருகின்றது



பெருங்கற்பண்பாடு எனப்படுவது தென்னாசியாவைப் பொறுத்தவரையில் தென்னிந்தியாவிற்கே சிறப்பாக உரியதாகும். கி.மு. ஆயிரம் ஆண்டளவிலிருந்து கிறிஸ்தாப்தத்தின் ஆரம்ப நூற்றாண்டுகள் வரை இப்பண்பாடு நிலவியது. முதுமக்கள்தாழி, குரங்குப்பட்டடை, கற்கிடை எனப் பல்வேறு வகைப்பட்ட ஈமச்சின்னங்களை இறந்தோருக்கு நிறுவும் பண்பாட்டையுடைய மக்களையே இப்பெயர் சுட்டி நிற்கின்றது. பெருங்கற்களால் இந்த ஈமச்சின்னங்கள் நிறுவப்பட்டமையால் இது பெருங்க்றபண்பாடு எனப் பெயர் பெற்றது. ஈமச்சின்னங்களை மாத்திரம் கருத்திற்கொண்டே இப்பெயர் சூட்டப் பட்டிருந்தாலும் அதனிலும் முக்கியம் வாய்ந்த பல அம்சங்களையும் இப் பண்பாடு குறித்து நிற்கின்றதெனலாம்.

தென்னிந்தியாவைப் பொறுத்தவரையில், இரும்பின் அறிமுகம், நீர்ப்பாசனத்துடன் கூடிய பயிர்ச்செய்கை, விருத்தியடைந்த நிரந்தரக் குடியிருப்புகள் போன்றவை பெருங்கற் பண்பாட்டுடனேயே ஆரம்பமாகின்றன.

(தொடரும்)

### வேலை வாய்ப்புத் தேடும் இலங்கையர்கள் விவகாரம்:

# தற்காலிக வதிவிட அனுமதி வழங்கலை நிறுத்த நோர்வே திட்டம்

இலங்கையர்கள் மோசடிகளில் ஈடுபட்டு வருவதாக நோர்வே அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

நோர்வேயில் தொழில் வாய்ப்பு தேடும் இலங்கையர்களுக்கு இது வரையில் வழங்கப்பட்டு வந்த தற்காலிக வதிவிட அனுமதிகளை இரத்து செய்ய அந்நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கை, இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் மோசடியான முறையில் நோர்வேயில் தங்கியிருப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறித்த நாடுகளுக்கான நோர்வே தூதரகங்களினால் வழங்கப்பட்ட ஆலோசனைக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

உரிய தகுதிகள் மற்றும் சரியான ஆவணங்களை உடைய சில நாடுகளைச் சேர்ந்தவர்கள் நோர்வேயில் தொழில் வாய்ப்பு பெற்றுக் கொள்வதற்காக தற்காலிக வதிவிட வீசாக்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த ஆண்டின் முதல் ஆறு மாதத்தில் இந்தியா, இலங்கை மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளிலிருந்து சுமார் ஆயிரம் தற்காலிக வதிவிட வீசா விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இவ்வாறு தற்காலிக வதிவிட வீசா பெற்றுக் கொள்ளும் பலர் போலியான அல்லது மோசடியான முறைகளில் தங்கியிருப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

## தபால் மூல வாக்களிப்புக்கு அவகாசம்

கிழக்கு மாகாண சபை தேர்தலில் வாக்களிக்க தவறிய 3 மாவட்ட தபால் மூல வாக்களிக்காளர்கள் எதிர்வரும் 6ஆம் திகதி வரை வாக்களிப்பினை மேற்கொள்ள முடியும் என யாழ்.மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

கடந்த 27ஆம் மற்றும் 28ஆம் திகதிகளில் தபால் மூல வாக்களிப்பிளை மேற்கொள்ள தவறியவர்கள் எதிர்வரும் 6ஆம் திகதி வரை வாக்களிக்க தேர்தல் திணைக்களத்தினால் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# கிழக்கில் போதியளவு பொலிஸார் கடமையில் இல்லையென்கிறது மு.கா

### போதியளவு உத்தியோகத்தர்கள் உள்ளனர் என்கிறார் பொலிஸ் பேச்சாளர்



கிழக்கு மாகாணத்தில் போதியளவு பொலிஸார் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

கிழக்கு மாகாண சட்டம் ஒழுங்கை பேணிப் பாதுகாப்பதற்கு தேவையான அளவு பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

ஏதேனும் அசம்பாவிதங்கள் மற்றும் சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடு செய்தால் பொலிஸார் உடனடியாகச் சம்பவ இடத்திற்கு செல்வதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக் கால தாமதத்திற்கு போதியளவு ஆளணி வளம் இல்லாமையே காரணம் என அவர் தெரிவித்துள்ளார்.

எமது கட்சி வேட்பாளர் ஒருவரின் வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக முறைப்பாடு செய்த போது, கால தாமதமாகவே பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்றதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் கேள்வி எழுப்பிய போது போதியளவு உத்தியோகத்தர்கள் இல்லாமையினால் உரிய நேரத்திற்கு சம்பவ இடத்திற்குச் செல்ல முடியவில்லை என பொலிஸார் பதிலளித்துள்ளனர்.

கட்சிக்குள்ளும் கட்சிகளுக்கு இடையேயிலும் அதிகளவான மோதல்கள் இடம்பெற்று வரும் தருணத்தில் அதிகளவான பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அக்கரைப்பற்று வேட்பாளர்களுக்கு விசேட பாதுகாப்பு அளிப்பதாக வாக்குறுதி அளிக்கப்பட்ட போதிலும் இதுவரையில் எவ்வித பாதுகாப்பும் அளிக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தக் குற்றச் சாட்டுக்களில் உண்மையில்லை என பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கிழக்கில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு போதியளவு பொலிஸ் உத்தியோகத்தாகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகக் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## போரின் பின்னரான பெண்களின் நிலைமைகள் குறித்து கலந்துரையாடல்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பெண்கள் மோதலுக்குப் பின்னர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எனும் தொனிப்பொருளிலான கலந்துரையாடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்றது.

மனித நேய அமைப்புகளின் ஒன்றியம் (சி.எச்.ஏ நிறுவனம்) மட்டக்களப்பு ஸ்தா சொலிடாரிட்டி நிறுவனத்துடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இக்கலந்துரையாடலில் பெண்கள் உரிமைச் செயற்பாட்டாளரான திருமதி நளினி ரெட்ணராஜா வளவாளராக கலந்து கொண்டார்.

இக் கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 18 தமிழ், முஸ்லிம், அரச சார்பற்ற நிறுவனங்கள் கலந்துகொண்டன.

இதன்போது, "பெண்கள் சிறுவர்களுக்கெதிரான உரிமை மீறல்கள் பல காரணங்களினால் அதிகரித்துச் செல்கின்றன. அவர்கள் தற்பொழுது இடம்பெயர்ந்து வருமானமீட்டல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய நிலைக்கு மோதலின் பின்னர் தள்ளப்பட்டுள்ளனர். இவர்களுக்கான பாதுகாப்பை வழங்குவதற்காக அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்னைய காலங்களைப் போல் கொழும்பு சீ.எச்.ஏ நிறுவனத்துடன் சேர்ந்து செயற்பட வேண்டும்" என ஸ்தாசொலிடாரிட்டி நிறு வனத் தலைவர் வருண் கமல் தாஸ் தெரிவித்தார்.

## கோழி திருடிய இளைஞர்களுக்கு செப்.07 வரை விளக்கமறியல்

மன்னார், பணங்கட்டுக்கோட்டு பகுதி வீட்டில் வளர்க்கப்பட்ட கோழிகளைத் திருடி விற்பனை செய்து வந்த ஆறு இளைஞர்களை எதிர்வரும் செப்டெம்பர் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதவான் ஏ.யூட்சன் உத்தரவிட்டார்.

மன்னார் பொலிஸாரினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்ட இவர்கள் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போதே குறித்த ஆறு இளைஞர்களையும் இம்மாதம் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதவான் ஏ.யூட்சன் உத்தரவிட்டார்.

மன்னார் பனங்கட்டுக்கோட்டு பகுதியில் உள்ள இரண்டு வீடுகளில் குறித்த 6 இளைஞர்கள் கோழித்திருட்டில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

குறித்த இரண்டு வீடுகளிலும் களவாடப்பட்ட 21 கோழிகளையும் உப்புக்குளம் மற்றும் கோந்தைப்பிட்டி ஆகிய இடங்களில் விற்பனை செய்து வந்துள்ளனர். இதன்போது, மன்னார் பொலிஸார் குறித்த 6 இளைஞர்களையும் கைது செய்ததோடு கோழிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

## சட்டவிரோத மாணிக்கக் கல்: ஏழு பேர் கைது

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போட்றி தோட்டத்தில் சட்ட விரோதமாக மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சந்தேக நபர்கள் ஏழுபேரை நேற்று செவ்வாய்க்கிழமை ஹட்டன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றினைத் தொடர்ந்து ஹட்டன் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவில் பத்மதேவனின் ஆலோசனைக்கேற்ப நோர்வூட் போட்றி தோட்டத்துக்குச் சென்ற பொலிஸ் குழுவினர் சந்தேக நபர்களைக் கைது செய்ததோடு மாணிக்கக் கல் அகழ்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட பொருட்களும் மீட்கப்பட்டன.

# அம்பாறையில் சுதந்திரமான தேர்தலை நடத்த முடியாதாம்

### கபே அமைப்பு கூறுகின்றது

மாகாணசபைத் தேர்தல்களுக்கான இறுதிக்கட்டப் பிரச்சாரங்கள் சூடுபிடித்துள்ள நிலையில், அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடத்தமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள கபே அமைப்பு எச்சரித்துள்ளது.

அங்கு தொடரும் தேர்தல் வன்முறைகள் பற்றி தேர்தல்கள் ஆணையாளர்கள் மற்றும் கட்சிகளின் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளதாக கபே அமைப்பின் கிழக்கு மாகாணத்துக்கான பிரதான இணைப்பதிகாரி சுட்டிக்காட்டினார்.

கிழக்கு மாகாணமே தேர்தல் விதிமீறல்கள் அதிகரிக்கும் மாகாணமாக உள்ளதாகவும் கபே அமைப்பினர் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ள வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட அரச ஊழியர்களை தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுத்திவருவதாகவும் முறைப்பாடு கிடைத்துள்ளதாக கபே அமைப்பு சுட்டிக்காட்டியது.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் சுதந்திரமான, நீதியான தேர்தலை உறுதி செய்வதற்காக காவல்துறையினருடன் இணைந்து உறுதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட் கூறினார்.

பதவிநிலை அதிகாரிகள் தரத்தில் இருப்பவர்களைத் தவிர ஏனைய அரச ஊழியர்கள் தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபடுவதற்கான சுதந்திரம் இருப்பதாகக் கூறிய பிரதி ஆணையாளர், ஆனால் அவர்களை பிரசாரங்களில் ஈடுபடுமாறு எவரும் பணிக்க முடியாது என்றும் சுட்டிக்காட்டினார். இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நெருங்கிவரும் சூழ்நிலையில் தேர்தல் வன்முறைகளும் கட்சிகளிடையேயான மோதல்களும் அதிகரித்திருப் பதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். அத்துடன் ஒவ்வொரு கட்சியும் தேர்தல் வன்முறைகள் தொடர் பில் பல்வேறு பட்ட தரப்பினரையும் குற்றம்சாட்டி வருகின்றன. வன்முறைகள் அதிகரித்த போதும் கிழக்கு மாகாணத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள பொலிஸாரின் எண்ணிக்கை போதாதிருப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் குற்றம்சாட்டியுள்ளது.

16."சிங்கடி யப்பன்" எனக் கூறப்பட்டது யாரை?
1.சுந்தரன் 2.நம்பியாண்டார் நம்பி 3.சம்பந்தர் 4.அப்பர்

17."விழிக்கே அருளுண்டு அபிராம வல்லிக்கு எத்தனையாவது பாடல்?
1.76வது பாடல் 2.78வது பாடல் 3.79வது பாடல் 4.75வது பாடல்

18.சேர்பொன். இராமநாதன் சிவபதம் அடைந்த ஆண்டு
1.1935 2.1930 3.1928 4.1925

19."கோல் ஒன்றுடன் அடித்து இசைந்து ஆடும்" கூத்து யாது?
1.கர்த்தவராயன் கூத்து 2.அருச்சுணன் தபசு 3.வசந்தன் கூத்து 4.பறைமேளக் கூத்து

20.மண்டூர் ஆலய தீர்த்தத்தின் பெயர்?
1.தெதுறு ஓயா 2.மூங்கிலாறு 3.சுவர்ணஸ்கரணி 4.திருமஞ்சனம்

21."சிவன் எனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி மெய்யம்மன்..." எனக் கூறியவர்
1.சம்பந்தர் 2.அப்பர் 3.சுந்தரர் 4.மாணிக்கவாசகர்

22."ஏகம் சத் விப்ரா பௌஹுசதா வதந்தி" என்ற சுலோகம் காணப்படும் நூல்
1.ஆகமம் 2.இருக்குவேதம் 3.யசுர் வேதம் 4.சாமவேதம்

23.சைவத்தின் முழுமுதற் பரம்பொருள்
1.சிவன் 2.சக்தி 3.சூரியன் 4.முருகன்

24."ஏகனுமாகி அனேகனுமாகி நாதனுமாகி..." என்று கூறும் நூல்
1.திருவருட்பயன் 2.திருவுந்தியார் 3.திருக்களிற்றுப்படியார் 4.சிவஞான போதம்

25.நிகழ்காலவினை எனப்படுவது
1.சஞ்சிதம் 2.நல்வினை 3.பிராத்துவம் 4.ஆகாமியம்

26.வைப்பு சக்தி அல்லது பரிக்கிரக சக்தி எனப்படுவது
1.ஆணவம் 2.கன்மம் 3.பசு 4.மாயை

27.உருவத் திருமேனி அல்லாதது
1.சதாசிவன் 2.மகேஸ்வரன் 3.உருத்திரன் 4.விஷ்ணு

28.சைவசித்தாந்தம் கூறும் முத்தியை எவ்வாறு குறிப்பிடுவர்?
1.அத்துவைதம் 2.தாடலை 3.துவைதம் 4.ஜீவன்முத்தி

29.ஆன்மாக்கள் விடுதலை அடைய சிறந்த சாதனங்கள்
1.சைவ உணவு 2.வைவநாற்பாதம் 3.அன்னதானம் செய்தல் 4.கொடை

30.பஞ்ச கிருத்தியம் செய்வதன் நோக்கு:
1.ஆன்மாக்கள் பிறவிப்பயனைப்பெற 2.ஆன்மாக்கள் நல்லின்பங்காண
3.ஆன்மா பாசத் தளையில் இருந்து விடுதலை பெற 4.பதியில் செயலாகக் காட்ட

*(மிகுதி அடுத்தவாரம்)*

இப்பத்திரிகை இன்.'.போமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 05.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

கல்வி ஒளி
மாணவர் உலகின் கலங்கரைவிளக்கம் கல்வி - 01 ஒளி - 12
05-09-2012
தமிழ்நாதம் Thamil Naatham

## General Certificate of Education (O/L) Examination - December 2012

S.Vivekanantha (B.A.,)

## English (Model Question Paper)

### Part I

**1.Read the following notice and fill in the blanks. use the words in the box.**

| of, before, to, on, of, in |
|---|

All the students of grade 11 classes are requested to be present _______ the auditorium _______ 10th March 2012 at 1.15 PM. The purpose _______ this meeting is to form an English union. Proposals should be submitted _______ the teacher - in - charge on or _______ 9th March 2012.

**2.Fill in the blanks with the correct form of the verb given in brackets.**

Abi is a school girl. She _______ (go) to Kokuvil Central College. She _______ (be) in Grade 11. Social studies is her favourite subject. She _______ (study) hard. She _______ (want) to be a teacher. Abi _______ (have) a brother. His name _______ (be) Pirunthan. He _______ (study) at Kokuvil central college too. He is in grade 8. He _______ (want) to be an engineer. Both Abi and Pirunthan _______ (travel) to school by bus. They _______ (participate) in all the extra curricular activities at school. They _______ (obey) their parents and teachers.

**3.Select the appropriate question word from the box and complete the question in 'A' to get the answers in 'B'**

| Why, When, Where, How, What |
|---|

| A | B |
|---|---|
| 1) _______ is her name? | Her name is Shirani |
| 2) _______ does she live? | She lives in Vavuniya |
| 3) _______ old is she? | She is 16 years old |
| 4) _______ is she sad today? | Because her mother scolded her |
| 5) _______ was she born? | She was born on 5th March 1995 |

**4.Read the paragraph about my pet. Write a paragraph about shanthi's pet - parrot.**

| Pet | Name | Colour | Likes | Qualities | Activities |
|---|---|---|---|---|---|
| dog | Rex | brown<br>white | Meat<br>bones | playful<br>faithful | Plays with me<br>wag its tail |
| Parrot | Dilani | green | fruits<br>grain | Pleasant<br>Charming | talks to us<br>calls me by my name |

My pet is a dog. Its name is Rex. It is brown and white in colour. It likes meat and bones. It is very playful but a faithful dog. In the evenings it plays with me. Whenever it sees me, it wags its tail.

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

**5.Read the following dialogue. Select the missing utterances from the box and fill in the blanks.**

Kanista: Hello, I am Kanista

Meena : ____________________ I'm from Nallur Ladies College.

Kanista : ____________________ Are you a member of the English Union?

Meena : ____________________

Kanista : I am the president of our English union. What kinds of activities are you conducting through the union?

Meena : ____________________

Kanista : Well.... we are going to organize an exhibition next month.

Meena : It's nice. Definitely I'll come to see that. Glad to meet you.

Kanista : ____________________ see you later

Meena : See you.

- We are conducting some competitions on essay, speech and debate.
- Yes, I'm the secretary
- Hello, I am Meena
- I'm from Kokuvil Central College
- Nice meeting you too.

**6.Write a paragraph on one of the following. use about 50 words.**

1) My town / village
2) How I enjoy my weekends

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________



கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சை - டிசெம்பர் 2012

ஆசிரியர்: N.T. தரன் சைவநெறி (மாதிரி வினாத்தாள்) நேரம்: 3 மணி

## பகுதி - I

**சரியான விடையைத் தெரிவு செய்க.**

1.காணாபத்திய நெறியில் வழிபடும் மூர்த்தி
1.சிவன் 2.முருகன் 3.இலம்போதரன் 4.சக்தி

2.“எங்கும் எவையும் எரியுறு நீர்....” எனக்கூறும் நூல்?
1.சிவப்பிரகாசம் 2.திருவருட்பயன் 3.சிவஞானசித்தியார் 4.திருக்குறள்

3.சண்டேசுவர நாயனார் அவதரித்த ஊர்?
1.திருப்பொண்ணாகடம் 2.திருவெற்றியூர் 3.சிதம்பரம் 4.திருச்சேய்ஞலூர்

4.வைஷ்ணவ நூல்களைத் தொகுத்தவர் யார்?
1.நம்பியாண்டார் நம்பி 2.நம்மாழ்வார் 3.ஸ்ரீநாதமுனி 4.ஆண்டாள்

5.“சிவத்தொண்டன்” எனும் நூலை வெளியிட்டவர் யார்?
1.யோகர் சுவாமி 2.செல்லப்பா சுவாமி 3.கடையிற் சுவாமி 4.ஆனைக்குட்டி சுவாமி

6.ஆங்கிலேயர் காலத்தில் வளர்ச்சி கண்ட தெய்வ வழிபாடு யாது?
1.விநாயகர் 2.பெரியதம்பிரான் 3.வைரவர் 4.நடராஜர்

7.சுதர்சனமூர்த்தி எழுந்தருளியுள்ள ஆலயம் எது?
1.பொன்னாலை வரதராஜர் 2.வல்லிபுர ஆழ்வார் 3.அளவெட்டி நாராயணர் 4.யாழ் வெங்கடடேஸ்வரர்

8.நல்லூர் ஆலயம் புவனேகபாகுவினால் எத்தனையாம் ஆண்டு கட்டப்பட்டது?
1.1454 2.1455 3.1458 4.1460

9.கொக்கட்டிச் சோலை தான் தோன்றீச்சரத்தின் பூஜை ஆற்றுவோர் யார்?
1.பிராமணர் 2.கப்புறாளை 3.சங்கமர் 4.கட்டாடியர்

10.செல்வச்சந்நிதி புராணம் பாடியவர் யார்?
1.வீரமாமுனிவர் 2.சுன்னாகம் வரதபண்டிதர் 3.காசிவாசி செந்திநாதஐயர் 4.அருட்கவி விநாசித்தம்பி

11.“அந்தணாளனுன் அடைக்கலம் புகுத...” எனும் பாடலைப் பாடியவர் யார்?
1.சம்பந்தர் 2.சுந்தரர் 3.மணிவாசகர் 4.அருணந்தி சிவாச்சாரியார்

12.“பெருமாள் திருமொழி” அருளியவர் யார்?
1.உமாபதி சிவாச்சாரியார் 2.பெரியாழ்வார் 3.ஆண்டாள் 4.குலசேகராழ்வார்.

13.நித்திய அக்கினி ஹோமம் இடம்பெறும் சிவாலயம்?
1.திருக்கேதீஸ்வரம் 2.நயினை நாகபூசணி 3.பொன்னம்பலவாணேஸ்வரம் 4.மாத்தளை முத்துமாரி

14.மகோற்சவம் உணர்த்தும் தத்துவம்
1.ஐந்தொழில் 2.மூவகைத் திருமேனி 3.ஐம்பூதம் 4.கிரியை விளக்கம்

15.சம்பந்தர் உலவாக்கிளி பெறுவதற்கு பாடிய பாடல்
1.துளிவளர் திங்கள்... 2.சடையா யெனுமால்... 3.இடரினும் தளரினும்... 4.அவ்வினைக் கிவ்வினை.

ஆ) கண்ணிமைத்த லாலடிகள் காசினியில் தோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால் - எண்ணி
**நறுந்தாமரை விரும்பும் நன்னுதலே அன்னாள்**
அறிந்தாள் நளன்றன்னை ஆங்கு!

இ) **மனத்தில், ஆழத்தில் பீதி அது பாட்டிற்குப் புழுப் போல** துளைத்துக் கொண்டே இருந்தது. மேலே மட்டும் சமாதானம் கொஞ்ச நேரத்திற்கு ஒருதரம் அந்தத் திகில் மேல் மட்டத்திற்கு வந்து தலையெடுக்கும்.

ஈ) **பேரறிவுடையவர் கோபமுள்ள காலத்திலும் கொடுப்பார்.** கயவர் மனமகிழ்ச்சி உள்ள காலத்திலும் கொடார். வாழையானது மிக முற்றுதல் இல்லாத தாயானாலும் பயன்படும். எட்டியானது பழுத்தாலும் பயன்படுமோ? நீ சொல்வாயாக.

03)நந்திக்கலம்பகத்தில் நந்திவர்மனின் தவிப்பும், தலைவியினது பிரிவுத் துயரும் எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகிறது? **அல்லது**

முடியுடை மூவேந்தர்களின் யானைப்படையின் வீரம் முத்தொள்ளாயிரத்தில் காட்டப்படும் விதத்தினை தருக.

04)நல்லமரம் நச்சுமரம் என்ற கட்டுரைப் பகுதியில் நல்லவர், பேதையர் ஆகிய இருவரினதும் கைப்பட்ட செல்வம் எப்படி இருக்கும் என்பதை விளக்குக.

- **5, 6, 7 ஆம் வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து எழுதுக.**

05)1.நான்மடிக்கடிகையில் கூறப்படும் நீதிக் கருத்துக்கள் யாவை?
2.கொடுங்கோன்மை அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறும் ஆட்சி பற்றி எழுதுக.
3.நளவெண்பாவில் தமயந்தி தேவர்களை இனங்கண்டு கொண்ட விதத்தினை எழுது?

06)“பார்வைகள்” என்ற சிறுகதையில் தர்மலிங்கத்தின் எதிர்பார்ப்பும், ஏனையவர்களின் பார்வையும் எவ்வாறிருந்தது. விளக்குக?

07)1.பரராஜசேகர மன்னனின் புகழ் பாடப்படும் விதத்தினை எழுதுக.
2.நாட்டார் பாடலில் மீனவர்படும் அவலம் பற்றி கூறப்படுவது யாது?
3.கல்வி அழியாச் செல்வத்தில் கல்வியின் வலிமை எடுத்துக் காட்டப்படும் வகையைக் குறிப்பிடுக.

**2012 ஆகஸ்ட் 29ஆம் திகதி வெளியாகிய கல்வி ஒளியில் பிரசுரமாகியிருந்த தமிழ்மொழியும் இலக்கியமும்-1 (மாதிரி வினாத்தாள்) கேள்விகளுக்குரிய விடைகள் வருமாறு:**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01) 2 | 02) 4 | 03) 1 | 04) 3 | 05) 2 | 06) 3 | 07) 4 | 08) 2 |
| 09) 3 | 10) 2 | 11) 3 | 12) 4 | 13) 1 | 14) 3 | 15) 4 | 16) 1 |
| 17) 1 | 18) 3 | 19) 3 | 20) 2 | 21) 4 | 22) 3 | 23) 1 | 24) 2 |
| 25) 3 | 26) 2 | 27) 3 | 28) 3 | 29) 3 | 30) 2 | 31) 2 | 32) 2 |
| 33) 3 | 34) 4 | 35) 2 | 36) 4 | 37) 3 | 38) 2 | 39) 3 | 40) 3 |



**7.Read the story given below and answer the questions**

Once a policeman stopped a car which was driving too fast. He walked over to the right hand side of the car to speak to the driver. He put his head through the window which was opened and spoke to the man who was sitting there. He noticed that the man was drunk and asked him to get out of the car. He gave the man a breath test that showed he was drunk.

“You can’t drive anymore” said the policeman.
“But I am not driving” said the man laughing at the situation.
The policeman looked at the car which was very new and saw that the steering wheel was on the left, not on the right. The driver was an oldman.

**Underline the correct answer**

1)who was driving the car
a) a Policeman
b) a man
c) an old man

2)Was the person driving it slowly?

______________________________

3)Name the test the policeman gave?

______________________________

4)Where was the steering wheel?

______________________________

5)How many people were in the car?

______________________________

**8.Your friend has invited you to his brithday party. But you are unable to attend the function write a letter explaining your inability to attend the party.**

**01)சுருக்கமான விடை எழுதுக.**

1.“நறுந்தா மரை விரும்பும் நன்னுதலே அன்னாள்” - இத் தொடரைப் பிரித்தெழுதுக.

2.“அலை” என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வர தனித்தனி வாக்கியங்களில் எழுதுக.

3.வா கண்ணே உள்ளே போகலாம் இருட்டிப் போய் விட்டது- பொருத்தமான நிறுத்தற் குறியீடுகள் இட்டு வாக்கியத்தைத் திருப்பி எழுதுக.

4.“அரசன் கோயிலை கட்டினான்” - இவ்வாக்கியத்தை செயப்பாட்டு வாக்கியமாக மாற்றி எழுதுக.

5.மண்ணெலாம் உய்ய மழைபோல் வழங்கு கரம்” - இத் தொடரில் வந்துள்ள அணியை எடுத்துக்காட்டி விளக்குக.

6.தொழில் முறைகடித்தின் உறுப்புக்களை எழுதுக.

7.பின்வருவனவற்றுள் கட்டுரையின் பண்புகள் அல்லாதவை எவை என்பதைக் குறிப்பிடுக. கூறியது கூறல், மற்றொன்று விரித்து கூறல், நவின்றோர்க்கினிமை, சுருங்கச் சொல்லல், நன்மொழிப் புணர்ச்சி, விளங்க வைத்தல்.

8.செவ்வி காண்பவரிடம் இருக்கக் கூடாத பண்புகள் மூன்றினைக் கூறிப்பிடுக.

9.இடக்கரடக்கல் என்றால் என்ன? இரண்டு உதாரணங்கள் தருக.

10.ஆக்கப் பெயர்கள் நான்கினை குறிப்பிடுக.

**02)பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏழத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக.**

1.இன்று மனிதர்களால் உருவாக்கப்படுகின்ற குப்பைகளால் பல தீமைகளை மனிதர்கள் அனுபவிக்க வேண்டியவர்களாகின்றனர். இதனால் சுற்றுப்புறச் சூழல் மாசடைகின்றது. சுற்றுப்புறக் சூழலை சுத்தமாக பேண வேண்டியதன் அவசியத்தை விளக்கி ஒரு விளக்கக் கட்டுரை எழுதுக.

2.இன்று மனிதர்களை சோம்பலாக்குவது மட்டுமல்ல சமூகப் பிரச்சினையையும் தூண்டி விடும் ஒரு கருவியாக தொலைக்காட்சி தொடர் நாடகங்கள் விளங்குகின்றன. இதனை விமர்சித்து ஒரு கட்டுரை வரைக.

3.கண்ணனின் குடும்பம் மிகவும் ஏழ்மையானது. சாதாரண தரப் பரீட்சை எழுதப்போகும் அவனுக்கு படிக்கக் கூட பணம் இல்லை. குடும்பத்தில் ஒரு நேர சாப்பாடு மட்டுமே. இந்நிலையில் அவனுடைய தந்தையின் திடீர் மரணம் இதற்கெல்லாம் தாண்டி அவனுடைய கல்வி ..... இதனை விளக்கி ஒரு சிறுகதை எழுதுக.

4.முதியோர்கள் பல வழிகளிலும் புறக்கணிக்கப்படுகின்றார்கள். இவர்களே எம் வழிகாட்டிகள், எமது சொத்து, அவர்களை பராமரித்து பயன் பெறுவது எமது தலையாய கடமை என்று கருத்துப்பட ஒரு மேடைப்பேச்சு.

**03)கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் கருத்தை 40-45 சொற்களில் அமைக்கக் கூடியவாறு எழுதுக.**

கல்வி என்பதைக் குறைகளைக் களையும் மருந்தாகக் கருதலாம். குறையுடைய மனித வாழ்வைச் சுயசிந்தனை மூலமாகவோ பிறர் தம் வாழ்வைக் கண்டோ திருத்தம் செய்யலாம். ஆனால் கண்டோ கேட்டோ தன் சிந்தனை மூலமோ இவை போன்ற எவ்வகையிலும் திருத்தாமல் முன்னே செல்லும் செம்மறியாடு பள்ளத்தில் விழ, பின்னே செல்பவையும் வீழ்வது போல அறிவின்றி வீழ்பவர்களாயிருத்தல் கூடாது.

உயர்ந்த கல்வி நேரடியாக வாழ்க்கையைக் கற்பது தான் மற்றவர்கள் வாழ்க்கையில் உள்ள குறைகளை எண்ணிப்பார்ப்பது நம்மை நாம் காத்துக் கொள்வதற்கு மிகவும் பயன்படும். பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகளையும் உயர்ந்த புலவர்களின் காவியங்களையும் சிறந்த உணர்வினர் எழுதிய கதைகளையும் அடிக்கடி படித்தால், அதையும் விடாமல் படித்தால் நன்மைகள் ஏற்படும். நம்மையும் அறியாமல் நம்மனம் அந்தப் பெரியோர்களின் நெறியினைப் பின்பற்றிட வாழ்க்கையும் செம்மையாகும்.



1.உழவுத் தொழில்தான் உணவு தரும்
உடையும் அதனால் அணிய வரும்
பழகும் மற்றுள தொழில் யாவும்
பயிர்த் தொழில் இன்றேல் விழலாகும்

2.தங்கமும் வெள்ளியும் இருந்தாலும்
தானியம் ஒன்றே விருந்தாகும்
இங்கிதன் உண்மையை உணர்ந்திடுவோம்
ஏர்த் தொழில் மிகுந்திடத் துணிந்திடுவோம்

3.உழவே செல்வம் உண்டு பண்ணும்
உழைப்பே இன்பம் கொண்டு வரும்
உழவைத் தொழுதிட வரு நாளே
உற்ற இப் பொங்கல் திருநாளாம்

1. இப்பாடலில் கவிஞர் கூறவரும் விடயம் எத் தொழிலைப் பற்றியது?
2. இத் தொழிலின் முக்கியத்துவம் எவ்வாறு கூறப்படுகின்றது?
3. “பயிர்த் தொழில் இன்றேல் விழலாகும்” இத் தொடரினை விளக்குக.
4. “தங்கமும் வெள்ளியும் இருந்தாலும்” - இதில் வந்துள்ள இடைச் சொற்களை எடுத்துக் காட்டி, அதன் வகையையும் விளக்குக.

05)இன்று அனைவரையும் அச்சுறுத்திக் கொண்டிருப்பது டெங்கு ஆகும். இதனை அழிக்கவோ அல்லது கட்டுப்படுத்தவோ அனைவரும் முன்வரவேண்டும். இதனை முன்னிட்டு உமது பாடசாலையில் மேற்கொள்ளப்பட்ட சிரமதானம் பற்றிய அறிக்கை ஒன்றை சிரமதான ஒழுங்கு பொறுப்பாளர் என்ற வகையில் 80-100 சொற்களில் எழுதுக.

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சை (மாதிரி வினாத்தாள்) - டிசெம்பர் 2012

ஆசிரியர்: திரு.ந.ஆனந்தசபேசன் தமிழ் மொழியும் இலக்கியமும் III நேரம்: 2 மணி

**01.சுருக்கமான விடை எழுதுக.**

1.கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.

அ) கேடில் என்பதன் கருத்து யாது? ஆ) இக்குறட்பாவின் கருத்தை எழுதுக.

2.“கச்சி ஒருகால் மிதியா...” என்ற முத்தொள்ளாயிரம் பாடலில் கிள்ளி வளவனின் யானை எந்தெந்த நாட்டில் தனது காலை வைத்தது?

3.“பாதகா! என் சிங்கத்தை மறைந்து வந்து கொன்று விட்டாயே!”- இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

4.“ஒரு பதிவிரதையின் சரித்திரம்” என்ற கதை இடம்பெறும் நூல் எது? அதனை எழுதியவர் யார்?

5.“சொல்லுக சொல்லில் பயன்உடைய சொல்லற்க சொல்லில் பயன் இலாச் சொல்” மேலே தரப்பட்ட திருக்குறளை கொண்டுகூட்டி மீண்டும் எழுதுக.

6.முற்காலத்தில் கல்வியில் மிகச் சிறந்த பெண்மணிகளாக கல்வி அழியாச் செல்வத்தில் கூறப்பட்டவர்கள் யாவர்?

7.“ஏர் எழுபது - அது எப்படிப்பட்ட நூல் என்று தெரியவில்லையே?” இக்கூற்று அரசியால் சோழனுக்கு கூறப்பட்டது.

அ) ஏர் எழுபது யாரை சிறப்பித்து பாடுகிறது? ஆ) அதனை எழுதியவர் யார்?

8.“நட்சத்திரக் குழந்தைகள்” என்ற சிறுகதையினூடாக கூறப்படும் படிப்பினை என்ன?

9.நளவெண்பாவில் தமயந்தியை திருமணம் செய்ய வந்த நான்கு தேவர்களும் யாவர்?

10.“காப்படங்கென் றன்னை கடிமனையிற் செறித்து...” இத்தொடரை சந்தி பிரித்து எழுதுக.

**02)பின்வரும் செய்யுட் பகுதிகள், உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துக்களில் உள்ள தொடர்களின் சிறப்புகளை விளக்கி எழுதுக.**

அ) மண்ணெலாம் உய்ய மழைபோல் வழங்குகரத்
தண்ணுலா மாலைத் தமிழ்நந்தி நல்நாட்டில்
பெண்ணிலா ஊரில் பிறந்தாரைப் போல வரும்
வெண்ணிலா வேயிந்த வேகமுனக் காகாதே!

# பெண்ணாய் பிறந்திட
# பெருந்தவம் செய்வோம்



பெண்கள் நாட்டின் கண்கள்!,மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா!,பட்டங்கள் ஆள்வதும்,சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்! இப்படி எத்தனை கவிஞர்கள் பாடியிருக்கின்றனர். ஆனால் இயல்பான நிலையில் அதை நாம் சிறுமை கொள்ளும் அளவுக்கு பெண்களின்பால் கொடுமையும் அடிமைத்தனம் பல நூற்றாண்டு தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

பெண்களுக்கு விடுதலை மிக மிகத் தேவை என்பதை யாவரும் உணர்திருக்கின்றோம்.சில இயக்கங்கள் பெண் விடுதலைக்காக போராடிக் கொண்டு இருந்தாலும், அதனோடு தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளவோ, ஐக்கியப்படுத்திக் கொள்ளவோ பெண்கள் முன் வராத சூழல்தான் இன்றைக்கும் உள்ளது. இந்நிலை மாற வேண்டும் அறிவுத்தளத்தில், சமூகவியல் போராட்டங்களில் தங்களது பங்களிப்பை அளிக்கும் போதுதான் சுதந்திரத்தின் முழுப்பயனும் அடைந்ததாகப் பொருள் கொள்ள முடியும்.

வாழ்க்கையானது ஆண் பெண் என்ற இரு பாலரும் இணைந்து நடைப்பெருகின்ற பேர்யியக்கம் இந்த வாழ்க்கை.பெண்ணில்லாமல் ஆண் இல்லை. ஆணில்லாமல் பெண்ணில்லை என்பது இயற்கையின் நியதி உலகில் உள்ள எல்லோரும் இந்த இரண்டு பேர் கூட்டுறவில் வந்த இன பெருக்கம் மனிதவர்க்கம் என்பதை மறுக்க முடியாது. எனினும் உலகெங்கும் பெண்கள் ஆண்களால் சமத்துவமாக பார்க்கிறார்களா? பார்க்கப்படுவதில்லை என்ற பதில்தான் கிடைக்கிறது. அடிமைத்தனத்தின் மறுபக்கம் தான் பெண்ணியம்.

முற்காலங்களில் பெண்களும ஆண்களும் சமமானவர்கள் எனக் கருதப்படவில்லை. அதாவது, ஆணுக்குப் பெண் தாழ்ந்தவளே என்பதும், இது பெண்களின் உடல்கூறு மற்றும் படைப்பு ரீதியாகவும் கருதப்பட்டு வந்தது. பெண்கள் நுண்ணறிவில் மிகவும் தாழ்ந்தவர்கள் எனக்கருதப்பட்டது. பெண் புத்தி பின்புத்தி என்று பேசப்பட்டது. பெண், ஒரு மனிதஜென்மமாகவே கருதப்படவில்லை. ஒரு சில இந்திய அரபு இனங்கள், தங்கள் பெண்களை தான் வளர்க்கும் கால்நடைகளோடு சேர்த்தே கணக்கிட்டனர். அவர்களுடைய மொழியில் பெண்களுக்கான பெயர்ச்சொல் மாட்டு பெண் அல்லது "கழுதை" எனும் சொல்லின் அர்த்தத்தையும் கொண்டிருந்தது.

திருமணம் என்பது மனித இனத்தைப் பொறுத்தவரை ஒரு உலகளாவிய பொதுமையாக இருந்த போதிலும், வெவ்வேறு பண்பாட்டுக் குழுக்களிடையே திருமணம் தொடர்பில் வெவ்வேறு விதமான விதிகளும், நெறிமுறைகளும் காணப்படுகின்றன. " திரு" என்பது தெய்வத்தன்மை எனவும், "மணம்" என்பது இணைதல் எனவும் பொருள்கொள்ளப்படுகிறது, "திருமணம்" என்பது மேம்மையான தெய்வீகம் வாய்ந்த இணைதல் என்று அர்தப்படுதிக்கொள்ள்லாம்.

ஒரு ஆண் திருமணத்திற்கு முன் மதிக்கப்படுவதில்லை. அவன் திருமண முடிந்து தம்பதி சகிதமாக உலா வரும் போதுதான் அவனுக்கு மதிப்பும் மரியாதையும் தருகிறது இந்த சமுதாயம். பெண்ணோடு இல்லறத்தில் இணையும் ஒரு மனிதன் பூரான மரியாதை பெருகின்றான். முழுமையும் அடைகின்றான்.

பெண் என்பவள் சமுதாய நோக்கு மிக்கவளாகவும் சமுதாய பற்று மிக்கவர்களாகவும் வாழ்ந்தாள் அவர் சார்ந்த இனமும் குடுப்பமும் சிறந்தோங்கும் என்பது உண்மை. பெண்ணின் பெருமையை நிலை நிறுத்து மாண்பு நமது தமிழ் பெண்களிடம் இருக்க இருக்கவேண்டும்.

ஆண் ஆதிக்கத்தில் முரட்டுதனமான உரிமை மறுப்பு. காலம் காலமாக பெண்ணின் உரிமைகள் சுரண்டப்படுவது கண்கூடாக தெரிகிறது. நீண்ட காலம் இரண்டாம் தர குடி மக்களாக பெண்கள் மதிக்கப்ட்டிருகின்றனர். நூற்றாண்டை தாண்டிய பெண் விடுதலைக்கான போராட்ட முயற்சியினால் ஆணாதிக்கத்தின் வீறு முன்பை விட குறைந்து விட்டதே என்பது தான் உண்மை. எனினும் முழுமையான பால் சமத்துவம் இன்னமும் எட்டப்படவில்லை என்பதும் மறுப்பதற்கில்லை.

# குங்குமத்திற்கு பதிலாக ஸ்டிக்கர் பொட்டு வைத்துக் கொள்வது சரியா?



நாகரீக மோகத்தில் நிகழும் தவறுகளில் இதுவும் ஒன்று. சுமங்கலிப் பெண்கள் நெற்றியிலும் உச்சியிலும் வைத்துக் கொள்ளும் குங்குமத்தில் தாம் மகிழ்ந்து இருப்பதாக மகாலட்சுமி கூறுகிறாள்.

எனவே, குங்குமம் தான் உயர்ந்தது.

பொட்டு வைத்துக் கொள்வதையே, நாகரீகக் குறைவாக சில சகோதரிகள் கருதும் சூழலில் ஸ்டிக்கராவது வைத்துக் கொள்கிறார்களே என்று அல்ப சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

நெற்றியில் குங்குமம் அணியும் போது, தீய சக்திகள் விலகும்.


அதிலும் இரு புருவங்களுக்கிடையில் குங்குமம் வைத்தால், அவர்களை யாரும் அவ்வளவு எளிதில் வசியம் செய்ய முடியாது. மேலும் மஞ்சள், படிகாரம், சுண்ணாம்பு போன்ற கிருமி நாசினிப் பொருட்களைக் கொண்டு குங்குமம் தயார் செய்யப்படுகிறது.

அவ்வாறு தயார் செய்யப்பட்ட குங்குமத்தை பெண்கள் தங்களுடைய நெற்றியின் மையப் பகுதியில் அணிவதால் உடலிலிருந்து மூளைக்குச் செல்லும் நரம்புகளின் வெப்பத்தை குங்குமம் தடுக்கிறது. மேலும் குங்குமத்தின் மேல் சூரிய ஒளிப்படும்போது குங்குமத்தில் உள்ள மூலிகை தன்மையும், சூரிய சக்தியிலிலிருந்து வெளிப்படும் வைட்டமின் டி சக்தியும் உடலுக்குள் சென்று நன்மையை ஏற்படுத்தி தருகிறது.

அதேபோல் மன அமைதி, மங்களகரமான தோற்றம், உடல் நலத்தையும் தருவதால் பெண்கள் நெற்றியில் குங்குமம் அணிவது சிறந்தது.

# பெண்ணுக்காக...

## தாலிக்கொடி



வேலி போட்டு
காவல் செய்யும் காணிக் காரனே!
இடையிளையாள்
கொடியிளையாள்
உடுக்கைப் போல் இடையாளை
தாலியால் வேலி போடுகின்றாயோ!
சீதனமாய் வாங்கிய காசு
சீரழிக்க வேறு வழியின்றி
சிலவு செய்கின்றானோ?
இல்லை சம்பிரதாயம்
ஒன்றுக்காய் செய்கின்றானோ?



## பொட்டு


பாடுபட்டு உழைக்கனும்
பாவையர் என்றால்
நெற்றியில் பொட்டு இருக்கனும்
பயங்கர சக்தியுண்டு இதற்கு
பார்த்து வைத்துக்கொள் இனியாவது
பாழாய்ப் போகாமல் நெற்றியை.



அடுப்படியே உந்தனுக்கு
ஆலயம் என்று
அடுத்தவர் நகைக்கின்றார்
மாதர் கொண்டு
மகிழும் உலகம்மார்பு
தட்டிப் பேசும் போது
மாது உன்னை மறந்து
விடுவார்அடியே எழுந்திடடி!
அடிகொடுக்க
இது தானடி பெண்
மீதான
அடுத்தவரின் நினைப்பு

## அடுத்தவர் நினைப்பு

## முடியாது



சாதனை மேல்
சாதனை செய்யும் மனிதா? நீ
சோதனை செய்வது சரியா?
வேதனைமேல்
வேதனை கொடுத்து
வேடிக்கை பார்க்க கூட்டம்
மூட்டி விட,
முந்தானை முடிச்சை
மூதேவி என்று நினைத்து - வெறி
முறியும் வரை போட்டு
வெளுக்கின்றாயே!
முடியாது உன்னோடு வாழவென்று
முற்றுப்புள்ளி வைப்பாள்
இனியும் கன்னம் பழுக்க
நீ வெளுத்தால்..........
அவளுக்கும் கிழக்கு
மெல்ல வெளுக்கும்.

த: ஜெயம்ஜெகன்

தங்கள் ஆட்சேபத்தை பலமாகத் தெரிவித்தன. முன் வரிசையில் இருந்த நாலு வாலிபப் பன்றிகள் தங்கள் ஆட்சேபத்துக்கு அறிகுறியாகப் பல குரல்களில் கிறீச்சிட்டன. ஒரே சமயத்தில் நாலு பன்றிக் குட்டிகளும் எழுந்து நின்றுகொண்டு பேசத் தொடங்கின. ஆனால் திடீரென்று நெப்போலியனைச் சுற்றி உட்கார்ந்திருந்த நாய்கள் எல்லாம் பயமுறுத்துகின்ற வகையில் அந்தப் பன்றிக் குட்டிகளைப் பார்த்து உறுமின. உடனே பன்றிக் குட்டிகள் பேசாமல் உட்கார்ந்து மௌனமாகி விட்டன.

அப்போது ஆடுகள் உரத்த குரலில் "நாலு கால் நல்லது, இரண்டுகால் கெட்டது" என்று பாடத் தொடங்கின. இது கிட்டத்தட்ட ஒரு கால்மணி நேரம் நடக்கவே மேற்கொண்டு விவாதம் செய்யவே முடியாமற் போய்விட்டது. புது ஏற்பாடுகளைப் பற்றி அந்தப் பண்ணையிலுள்ள எல்லோரிடமும் சொல்லுவதற்காக ஸ்க்வீலர் என்ற பன்றி




அனுப்பப்பட்டது.


தோழர்களே! உங்களுக்கெல்லாம் தெரியும் - நான் சொல்லியா இது தெரிய வேண்டும்? தோழர் நெப்போலியன் மகத்தான தியாக சிந்தனையுடன் இந்த அதிகப்படியான சுமையையும் தாமே ஏற்றுக்கொண்டிருக்கிறார். தோழர்களே தலைமைப் பதவி என்பது இன்பம் பயப்பது என்று நீங்கள் தவறுதலாக எண்ணக் கூடாது. அது எதிர்மாறானது. அது மிகவும் சிரமமான பொறுப்பு. எல்லா விலங்குகளும் சரிநிகர் சமமானவை என்பதைத் தோழர் நெப்போலியனை விட உறுதியாக நம்புபவர்கள் வேறு யாருமில்லை. உங்கள் பிரச்சினைகளை அலசி முடிவுகட்ட உங்களையே விட்டுவிடத் தோழர் நெப்போலியன் தயார்தான். ஆனால் நீங்கள் தவறான தீர்மானம் செய்து, முடிவு கட்டிவிட்டால் என்ன செய்வது? அதற்குப் பிறகு விலங்குப் பண்ணை சரிவர இயங்காதே!

ஸ்நோபாலைப் பின்பற்றுவது என்று நீங்கள் தீர்மானித்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? காற்றாடி யந்திரம் என்கிற அஸ்திவாரமற்ற, அவன் கனவைத் பின்தொடர நீங்கள் தீர்மானித்திருந்தால், விலங்குப் பண்ணை என்னவாகியிருக்கும்? தோழர்களே யோசித்துப் பாருங்கள்: "ஸ்நோபால் ஒரு குற்றவாளி - வேறு என்ன?"


ஆனால் அது மிகவும் தீரமாக மாட்டுக் கொட்டில் சண்டையில் ஈடுபட்டதே? என்று சொல்லிற்று ஒரு குரல்.

"தீரமும் வீரமும் போதுமா? பணிவும், பக்தியும், சொன்னதைக் கேட்டுப்படியும் குணமும் வேண்டாமா?" என்று கேட்டது ஸ்க்வீலர் பன்றி. "தலைவரை மதிக்கும் தன்மைதான் நமது முதல் தேவை." **(நாளை)**

## வரைவோம் வாருங்கள்!





## குருவி



**குருவி பறந்து வந்ததாம்**
**குழந்தை அருகில் நின்றதாம்**
**பாவம் அதற்குப் பசித்ததாம்**
**பாப்பா நெல்லைக்**
**கொடுத்ததாம்**
**குருவி அந்த நெல்லையே**
**கொத்திக் கொத்தித் தின்றதாம்**
**பசியும் நீங்கிப் பறந்ததாம்**
**பாப்பா இன்பம் கொண்டதாம்**


## நாலு மாடுகளும் ஒரு சிங்கமும்



அழகான கிராமத்தில் நாலு
மாடு இருந்ததாம்.
அங்கே இங்கே
அலைஞ்சாலும் நாலும்
ஒன்றாய் போனதாம்.
அந்த நேரம் பார்த்துதான்
சிங்கம் அங்கே வந்ததாம்.
அருகில் வந்த சிங்கமும்
மாட்டை தின்னப்
பார்த்ததாம்.
நாலும் ஒன்றாய்
அலைவதால் மாட்டை
பிரிக்கப் பார்த்ததாம்.
கொஞ்ச நேரம் பேசியே சண்டை வர வைத்ததாம்.
சண்டை போட்ட மாடு பிரிந்து தனியே போனதாம்.
தனித்தனியே வந்ததால் சிங்கம் மாட்டை தின்றதாம்.

## சிறுவர் அமுதம்

## நல்ல நல்ல மாம்பழம்



**நல்ல நல்ல மாம்பழம்**
**நீண்டு பருத்த மாம்பழம்**
**வெல்லக் கட்டி மாம்பழம்**
**வாங்கித் தின்று பார்க்கலாம்**
**பொன் நிறத்து மாம்பழம்**
**பழுத்த புதிய மாம்பழம்**
**சின்ன மூக்கு மாம்பழம்**
**சிவப்பு பச்சை மாம்பழம்**
**சிறுவர் விரும்பும் மாம்பழம்**
**சுவை மிகுந்த மாம்பழம்**
**குலை குலையாய் மாம்பழம்**
**காண வாயும் ஊறுமே**


## விடுகதைகள்




1. நடக்கத் தெரியாதவனுக்கு வழிகாட்டுபவன். அவன் யார்?
2. நீரிலே உயிர் பெற்று நிலத்திலே நீர் இறைப்பான். அவன் யார்?
3. அறைகள் அறுநூறு அத்தனையும் ஓரளவு. அது என்ன?
4.கோணல் இருந்தாலும் குணம் மாறாது. அது என்ன?
5. கண்டு காய் காய்க்கும் காணாமல் பூ பூக்கும். அது என்ன?

**விடைகள்**
**1. கைத்தடி 2. மின்சாரம்**
**3. தேன்கூடு 4. கரும்பு**
**5. அத்திமரம்**

## வர்ணம் தீட்டுங்கள்



**குழந்தைகளே!**

3 முதல் 12 வயது வரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

ஏதாவதொரு விடயத்தைப் பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

சுடோக்கு எண் 44 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 9 | 6 | 2 | 7 | 5 | 4 | 8 |
| 8 | 4 | 2 | 5 | 9 | 3 | 1 | 7 | 6 |
| 5 | 7 | 6 | 8 | 4 | 1 | 9 | 2 | 3 |
| 6 | 9 | 3 | 2 | 5 | 8 | 4 | 1 | 7 |
| 7 | 5 | 4 | 1 | 6 | 9 | 8 | 3 | 2 |
| 2 | 1 | 8 | 3 | 7 | 4 | 6 | 5 | 9 |
| 3 | 2 | 5 | 9 | 1 | 6 | 7 | 8 | 4 |
| 4 | 6 | 1 | 7 | 8 | 2 | 3 | 9 | 5 |
| 9 | 8 | 7 | 4 | 3 | 5 | 2 | 6 | 1 |

சுடோக்கு எண் 45


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | | | 1 | | | | |
| 2 | | 3 | 7 | | | | | |
| | | | | | 3 | | 5 | 6 |
| | | | | | 5 | 9 | | |
| 9 | 1 | 5 | | | | 8 | 7 | 3 |
| | | 8 | 9 | | | | | |
| 4 | 9 | | 3 | | | | | |
| | | | | | 1 | 4 | | 7 |
| | | | | 5 | | | 3 | |

# கூடங்குளம் அணுமின் நிலையத்தால் இலங்கைக்கு ஆபத்தா?

இலங்கையையும், இந்தியாவையும் சேர்ந்த அணுக்கதிர் வீச்சு சம்பந்தமான நிபுணர்கள் அடுத்த வாரம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர் என்று இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தமிழகத்தின் திருநெல்வேலி மாவட்டத்தில் நிர்மானிக்கப்பட்டுவரும் கூடங்குளம் அணுசக்தி மின் நிலையத்திலிருந்து அணுக்கசிவு ஏற்பட்டால் இலங்கை பாதிக்கப்படக் கூடிய ஆபத்து இருக்கிறதென்ற அச்சம் எழுந்துள்ளது. இலங்கையின் மேற்குக் கரையிலிருந்து 240 கிலோமீற்றர்களுக்கு அப்பால் கூடங்குளம் அணுசக்தி மின் நிலையம் இருக்கிறது. சொர்னோபில் பேரழிவு மற்றும் ஜப்பானின் புக்குசிமா அணுசக்தி மின்நிலையம் ஏற்படுத்திய பேரவலங்களையடுத்து அணுவைப் பயன்படுத்தி, மின் உற்பத்தி செய்யும் நாடுகள் உஷாரடைந்துள்ளன. ஜப்பானிலுள்ள அனைத்து அணுசக்தி மின் உற்பத்தி நிலையங்களையும் மூடுவதற்கான முயற்சிகளை ஜப்பானிய அரசாங்கம் முன்னின்று செயற்படுத்தி வருகிறது.

கூடங்குளம் அணுசக்தி மின்நிலையத்தின் முதலாவது கட்ட நிர்மாண வேலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு [illegible]கின்றன. இங்கு விரைவில் பரிசோதனைகள் நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன. அணுசக்திப் பேரழிவொன்று ஏற்படுத்துவதற்கு முன்னர் முற்பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்புக்கள் ஏற்கனவே வலியுறுத்தத் தொடங்கிவிட்டன.

அணுசக்தி மின்நிலையத்தில் பாவிக்கப்படும் இரசாயனப் பொருட்கள் சுமார் முப்பது வருடங்களுக்கு இருக்கக் கூடியவை என்று சுற்றுச்சூழல் அமைச்சின் முன்னாள் ஆலோசகரும் இலங்கை விஞ்ஞானியுமான கலாநிதி ஜானக ரத்னசிறி தெரிவித்தார். மனிதனின் தவறு காரணமாகவோ அல்லது வேறெந்தக் காரணங்களுக்காகவோ அணுசக்திப் பேரழிவு நிகழுமென்றால், அணுக்கள் மட்டுமல்ல இரசாயனப் பொருட்களும் வானவெளியில் கலந்து பல பரம்பரைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய சாத்தியங்களும் இருப்பதாக அவர் தெரிவித்தார். இலங்கைக்கு அண்மையில் கூடங்குளம் அணுமின் சக்தி நிலையம் இருப்பதனால் எமது நாட்டிலுள்ளவர்களுக்கும் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்துமென்று அவர் எச்சரித்துள்ளார்.




கூடங்குளம் அணுமின்நிலையத்தில் ஏதாவது விபத்து ஏற்படுமென்றால் இலங்கை நேரடியாகப் பாதிக்கும் என்று சூழலியலில் அக்கறையுள்ள சட்டத்தரணி ஜகத் குணவர்த்தன தெரிவித்தார். 2004ஆம் ஆண்டு சுனாமி கடல் சீற்றத்தின்போது கூடங்குளம் அணுமின்நிலையம் இருக்கும் பகுதியும் பாதிக்கப்பட்டது. அந்த அணுமின் சக்தி நிலையத்திலிருந்து அணுக்கதிர்க்கசிவு ஏற்பட்டால் அது இலங்கையையும் பாதிக்கும் என்று அவர் கூறினார்.

இருந்தாலும் இந்த அணு மின்சக்தி நிலையத்தினால் பாதிப்புக்கள் ஏதாவது ஏற்படக் கூடிய ஆபத்துக்கள் உண்டா என ஆராய தமிழக மாநில அரசாங்கம் நியமித்த நிபுணர்கள் கமிட்டி இதற்கு பச்சைக் கொடி காட்டியிருக்கிறது. இதனையடுத்து சென்னை மேல் நீதிமன்றமும் கூடங்குளம் அணுமின்சக்தி நிலையத்தின் முதலாம் இரண்டாம் பிரிவுகளை இயக்க வைக்கலாமென்று தெரிவித்திருக்கிறது.

தமிழக அரசு நியமித்த நிபுணர்கள் கமிட்டியின் அறிக்கை நம்பத்தகுந்தது அல்ல என்று நிராகரிப்பதற்கு எவ்வித காரணமுமே இல்லையென்று சொன்னா மேல்நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது.

இந்தத் திட்டத்திற்கான ஒப்பந்தம் 1988ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சோவியத் ரஷ்யாவுக்கும் இந்தியாவுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்டது. அப்போதைய சோவியத் ரஷ்ய அதிபர் மிக்கேய்ல் கொர்பச்சேவும், இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தியும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். 1991ஆம் ஆண்டு சோவியத் ரஷ்யா பல நாடுகளாகப் பிரிவதற்கு முன்னதாகவே அங்கு அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டு விட்டன. இதனால் சுமார் பத்து வருடங்களாக இந்த திட்டம் கிடப்பில் போடப்பட்டிருந்தது. அத்துடன் அமெரிக்காவும் இத் திட்டத்துக்குக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது. பின்னர் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. 2008ம் ஆண்டு இந்த மின்சக்தி நிலையத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

ஜப்பானிய புக்குசிமா அணுசக்தி நிலையத்தில் கடந்த வருடம் மார்ச் மாதம் பேரழிவு ஏற்பட்டது. இதனையடுத்து கூடங்குளம் அணுமின்சக்தி நிலைய வேலைகள் நிறுத்தப்பட வேண்டுமென்று தமிழ் நாட்டில் எதிர்ப்புக்குரல் கிளம்பியது. அணு மின் சக்திக்கெதிரான மக்கள் இயக்கம் என்ற அமைப்பு தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்துச் சென்றது. இந்த அணுமின் சக்தி நிலைய நிர்மாணத்துக்கு எதிராக இந்தியாவிலேயே இரண்டு வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

இலங்கை இத்தனை வருடங்களாக அமைதியாக இருந்து விட்டு இப்போதுதான் ஆபத்தென கூப்பாடு போடுவது சிலருக்குச் சந்தேகங்களை எழுப்பலாம். ஆனால் அணுக்கதிர் கசிவு ஏற்படும் பட்சத்தில் யுரேனியம் கடல் நீருக்குள் கலக்கக்கூடிய ஆபத்து இருப்பதாக நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இதனால் கடல்வாழ் உயிரினங்களுக்கு மட்டுமல்ல மனிதர்களுக்கும் ஆபத்து ஏற்படக்கூடிய சூழ்நிலை நிறையவே உள்ளன. அதிலும் இலங்கை பாதிக்கக்கூடிய நிலைமைகள் நிறையவுள்ளன.

(செல்வி பிரியங்கனி சிவனேஸ்வரன்)

# கழுகுக் கண்கள்

இந்து சமுத்திரத்தின் மீது நான் நிம்மதியாக பறந்து கொண்டிருந்தேன். அப்போது கண்ட காட்சிகளை உங்களுக்கு எடுத்துரைக்க விரும்புகிறேன்.

நான்கு திசையிலும் கடலால் சூழப்பட்டிருக்கும் இலங்கை நல்ல மண் வளம் பெற்ற நாடாக விளங்குவதனால் எவ்வளவுதான் வரட்சி ஏற்பட்டாலும், எங்கள் நாட்டில் நெல் விளைச்சல் திருப்திகரமான அளவுக்கு இருக்கிறது. இந்த தடவை வரட்சியினால் நெற்சாகுபடி பெருமளவில் பாதிக்கப்பட்டாலும் இன்றும் கூட நாம் அரிசி உற்பத்தியில் தன்னிறைவைப் பெற்றுள்ளோம்.

விவசாயத்திற்கு அடுத்தபடியாக இலங்கையை சூழ்ந்துள்ள ஆழ்கடல் மீன்வளம்மிக்க பிரதேசமாக இருக்கின்றது. வெளிநாட்டு மீனவர்கள் எங்கள் கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்து மீன்வளத்தை சூறையாடி செல்கின்ற போதிலும், நாம் பெருமளவு மீனை உற்பத்தி செய்து, எங்கள் நாட்டு மக்களுக்கு நியாய விலைக்கு இந்த போஷாக்குணவை பெற்றுக்கொடுக்கிறோம்.

மலையகத்திலும் கரையோரப் பிரதேசத்திலும் காசுப் பயிர்ச் செய்கைகளான தேயிலை, இறப்பர், தெங்கு உற்பத்தி இன்றும் திருப்திகரமாக இருந்து வருகின்றது. இலங்கை தொடர்ந்தும் உலக நாடுகளுக்கு தேயிலையையும், இறப்பரையும் ஏற்றுமதி செய்து பெருமளவு வெளிநாட்டு செலாவணியை தேசிய பொருளாதாரத்தை வளப்படுத்துவதற்கு பெற்றுக்கொடுக்கின்றது. அதே வேளையில் தேங்காய் உற்பத்தியும் நாட்டில் பன்மடங்கு அதிகரித்துள்ளது.

இன்றைய அரசாங்கம் ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு தென்னம்பிள்ளை என்ற அடிப்படையில் அவற்றை இலவசமாக விநியோகிப்பதனால் இன்று தென்னை மரங்கள் நாட்டில் திரும்பிய இடமெல்லாம் காட்சியளிக்கின்றன. தேங்காய், உள்ளூர் மக்களின் சமையலுக்கு பிரதான உணவாக அமைவதுடன் அதன் மூலம் தேங்காய் எண்ணையையும் உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.

இலங்கையின் வெளிநாட்டு செலாவணியை பெருமளவு சம்பாதித்துக் கொடுக்கும் தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்கள் சிறந்த முறையில் நிறைவேற்றிக் கொண்டு வருகின்றன. காலநிலை மாற்றம், வரட்சி, வெளிநாட்டு சந்தை வாய்ப்பு வீழ்ச்சி போன்ற காரணங்களினால் இவற்றின் ஏற்றுமதியில் சற்று வீழ்ச்சி காணப்பட்டாலும் எங்கள் நாட்டின் தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்கள் இன்னும் வெளிநாட்டு சந்தையில் நல்ல வரவேற்பை பெற்று வருகின்றன.

நம்நாட்டவர்கள் மத்திய கிழக்கு நாடுகள் உட்பட வெளிநாடுகளுக்கு சென்று தங்கள் உதிரத்தை வியர்வையாக வெளியேற்றி கடுமையாக உழைத்து மாதா மாதம் அங்கிருந்து வெளிநாட்டு செலாவணியை அனுப்பி வைப்பதன் மூலம் எங்கள் தாய் நாட்டின் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்று வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கைப் பிரஜைகளே நாட்டுக்கு தேவையான ஆகக்கூடுதலான வெளிநாட்டு செலாவணியை பெற்றுக் கொடுக்கும் சாதனையை ஏற்படுத்தியுள்ளார்கள். அத்துடன் ஆடைத் தயாரிப்பு தொழிலும் நல்ல வெளிநாட்டு வருமானத்தை நாட்டுக்கு பெற்றுக் கொடுக்கிறது.

இன்றைய நவீன உலகில் அனைத்தையும் வெற்றி கொள்ளக்கூடிய வகையில் உல்லாசப் பயணத்துறை வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது. நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்று இலங்கையின் நீலக்கடற்கரையில் நீந்தி விளையாடியும், வெயிலில் காய்ந்தும் பொழுதை ரம்யமாக போக்குவதில் ஆர்வம் கொண்டுள்ள வெளிநாட்டவர்களின் வருகை இப்போது பன்மடங்கு அதிகரித்துள்ளது. ஒரு நாடு பொருளாதாரத் துறையில் அபிவிருத்தி அடைய வேண்டுமானால் அந்த நாட்டில் வெறுமனே ஹோட்டல்களும், கட்டிடங்களும் இருந்தால் போதாது. வெளிநாட்டவர்கள் விரும்பிய நேரத்தில் நாட்டின் எந்தவொரு பகுதிக்கும் ஒரு நொடிப்பொழுதில் செல்வதற்கு வசதியான சிறந்த நெடுஞ்சாலைகள் இருப்பது அவசியம். அந்தப் பணியை அரசாங்கம் இப்போது சிறப்பாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

இலங்கையில் ஒரே நாளில் பல சீதோஷ்ண நிலைகளை ஒருவர் அனுபவிக்கலாம். தென்னிலங்கையில் இடையிடையே மழை பெய்யும் காலநிலையும் அதையடுத்துள்ள மத்துகமை, இரத்தினபுரி பிரதேசங்களில் ஓரளவு குளிர்மையான காலநிலையும் பின்னர் கொழும்பில் இருந்த சுமார் 4 மணித்தியாலங்கள் வாகனத்தில் சென்றடையக்கூடிய இலங்கையின் இங்கிலாந்து என்றழைக்கப்படும் மலை உச்சியில் அமைந்திருக்கும் நுவரெலியாவும் இருக்கின்றது.

இங்கு வரும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளில் பெரும்பாலானோர் ஜப்பான், ஜேர்மனி, அமெரிக்கா, ரஷ்யா, லத்தின் அமெரிக்கா, சீனா போன்ற நாடுகளைச் சேர்ந்த கோடீஸ்வரர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு ஐந்நூறு நாட்கள் மாத்திரமே இலங்கையில் தங்கியிருந்து தங்கள் குறுகிய கால விடுமுறையை அனுபவிக்கும் வாய்ப்பு இருக்கிறது.

ஐந்நூறு நாட்களில் வாகனம் மூலம் இலங்கை முழுவதையும் சென்று பார்ப்பது கடினமான காரியமாகும். இதனை உணர்ந்து அரசாங்கம் இந்த வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் விமானம் மூலம் நாட்டின் நாலா பக்கங்களுக்கும் ஓரிரு மணித்தியாலங்களில் சென்று பார்த்து திரும்புவதற்கு வாய்ப்பளிப்பதற்காக உள்ளூரில் சிவில் விமான நிலையங்களை சீரமைத்து வருகின்றது.

மட்டக்களப்பில் உள்ள இராணுவ விமான நிலையத்தை 820 மில்லியன் ரூபா செலவில் ஒரு நவீன விமான நிலையமாக மாற்றும் திட்டத்திற்கான நிர்மாணப் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. இதன் விமான ஓடு தரை 3,500 அடி நீளமாகும்.


இதுபோன்று அரசாங்கம் புத்தளம், இரத்மலானை, கொக்கலை, சீகிரிய, கண்டி, நுவரெலியா, யாழ்ப்பாணம், திருகோணமலை, அம்பாறை ஆகிய பிரதேசங்களிலும் ஏற்கனவே உள்ள விமான நிலையங்களை விஸ்தரித்தல் அல்லது புதிய விமான நிலையங்களை அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் செய்து முடிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இத்தகைய முயற்சிகளினால் எங்கள் தேசம் விரைவில் உல்லாசப் பயணிகளின் சொர்க்கப்புரியாக மாறிவிடுவதை பார்த்து கழுகுக் கண்கள் நிச்சயம் மகிழ்ச்சியடையும்.

# உலக பார்வை

# ஈரானை தாக்கினால் அமெரிக்க தளங்களைத் தகர்ப்போம்

## ஹிஸ்பொல்லா



ஈரான் இரகசியமாக அணு ஆயுதங்களை தயாரித்து வருவதாக அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகள் குற்றம் சுமத்தி வருவதுடன், பல்வேறு தடைகளையும் விதித்துள்ளது.


இந்நிலையில் லெபனான் ஈரானியர்கள் ஆதரவுடன் செயல்பட்டு வரும் ஹிஸ்பொல்லா தீவிரவாத அமைப்பின் தலைவர் நஸ்ரல்லா கூறுகையில், ஈரான் நாட்டு அணு மின் திட்டங்களுக்கு எதிராக இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால், மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்களை தாக்குவோம்.

பதிலடி கொடுப்பது குறித்து முடிவு எடுத்து இருக்கிறோம். தாக்குதல் மிகக் கடுமையாக இருக்கும்.

இஸ்ரேல் ஈரான் மீது குறிவைத்தால், அமெரிக்க அதன் பொறுப்பை ஏற்க வேண்டியிருக்கும். ஈரானின் அணுத் திட்டங்களை அணு ஆயுத திட்டமாக கூறி வரும் அமெரிக்காவிற்கும் இஸ்ரேலுக்கும் இடையே கருத்து வேறுபாடு உள்ளது.

என்னைப் பொறுத்தவரை இஸ்ரேல் ஒரு எதிரி நாடல்ல, ஆனால் சமீபகாலமாக ஈரானுக்கு எதிராக பேசி வருவது ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்துள்ளார்.

# பணத்திற்காக 10வது கணவனை எரித்துக் கொன்ற அமெரிக்க பெண்



இன்சூரன்ஸ் பணத்திற்காக 10 ஆவது கணவனை எரித்துக் கொன்ற அமெரிக்க பெண்ணுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள ஜில்மர் பகுதியைச் சேர்ந்தவர் ஷரோன் மேக்ஸ்வெல் (வயது-44).

இவர் ஏற்கனவே ஒன்பது முறை திருமணமாகி, விவாகரத்து பெற்றவர். இவரது 10வது கணவர் கார்டன் மேக்ஸ்வெல். இவர் 1.75 இலட்சம் அமெரிக்க டொலருக்கு இன்சூரன்ஸ் செய்திருந்தார்.

மற்றொரு நபருடன் கள்ள உறவு வைத்திருந்ததை அறிந்த மேக்ஸ்வெல், ஷரோனை விவாகரத்து செய்ய திட்டமிட்டிருந்தார். கணவர் விவாகரத்து செய்வதற்கு முன்னதாக அவரை தீர்த்து கட்டி இன்சூரன்ஸ் தொகையை அபகரிக்கத் திட்டமிட்டார் ஷரோன்.

எனவே கடந்தாண்டு ஆகஸ்ட் மாதம் ஓரி நகரில் காதலனுடன் சேர்ந்து மேக்ஸ்வெல்லை பெட்ரோல் ஊற்றி எரித்துக் கொன்றார் ஷரோன்.

இது குறித்து பொலிசார் விசாரித்த போது தனது 19 வயது மகன் ஜேம்ஸ் கணவர் மேக்ஸ்வெல்லை துப்பாக்கியால் சுட்டுக் கொன்று தீ வைத்ததாக ஷரோன் நாடகமாடினார்.

சம்பவம் குறித்து பொலிசார் தீவிர விசாரணை நடத்தியதில் மேக்ஸ்வெல்லின் 1.75 லட்சம் டொலர் இன்சூரன்ஸ் பணத்துக்காக அவரை கொலை செய்த விடயம் அம்பலமானது. இதனையடுத்து ஷரோனைப் பொலிசார் கைது செய்தனர்.

இந்த வழக்கை விசாரி[illegible] ஜில்மார் மாவட்ட நீதிமன்றம் உள்நோக்கத்துடன் கணவனை கொலை செய்த ஷரோனுக்கு, ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பு கூறியது.

2042ஆம் ஆண்டு வரை அவர் பரோலில் வெளிவர முடியாது. அது மட்டுமல்லாது 10 ஆயிரம் டொலர் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

# உங்களது நண்பரை காப்பாற்றுங்கள், டோனி பிளேயருக்கு செய்ப் கடாபியின் காதலி உருக்கமாக வேண்டுகோள்



படுகொலை செய்யப்பட்ட லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி கடாபியின் மகன் செய்ப் கடாபிக்கு, இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் டோனி பிளேர் இரக்கம் காட்ட வேண்டும் என அவரது காதலி ஆர்லி வெய்னர்மேன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

லிபியாவில் போராட்டக்காரர்களால் சிறை வைக்கப்பட்டுள்ள செய்ப் கடாபிக்கு எதிராக விசாரணை நடந்து வருகிறது. அவருக்கு மரண தண்டனை கொடுக்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

செய்ப் அல் இஸ்லாம் கடாபி என்று அழைக்கப்படும் செய்ப்புக்கு நிறையக் காதலிகள் இருந்தனர். அவர்களில் கடைசிக் காதலி என்று அழைக்கப்படுபவர்தான் இந்த ஆர்லி. இவர் இஸ்ரேலைச் சேர்ந்த மொடல் அழகி.

செய்ப் கடாபிக்கும், இங்கிலாந்து முன்னாள் பிரதமர் டோனி பிளேருக்கும் இடையே நல்ல நட்பு இருந்தது. இதனால்தான் செய்ப்பின் உயிரைக் காப்பாற்ற டோனி பிளேர் உதவ வேண்டும் என்று அவருக்குக் கோரிக்கை விடுத்துள்ளார் ஆர்லி.

இதுகுறித்து அவர் கூறுகையில், டோனி பிளேருடன் மிக நெருக்கமாக பழகி வந்தவர் செய்ப். இருவரும் நல்ல நண்பர்களாக இருந்தவர்கள்.

எனவே தனது நண்பரைக் காக்க டோனி பிளேர் முன்வர வேண்டும். இது அவருக்கான நேரம். கடவுள் மீது நம்பிக்கை கொண்டவர் பிளேர், ஒரு நல்ல கிறிஸ்தவராக அவர் கஷ்டப்படும் தனது நண்பருக்கு உதவ முன்வர வேண்டும் என்றார் ஆர்லி.

செய்ப் லண்டன் பொருளாதாரப் பள்ளியில் 2007ஆம் ஆண்டு பிஎச்டி ஆய்வில் ஈடுபட்டிருந்த போது, அவருக்கு நிறைய அறிவுரைகளை வழங்கி கடிதம் எழுதியுள்ளார் பிளேர். அந்தக் கடிதத்தையும் ஆர்லி காட்டினார்.

ஆர்லியின் இந்தக் கோரிக்கை குறித்து இதுவரை பிளேர் தரப்பில் கருத்து ஏதும் தெரிவிக்கப்படவில்லை.



பிரித்தானிய நீச்சல் நட்சத்திரமான எல்லீ சிம்மன் லண்டன் பரா ஒலிம்பிக் போட்டியில் புதிய சாதனை படைத்து தனது இரண்டாவது தங்கப் பதக்கத்தினை பெற்றுக் கொண்டபோது வெற்றிக் களிப்பில் காணப்படும் பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன்.

# ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட இரகசிய தகவல்களை வெளியிட்டது ஏன்?

உயர் அதிகாரிகள் தன்னை சரியாக நடத்தவில்லை என்ற விரக்தியில், அமெரிக்காவின் முன்னாள் பாதுகாப்பு படை வீரர் மாட் பிஸ்சோனீட் ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட சம்பவம் குறித்த நூலை எழுதியதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதற்கிடையே இரகசியங்களை வெளியிட மாட்டேன் என்று பணியிலிருந்து விலகும் போது அளித்த உறுதிமொழியை மீறிவிட்டதால், சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாட் பிஸ்சோனீட்டுக்கு கடற்படையின் வழக்குரைஞர் நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

பாகிஸ்தானில் உள்ள அபோதாபாத்தில் அல்கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடன் கடந்தாண்டு மே மாதம் அமெரிக்க கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தத் தாக்குதலில் பங்கேற்ற மாட் பிஸ்சோனீட், மார்க் ஓவன் என்ற புனைப்பெயரில் "நோ ஈஸி டே" என்ற தலைப்பில் நூல் எழுதியுள்ளார்.

அதில் ஒசாமா கொல்லப்பட்ட சம்பவம் குறித்து அவர் விவரித்துள்ளார். இது கடற்படை அதிகாரப்பூர்வமாக வெளியிட்ட தகவலில் இருந்து மாறுபட்டதால், பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் முன்னாள் படை வீரர்கள் நடத்திவரும் இணையதளமொன்றில் பிஸ்சோனீட்டின் நூலுக்கு எதிராக "நோ ஈஸி ஆப்" என்ற பெயரில் இ-புக் திங்கள்கிழமை வெளியிடப்பட்டது.

பிஸ்சோனீட்டின் நூல் செவ்வாய்க்கிழமை வெளியாகவிருந்த நிலையில், அதற்கு ஒருநாள் முன்னதாக இணையதளத்தில் நோ ஈஸி ஆப் என்ற இ-புக்கை வெளியிட்டுள்ளனர்.

அதில் பிஸ்சோனீட் தனது குழுவிலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் விரக்தியடைந்த பிஸ்சோனீட், தான் வியாபாரத்தில் ஈடுபடப்போவதாகக் கூறி தனது பணியை ராஜிநாமா செய்தார்.

இதைத் தொடர்ந்து தனது நூலால் சர்ச்சை ஏற்படும் எனத் தெரிந்திருந்தும், இரகசியங்களை வெளியிட பிஸ்சோனீட் முடிவு செய்தார் என்று கூறப்பட்டுள்ளது.

ஒசாமா பின்லேடனை கொன்றதும், அந்த வெற்றியைக் கொண்டாட வெர்ஜினியா கடற்கரையில் அமைந்துள்ள பார் ஒன்றில் கூடிய பிஸ்சோனீட் உள்ளிட்ட வீரர்கள் மது அருந்தி ஆட்டம் போட்டனர். இதனால் அவர்கள் உயர் அதிகாரியின் கண்டிப்புக்கு ஆளாகினர் என்றும் அந்த இ-புக்கில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொலைக்காட்சி பார்த்ததற்காக பத்திரிகையாளரை தாக்கிய மர்ம நபர்கள்

பாகிஸ்தானில் வீட்டில் அமர்ந்து கொண்டு தொலைக்காட்சி பார்த்து கொண்டிருந்த ஆங்கில நாளிதழின் ஆசிரியர் தாக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

பாகிஸ்தானின் கராச்சி நகரில் குல்'ன்- இ- இக்பால் பகுதியில் வசிப்பவர் ஜயினுல் அபதீன், இவர் ஆங்கில நாளிதழின் ஆசிரியராக பணியாற்றி வருகிறார்.

கடந்த ஆகஸ்ட் மாதம் 27ஆம் திகதி இரவு 11 மணிக்கு வீட்டில் தொலைக்காட்சியில் பாடல்களை ரசித்துக் கொண்டிருந்தார்.

அப்போது நான்கு மர்ம நபர்கள் அபதீன் வீட்டின் வாசல் அருகே நின்றபடி, சத்தம் போட்டு அவரைத் திட்டிக் கொண்டிருந்தனர்.

சத்தம் கேட்டு வெளியே வந்த அபதீன் ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என விளக்கம் கேட்டார். அதற்கு அந்த நபர்கள் அவரை கடுமையாக தாக்கினர். தொலைக்காட்சி பார்க்கக் கூடாது, பாடல்கள் கேட்கக் கூடாது என்று கண்டித்தனர்.

என் வீட்டில் நான் சுதந்திரமாகச் செயல்படுவதை தடுக்க நீங்கள் யார்? என்று அபதீன் கேள்வி கேட்க, அவரின் முகத்தில் குத்து விட்டு, அவரின் மூக்கு கண்ணாடியை உடைத்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து உடனே பொலிசில் அபதீன் புகார் செய்துள்ளார். அபதீனை தாக்கியவர்கள் மதம் மாற்றும் குழுவைச் சேர்ந்தவர்கள் என கராச்சி பத்திரிகையாளர்கள் தெரிவித்தனர்.

# ஒபாமாவைக் கிண்டலடித்த நடிகர்



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவை வெறும் நாற்காலி எனக் குறிப்பிட்டு நடிகர் க்ளின்ட் ஈஸ்ட்வுட் கிண்டல் அடித்தது கடும் விமர்சனங்களைக் கிளப்பியுள்ளது.

ஹாலிவுட் ஜாம்பவான் க்ளிண்ட் ஈஸ்ட்வுட் சமீபத்தில் ஒரு கூட்டத்தில் பேசுகையில், வெறும் நாற்காலியை ஒபாமா எனக் குறிப்பிட்டு பேட்டி காண்பது போல நடித்துக் காட்டினார்.


அவரது இந்தப் பேச்சுக்கு ஒபாமாவின் ஜனநாயக கட்சி சார்பில் பலத்த கண்டனங்கள் வந்த வண்ணம் உள்ளன.

ஆனால் ஜனாதிபதி ஒபாமா இந்தப் பேச்சை சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை. அவர் குறிப்பிடுகையில், க்ளின்ட் ஈஸ்ட்வுட் அமெரிக்காவின் சொத்து. நான் மட்டுமல்ல, வெள்ளை மாளிகையில் உள்ள பலரும் அவரது தீவிர ரசிகர்களே.

அவரது பேச்சு என்னைப் புண்படுத்தவில்லை. அப்படி நினைத்தால் நான் வேறு வேலை பார்க்க வேண்டியிருக்கும் என்று கருத்து தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்ற முடக்கத்தால் கோடிக்கணக்கில் மக்களின் வரிப்பணம் வீணாகும் அவலம்

நாடாளுமன்ற முடக்கத்தால் தினசரி மக்களின் வரிப்பணத்தில் ரூ.2 கோடி வீணடிக்கப்படுவதாக நாடாளுமன்றச் செயற்பாட்டிற்கான ஆராய்ச்சித்துறை கணக்கிட்டுள்ளது.



கடந்த மாதம் 8ஆம் திகதி தொடங்கிய நடாளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத் தொடர் வரும் 7ம் திகதி வரை நடைபெற உள்ளது.

இதில் 15 நாட்களுக்கான அலுவல் அமர்வுகள் முடிவடைந்து விட்டன.

இவற்றில் மூன்று நாட் கள் மட்டுமே முழுமையான பணி கள் நடைபெற்றுள்ளன.

அந்த வகையில் மக்களவையின் 50 சதவீத அலுவலும், மாநிலங்களவையின் 62 சதவீத அலுவலும் நடப்புக் கூட்டத்தொடரில் பாதிக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளது.

கடந்த 1950ம் ஆண்டுகளில் ஆண்டுக்குக் குறைந்தபட்சம் 125 நாட்கள் அலுவல் நடைபெற்றதாகவும், 1970களில் அது 100 நாட்களாகக் குறைந்து, தற்போது 73 நாட்களாக மேலும் தேய்ந்து விட்டதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

2011 ம் ஆண்டு மே மாதம் முதல் கடந்த மே மாதம் வரை ஓராண்டு காலத்தில் மட்டும் 12 ஆயிரம் ஒத்தி வைப்புகளையும், 110 அமளிகளையும் இரு அவைகளும் சந்தித்திருப்பதாக நாடாளுமன்றச் செயல்பாட்டுக்கான ஆராய்ச்சித் துறை கணக்கிட்டுள்ளது.

# இந்திய செய்திகள்

## சட்ட சபையில் சட்டையை கிழித்து எம்.எல்.ஏ ரகளை

ஜார்கண்ட் மாநில சட்டசபையில் எதிர்கட்சி எம்.எல்.ஏ ஒருவர் தனது சட்டையை கிழித்து ரகளையில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

ஜார்கண்டில் நேற்று காலை தொடங்கிய சட்டசபை கூட்டத் தில் ஜார்கண்ட் விகாஸ் மோர்ச்சா கட்சி எம்.எல்.ஏ சமரேஸ் சிங் தன்னுடைய மேல்சட்டையை கிழித்து கொண்டு ரகளை செய்தார். இதனால் சட்ட சபையில் பரபரப்பு ஏற்பட்டதுடன் 1 மணி நேரம் சபை ஒத்திவைக்கப்பட்டது.


பின்னர் ஒரு மணி நேரத்திற்கு பிறகு சட்டசபை மீண்டும் கூடிய போது சமரேஸ் மீண்டும் அதே போன்று சட்டயை கிழித்து ரகளை செய்ததால் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது.



ஆசிரியர்கள் இடமாற்றம் குறித்து கொமிஷன் அமைக்க மற்றும் ராஞ்சியை அடுத்துள்ள நக்ரி கிராம மக்களிடம் பெறப்பட்ட நிலத்தை திரும்ப ஒப்படைத்தல் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி சமரேஸ் சிங் சட்டயை கிழித்து ரகளை செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஊழலுக்கு எதிரான அடுத்தகட்ட போராட்டம் எப்போது?

## முடிவு செய்கிறார் அன்னா ஹசாரே




ஊழலுக்கு எதிரான, அடுத்த கட்ட போராட்டத்தை, எங்கு, எப்போது நடத்துவது என, இம்மாத இறுதியில் முடிவு செய்கிறார், அன்னா ஹசாரே. இதுதொடர்பாக, கலைக்கப்பட்ட, அன்னா ஹசாரே குழுவின் முன்னாள் உறுப்பினரும், கர்நாடகா லோக் ஆயுக்தா கோர்ட் முன்னாள் நீதிபதியுமான,சந்தோ' ஹெக்டே கூறியதாவது:

அன்னா ஹசாரே, உடல் நலக் குறைவு காரணமாக, பெங்களூரில் இயற்கை மருத்துவ சிகிச்சை பெற்று வருகிறார். சமீபத்தில், அவரை சந்தித்து பேசினேன். அப்போது, அன்னா ஹசாரே குழு கலைக்கப்பட்டுள்ள நிலையில், ஊழலுக்கு எதிரான போராட்டங்களை, எங்கு, எப்படி நடத்துவது என்பது குறித்து, விரிவாக பேசினோம். இதன் அடிப்படையில், ஒருமித்த கருத்து உடையவர்கள் பங்கேற்கும் ஆலோசனைக் கூட்டத்தை, இந்த மாத இறுதிக்குள் கூட்டுவது என, முடிவெடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில், அன்னா ஹசாரே பங்கேற்பார். இதில், ஊழலுக்கு எதிரான போராட்டங்கள் குறித்தும், எதிர்கால திட்டங்கள் குறித்தும், விரிவாக ஆலோசனை நடத்தப்படும்.

கலைக்கப்பட்ட, அன்னா ஹசாரே குழுவில் இருந்தவர்களும், இதில் பங்கேற்பர். அவர்களை விலக்கி விட்டு, இந்த கூட்டத்தை நடத்த முடியாது என, ஹசாரே, என்னிடம் தெரிவித்தார். எதிர்காலத்தில், அரசியல் ரீதியாக செயல்படுவதா, இல்லையா என்பது குறித்தும், இந்த கூட்டத்தில் முடிவு செய்யப்படும். இவ்வாறு சந்தோஷ் ஹெக்டே கூறினார்.



குளச்சல் கடல் பகுதியில் ஏற்பட்ட கடல் சீற்றத்தில் சுனாமி போன்று பேரலைகள் எழுந்து துறைமுக பணிக்காக கட்டப்பட்டிருந்த தடுப்புச்சுவர் மற்றும் மண் அள்ளும் இயந்திரங்களை புரட்டி போட்டது.

# காவிரி நதிநீர் ஆணையம்: பிரதமர் அலுவலகத்திற்கு கண்டனம்

காவிரி நதிநீர் ஆணையம் தொடர்பான விடயத்தில் மத்திய அரசு மற்றும் பிரதமர் அலுவலகம் மிகவும் அலட்சியமாக செயற்படுவதாக உச்ச நீதிமன்றம் தனது கண்டத்தை தெரிவித்துள்ளது.



காவிரி ஆற்றிலிருந்து தமிழகத்திற்கு வந்து சேர வேண்டிய உரிய நீர் முறைப்படி வருவதில்லை. இதன் காரணமாக அப்பகுதிகளில் விவசாயத்தை நம்பி வாழும் மக்கள் கடும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர்.

எனவே காவிரி நதிநீர் ஆணையத்தை கூட்டி இரு மாநிலங்களுக்கு மத்தியில் ஒரு சமரச தீர்வு காண வழிவகை செய்ய வேண்டும் என்றும் காவிரியில் தமிழகத்துக்கு உரிய நீரைப் பெற்றுத்தர உத்தரவிடக் கோரியும் தமிழக அரசு தாக்கல் செய்த வழக்கு விசாரணை இன்று உச்சநீதிமன்றத்தில் வந்தது.

கர்நாடக அரசின் பதில் மனு மீது தமிழக அரசு தாக்கல் செய்த இணை மனுவை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதி, உடனடியாக காவிரி நதி நீர் ஆணையத்தைக் கூட்ட வேண்டும் என்று மத்திய அரசுக்கு உத்தரவிட்டும், இதுவரை காவிரி நதிநீர் ஆணையத்தைக் கூட்டுவதற்கான திகதியை மத்திய அரசு அறிவிக்காமல் உள்ளது கடும் கண்டனத்துக்கு உரியதாகும் என்றார்.

காவிரி நதிநீர் ஆணையத்தைக் கூட்ட மத்திய அரசு திகதி குறிக்காவிட்டால் உச்சநீதிமன்றமே திகதியை அறிவிக்க வேண்டியது வரும் என்றும் நீதிபதி கூறினார்.

மேலும் காவிரி நதிநீர் ஆணையம் தொடர்பான விடயத்தில் மத்திய அரசும் பிரதமர் அலுவலகமும் மிகவும் அலட்சியமாக செயற்படுவதாக தெரிவித்தனர்.

ஏற்கனவே கர்நாடக அரசு தாக்கல் செய்த மனுவில், காவிரி நதிநீர் விடயத்தில் பிரதமர் அலுவல கம்பல் இல்லாமல் செயற்படுகின்றது என சுட்டிக்காட்டியிருந்தது.

இதை கவனித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பிரதமர் அலுவலகத்தை நினைத்தாலே ரத்தக் கொதிப்பு வருவதாகவும் மக்களுடைய வாழ்வாதாரத்தில் கவனக் குறைவாக இருப்பதாகவும் தெரிவித்தனர்.

# நடிகர் ரஜினிகாந்த் படித்த பள்ளிக்கூடம் புதுப்பிப்பு

ரஜினிகாந்த் படித்த பள்ளியை புதுப்பிக்கும் விதமாக நவீன கட்டிடம் கட்டுவ தற்கான அடிக்கல் நாட்டு விழா பெங்களூரில் நடந்தது.



பெங்களூர், கவிப்புரம், குட்ட ஹள்ளியில் உள்ள அரசு தொடக்கப் பள்ளியில் நடிகர் ரஜினி காந்த் 7ம் வகுப்பு வரை கல்வி பயின்றார்.

மிகவும் பழமை வாய்ந்த இந்தப் பள்ளி கட்டிடத்தை புதுப்பிக்குமாறு ரஜினி ரசிகர்கள், மூத்த கன்னட நாடகக் கலைஞர் மாஸ்டர் ஹீரணையா, ரஜினியுடன் படித்த அர்ச்சகர் சோமசுந்தர தீட்சிதர் உட்பட பலர் அம்மாநில அரசிடம் பல முறை கோரிக்கை வைத்தனர்.

இந்நிலையில், கர்நாடக மாநில பசவனகுடி தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் ரவிசுப்பிரமணியனின் முயற்சியால் பள்ளியின் பழைய கட்டிடத்தை இடித்துவிட்டு ரூ.1.67 கோடியில் அதிநவீன கட்டிடம் கட்ட அரசு முன்வந்துள்ளது.

இதற்கான அடிக்கல் நாட்டு விழாவில் கர்நாடக துணை முதல்வர் ஆர். அசோக் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினார்.

அடிக்கல் விழாவில் கலந்து கொண்ட போது அவர் பேசியதாவது, மூத்த நாடகக் கலைஞர் மாஸ்டர் ஹீரணையா மற்றும் ரவி சுப்பிரமணியனின் பெரும் முயற்சியால் இப்போது இந்தப் பள்ளி அதிநவீன முறையில் கட்டப்படுகிறது.

இந்த தொடக்கப் பள்ளி கர்நாடகத்தில் உள்ள அரசு பள்ளிகளுக்கு முன்மாதிரியாகத் திகழும் படி கட்டப்படும்.

இதில் படிக்கும் ஏழைகள், கூலித் தொழிலாளர்களின் குழந்தைகளும் நடிகர் ரஜினி காந்தைப் போல உயர்ந்த இடத்திற்கு வரவேண்டும்.

அது மட்டுமல்லாது நாட்டின் பிரதமராக, மாநிலத்தின் முதல்வராக, மக்களவை, சட்டப்பேரவை உறுப்பினர்களாக வந்து நாட்டின் பெருமையைக் காப்பாற்ற வேண்டும் என்று வாழ்த்துகிறேன் என்றார்.

# ருவென்ரி – 20 உலகக் கிண்ணம் இலங்கைக்கே வாய்ப்பு – சங்கக்கார

இலங்கையில் இடம்பெறவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடரில் வெற்றிபெறுவதற்கான வாய்ப்பு இலங்கை அணிக்குக் காணப்படுவதாக இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார். பெரிய தொடர்களில் சிறப்பாகச் செயற்படும் இயல்பு காரணமாக இலங்கை அணியும் வெற்றிபெறக்கூடிய அணிகளுள் ஒன்றாகக் கருதப்படுவதாக அவர் தெரிவித்தார்.

மிகப்பெரிய தொடர்களில் இலங்கை அணி எப்போதும் சிறபபாகச் செயற்பட்டு அதிக போட்டித்தன்மையுடன் பங்குபற்றியுள்ளதாகத் தெரிவித்த குமார் சங்கக்கார, மிகப்பெரிய தொடர்களில் அணியாக இணைந்து செயற்படுவதில் இலங்கை அணி எப்போதும் முன்னிலையில் காணப்பட்டதாகத் தெரிவித்தார். எப்போதும் இலங்கை அணி வீரர்கள் தங்கள் திறமைகளில் நம்பிக்கை வைத்து விளையாடினால்



இலங்கை அணிக்கு அதிக வாய்ப்புக்கள் காணப்படுவதாகத் தெரிவித்தார்.

இலங்கையில் அண்மைக்காலமாக ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சாளர்களுக்குச் சாதகமாக மாறி வருவது இலங்கை அணிக்குப் பாதமாக அமையாதா எனக் கேட்கப்பட்டமைக்கு, இலங்கை அணி முன்பைப் போல் சுழற்பந்து வீச்சைப் பிரதானமாக நம்பிக் காணப்படவில்லை எனத் தெரிவித்த குமார் சங்கக்கார, இலங்கை அணியில் தற்போது வேகப் பந்துவீச்சாளர்களே இலங்கை அணியின் பிரதான பந்துவீச்சாளர்களாக மாறியுள்ளார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

எனினும் சொந்த நாட்டில் ஆடுவது என்பது குறித்த நாட்டிற்குச் சாதகமான ஆடுகளங்களை உருவாக்குவது மாத்திரமல்ல எனத் தெரிவித்த குமார் சங்கக்கார, சொந்த நாட்டில் விளையாடும் உணர்வு. சொந்த நாட்டு மக்களின் ஆதரவும் அன்பும் போன்றவையும் முக்கியமானவை என அவர் தெரிவித்தார்.

தற்போதைய காலகட்டத்தில் சொந்த அணிக்கு குறித்த வகையிலான விக்கெட்டுக்கள் வேண்டும் எனக் கேட்டு ஆட முடியாது எனத் தெரிவித்த குமார் சங்கக்கார, கிடைக்கும் ஆடுகளங்களில் சிறப்பாகச் செயற்படுவதே முக்கியமானது எனத் தெரிவித்த குமார் சங்கக்கார, சொந்த நாட்டில் உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடரில் விளையாடுவது இலங்கைக்கு அதிக சாதகமானது எனத் தெரிவித்தார்.

# அண்ணனுக்கு சிவப்பு அட்டை அதனை கிழித்தெறிந்தார் தம்பி

**வலிகாமம்**

பருத்தித்துறையில் இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் வீரர் ஒருவர் தாக்கப்பட்டமைக்காக சிவப்பு அட்டை அண்ணனுக்கு காட்டியதைத் தொடர்ந்து தம்பி மத்தியஸ்தரின் சிவப்பு அட்டையை கிழத்தெறிந்த சம்பவம் திங்கள் கிழமை பிற்பகல் இடம்பெற்றது.

வடமராட்சி கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

வதிரியைச்சேர்ந்த டயமன்ஸ் விளையாட்டக்கழகத்திற்கும் பொம்பேர்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே இடம்பெற்ற போட்டி முடிவடைய ஒரு சில நிமிடங்கள் இருக்கும் நிலையில் டயமன்ஸ் விளையாட்டுக் கழக வீரர் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து குழப்பம் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# அளவெட்டி மத்தியவிளையாட்டுக் கழக மென்பந்தாட்ட சுற்றுப்போட்டி

**தெல்லிப்பழை**

அளவெட்டி மத்தியவிளையாடடுக்கழகம் வடமாகாண ரீதியில் மிகப்பிரமாண்டமாக நடாத்தும் மென்பந்தாட்டசுற்றுப்போட்டி எதிர்வரும் 8,9,15,16,22 ஆம் திகதிகளில் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.


40 கழகங்களுக்கு மேல் பங்குபெறும் இத்தொடரில் 40 கழகங்களும் A,B,C,D என நான்கு குழுக்களாகப்பிரிக்கப்பட்டுள்ளன. யு,ட குழுக்களுக்கான போட்டிகள் 8, 9 ஆம் திகதிகளிலும் C,D குழுக்களுக்கான போட்டிகள் 15, 16 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளது. இத்தொடரில் பங்குகொள்ளும் அணிகள் குறித்த நேரத்தில் போட்டிகளுக்கு வருகை தந்து போட்டிகளை குறிப்பிட்ட காலத்தில் நடாத்திமுடிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# பீற்றர்சனுக்கு சகவீரர்கள் ஆதரவு

இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் பீற்றர்சனை மீண்டும் சேர்க்க வேண்டுமென்று அந்த அணியின் துடுப்பாட்ட வீரர்களான மோர்கன், ரவி போபாரா ஆகியோர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இங்கிலாந்து அணியின் பயிற்சியாளர் அன்டி பிளவர், டெஸ்ட் அணித்தலைவர் ஆண்ட்ரூ ஸ்டிராஸ் ஆகியோரை ஏளனம் செய்து தென்னாப்பிரிக்க வீரர்களுக்கு பீட்டர்சன் எஸ்.எம்.எஸ் அனுப்பியது தெரியவந்தது. இதையடுத்து அவர் அணியில் இருந்து நீக்கப்பட்டார். பின்னர் தனது செயலுக்காக அணி நிர்வாகத்திடம் பீற்றர்சன் மன்னிப்புக் கேட்டார். இருந்தபோதிலும் அவர் அணியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை, இதனிடையே அணித்தலைவர் ஸ்டிராஸம் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்கள் மோர்கன், ரவி போபாரா ஆகியோர், "இங்கிலாந்து அணிக்காக பீற்றர்சன் மீண்டும் விளையாட வேண்டுமென்றுதான் அனைவரும் விரும்புவார்கள். அவர் சிறந்த வீரர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எனவே அவர் மீண்டும் அணியில் சேர்த்



துக் கொள்ளப்படுவார் என்ற நம்பிக்கை உள்ளது" என்றனர்.

# கரப்பந்தாட்ட சாதனைகள், வெற்றிகள் அடங்கிய மலர் வெளியீடு

**தெல்லிப்பளை**

யாழ்மாவட்ட கரப்பந்தாட்டச்சங்கம் இதுவரை காலம் யாழ் மாவட்டத்தில் நடைபெற்ற கரப்பந்தாட்ப்போட்டிகளில் நிலைநாட்டிய சாதனைகள் மற்றும் அணிகள் பெற்ற வெற்றிகள் தொடர்பான தகவல்கள் அடங்கிய மலர் ஒன்றை வெளியிடவுள்ளது.

இதற்காக யாழ்மாவட்ட கரப்பந்தாட்டச்சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களிடம் இருந்து தமது அணிகள் நிலைநாட்டிய சாதனைகள், வெற்றிகள் போன்ற விபரங்களை யாழ்மாவட்ட கரப்பந்தாட்டச்சங்க செயலாளர் சு. சுரேஸ்குமாருக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

# 2 மாதம் ஆடமாட்டேன்-நடால்

சர்வதேச ரென்னிஸ் போட்டிகளில் பல கிராண்ட்ஸ்லம் பட்டங்களை குவித்து ஸ்பெயினின் ரபேல் நடால் உலகின் முன்னணி வீரராக திகழ்ந்து வருகிறார்.

இடது முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் அது முதல் ஒலிம்பிக் போட்டி உட்பட எந்த போட்டியிலும் கலந்து கொள்ளவில்லை. மருத்துவர்களிடம் சிகிச்சை பெற்று வருகிறார். இந் நிலையில் நடால் கூறுகை யில், இன்னும் 2 மாதம் எனக்கு ஓய்வு தேவைப்படுகிறது -எனக் கூறியுள்ளார்.

# மன்னிப்புக் கேட்டார் பிஸ்டோரியஸ்

பராலிம்பிக் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற "பிளேடுரன்னர்" பிஸ்டோரியஸ், தங்கம் வென்ற ஆலிவர் குறித்த தனது கருத்துக்கு மன்னிப்பு கேட்டுக் கொண்டார்.

லண்டனில் மாற்றுத்திறனாளிகளுக்கான 14ஆவது பராலிம்பிக் போட்டி நடக்கிறது. இதன், 200 மீற்றர் ஓட்டத்தில் கடந்த 2008 பீஜிங்கில் தங்கம் வென்ற தென்னாரிக்காவின் ஓஸ்கர் பிஸ்டோரியஸ் தங்கம் வெல்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது. மேலும், இவர் நடந்து முடிந்த ஒலிம்பிக் போட்டியிலும் பங்கேற்றிருந்தார்.

இதற்கேற்ப இறுதிச்சுற்றில், பிஸ்டோரியஸ் தொடக்கத்திலிருந்தே முன்னிலையில் வந்து கொண்டிருந்தார். கடைசி சில வினாடிகளில் முந்திய பிறேசிலின் ஆலிவெய்ரா (21.45 வினாடி) முதலிடம் பெற்று தங்கம் ,வெல்ல, மைதானமே அதிர்ச்சியில் உறைந்தது.0.07 வினாடி தாமதமாக வந்த பிஸ்டோரியஸ், வெள்ளி பதக்கம் கைப்பற்றினார். அமெரிக்கா



வின் லீபெர் வெண்கலம் வென்றார்.

இதுகுறித்து பிஸ்டோரியஸ் கூறுகையில், ஆலிவெய்ராவின் செயற்கை கால், வழக்கத்துக்கு மாறாக சற்று நீளமாக இருந்தது. இதை சர்வதேச பராலிம்பிக் சபை கண்டு கொள்ளவில்லை என்று கூறினார். இதனால் இவருக்கு 5000 யூரோ அபராதம் விதிக்கப் பட்டது.

தற்போது தனது கருத்துக்கு மன்னிப்பு கேட்டுள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், எந்த வீரரின் திறமையையும் குறைத்து மதிப்பிட விரும்பவில்லை. தோல்வியடைந்த நேரத்தில் தெரிவித்த கருத்துக்கு மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன் - என்றார்.

# தொடரை வென்றது அவுஸ்திரேலியா

ஐக்கிய அரபு எமிரேட்ஸிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணிக்கும், பாகிஸ்தான் அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் 3ஆவது போட்டியில் அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்றுள்ளது. இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரையும் அவ்வணி 2-1 என்ற கணக்கில் வெற்றிகொண்டுள்ளது.

ஷார்ஜா மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் களத் தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 244 ஓட்டங்களைப் பெற்றது. மிகச்சிறந்த ஆரம்பமாக 129 ஓட்டங்களை முதலாவது விக்கெட்டுக்காகப் பகிர்ந்த பாகிஸ்தான் அணி சார்பாக மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாகச் செயற்படாததன் காரணமாக இன்னமும் அதிகமான ஓட்டங்களை பாகிஸ்தான் அணியால் பெற முடியாது போனது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக மொஹமட் ஹபீஸ் 97 பந்துகளில் 78 ஓட்டங்களையும், நசீர் ஜம்ஷெத் 75 பந்துகளில் 48 ஓட்டங்களையும், அ'ார் அலி 30 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களையும், அசத் சபீக் 35 பந்துகளில் 27 ஓட்டங்களையும், மிஸ்பா உல் ஹக் 39 பந்துகளில் 25 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.



பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக மிற்சல் ஸ்ரார்க் 51 ஓட் டங்களுக்கு 4 விக் கெட்டுக்களையும், மிற்சல் ஜோன்சன் 33 ஓட்டங் களுக்கு 2 விக்கெட்டுக்களையும், மைக்கல் கிளார்க் 3 ஓட்டங்க ளுக்கு ஒரு விக்கெட்டையும் கைப் பற்றினர்.

245 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 47 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. முதலாவது விக்கெட்டுக்காக 44 ஓட்டங்களைப் பகிர்ந்த அவுஸ்திரேலிய அணி அதன் பின்னர் ஒரு கட்டத்தில் 5 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறிய போதிலும், மைக்கல் ஹசி, கிளென் மக்ஸ்வெல் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் உதவியுடன் அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்றது.

துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய அணி சார்பாக மைக்கல் ஹசி 72 பந்துகளில் 65 ஓட்டங்களையும், கிளென் மக்ஸ்வெல் 38 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 56 ஓட்டங்களையும், ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய டேவிட் ஹசி 45 பந்துகளில் 43 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக சயீட் அஜ்மல் 37 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், அப்துர் ரெஹ்மான் 41 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்க ளையும், ஜுனைட் கான் 42 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக அவுஸ்திரேலிய அணியின் மைக்கல் ஹசியும், போட்டித் தொடரின் நாயகனாக அவுஸ்திரேலிய அணியின் மிற்சல் ஸ்ரார்க் உம் தெரிவாகினர்.

இரு அணிகளுக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ருவென்ரி-20 தொடரின் முதலாவது போட்டி இன்று ஆரம்பிக்கவுள்ளது.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 05.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது